

கல்கி
KALKI ஜூன் 22, 1952
4 அணா







# நீங்கள் எங்கிருந்தாலும்...

# ஹிமாலயா புக்கே ஸ்நோ

## உபயோகியுங்கள்.

ஏனென்றால் இது பிரத்தியேகமாக இந்தியாவின்
சீதோஷ்ணத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டது

சீதோஷ்ண நிலை எப்படி இருந்தாலும்—இந்தியாவில் நீங்கள் எங்கிருந்தாலும், ஹிமாலயா புக்கே ஸ்நோ உங்கள் சருமத்தை அதிக மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்கிறது. இதன் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்.

இன்னுமொரு நேர்த்தியான இராஸ்மிக் நட...ப்பு


HBS 6A-X30 TM    இராஸ்மிக் கம். லிட். லண்டனுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

# கல்கி பொருளடக்கம்


மலர் 11 இதழ் 47 | 1952 ஜூன் 22 | நந்தன ஆனி 9



| | | | |
|---|---|---|---|
| "இரண்டும் இரண்டும் ஐந்தேகால்!" | (தலையங்கம்) | ... | 3 |
| தஞ்சைக்கு விமோசனம் (?) | ... | ... | 4 |
| அவசரப்படேல்! | (கார்ட்டூன்) | ... | 4 |
| புது மாகாணக் கமிட்டி உறக்கம் | ... | ... | 5 |
| கோட்டை விடாதீர்கள்! | ... | ... | 6 |
| பூமிக்குள் புதையல் | (அட்டைப்பட விளக்கம்) | ... | 6 |
| பரிசுக் காளைகள்! | ... | ... | 7 |
| வட்டமேஜை | ... | ... | 8 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 9 |
| மனோரதம் | பகீரதன் | ... | 19 |
| யாருக்கு அரசுரிமை? (பாப்பா மலர்) | பி. எஸ். எம். | ... | 22 |
| தமிழ்க் களஞ்சியம் | டி. கே. சி. | ... | 24 |
| சந்திப்பு | கி. ரங்கராஜன் | ... | 27 |
| படித்துப் பாருங்கள்! | ... | ... | 30 |
| தந்தையும் மகனும் | எஸ். கிருஷ்ணன் | ... | 33 |
| அருவிக்கரை ஆசிரமம் | சுதர்சன்—ரா. வீ. | ... | 39 |
| சித்தப்பா | எஸ். டி. ஸ்ரீனிவாசன் | ... | 44 |
| கோமதி | சகுந்தலா தேவி—வாஞ்சி | ... | 49 |
| அலமுவின் அதிர்ஷ்டம் | ஸ்ரீசுதன் | ... | 55 |
| ஆரோக்கிய ரகசியம் | வி. என். குமாரசாமி | ... | 62 |
| விற்பனை ரகசியம் | ஜகந்நாதன் | ... | 66 |
| பூகம்பம் | எஸ். ஆர். | ... | 67 |




விற்பனையாளர்கள் :

**கமானி என்ஜினியரிங் கார்ப்பொரேஷன் லிமிடெட்**
நெ. 2, ஜோன்ஸ் தெரு, பிராட்வே, மதராஸ்-1

ஸ்டாக்கிஸ்டுகள் : காமினேனி பார்மிங் கார்ப்பொரேஷன், வராகப்பட்டணம் & குடிவாடா; S. பாபண்ணா செட்டி, ஜான்பேட்; சுந்தரம் சன்ஸ், 42, கிருஷ்ணராயன் குளத் தெரு, மதுரை; பார்மிங் மிஷினரி & ஸர்விஸஸ், பெனன்ட் ரோடு, பக்கிங்ஹாம்பேட் போஸ்ட், விஜயவாடா.

**ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (சௌத் இந்தியா) லிமிடெட்**
கோயமுத்தூர் - கோழிக்கோடு - உதகமண்டலம் - திருவனந்தபுரம்

வெப்ஸ் பார்ம் மெகானிஸேஷன், 30, மகாத்மா காந்தி ரோடு, பெங்களூர் & மைசூர்
அருண் ஆடோமொபைல்ஸ், 103, அலெக்ஸான்ட்ரா ரோடு, செகந்திராபாத்




# பாதி விலை

ஸ்விட்ஜர்லாந்திலிருந்து ஏராளமாகத் தருவிக்கப்பட்ட கடிகாரங்களில் பாதிக்குமேல் விற்பனையாகி விட்டன. இப் பாதி விலை சலுகை இன்னும் இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு 15, 17 ஜுவல் கடிகாரமும் 3 வருஷமும் மற்றவை ஒரு வருஷமும் உத்தரவாதம் கொண்டவை. ஒவ்வொரு கடிகாரத்துடனும், ஒரு காரண்டி சர்டிபிகேட்டும், ஒரு நேர்த்தியான ஸ்ட்ராப், ஒரு வெல்வெட் பெட்டியும் இனாமாகக் கொடுக்கப்படும். பாக்கிங், விற்பனை வரி, தபாற் செலவு இலவசம். ஆர்டர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.

## இலவசம்


புது வருஷ காலண்டரும், மடக்கக் கூடிய சீப்பும் இணைக்கப்பட்ட தையல் இல்லாத அமெரிக்கன் பிளாஸ்டிக் மணிபர்ஸ் ஒன்றும் ஒவ்வொரு கடிகாரத்துடனும் இலவசமாக அனுப்பப்படும்

குறைந்த விலைகளின் விவரம் கீழ்க்காணுமாறு:



வாட்டர் ப்ரூப், ரேடியம் சைஸ் 10½

| நெ. | | ரூ. |
|---|---|---|
| 1 | க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் | 49/- |
| 2 | ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் | 51/- |
| 15 | க்ரோம் ஸ்டீல் பேக் 17 ஜுவல்ஸ் | 59/- |
| 16 | ரோ.கோ.ஸ்டீல்பேக் 17 ஜுவல்ஸ் | 61/- |



சிறிய ரவுண்டு சைஸ் 6¾

| நெ. | | ரூ. |
|---|---|---|
| 21 | பிளைட் க்ரோம் கேஸ் 4 ஜுவல்ஸ் | 22/- |
| 22 | பிளைட் க்ரோம் கேஸ் 7 ஜுவல்ஸ் | 29/- |
| 3 | க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் | 39/- |
| 4 | ரோ.கோ.ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் | 41/- |



சென்டர் செகண்ட் சைஸ் 9¾

23 பிளைட் க்ரோம் கேஸ் 7 ஜுவல்ஸ் 30/-



வளைவு சைஸ் 7¾

24 ரோ.கோ.ஸ்டீல்பேக் 5 ஜுவல்ஸ் 30/-

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 47

# "இரண்டும் இரண்டும் ஐந்தேகால்!"

இரண்டு மனிதர்களுக்குள் விவாதம் நடந்தது. ஒருவன் "இரண்டும் இரண்டும் நாலு" என்றான். இன்னொருவன் "இரண்டும் இரண்டும் ஐந்தேகால்" என்றான். இரண்டாவது மனிதன் எவ்வளவோ கூரடியாகக் கத்தியும் முதல் மனிதன் இணங்கி வரவில்லை. "இரண்டும் இரண்டும் நாலு" என்றே சாதித்துக் கொண்டிருந்தான். மிஸ்டர் இரண்டும் இரண்டும் ஐந்தேகாலுக்கு வெகு கோபம் வந்துவிட்டது. "பார்! இப்படியே நீ பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தால் உன்னை இலேசில் விடமாட்டேன். சந்தியில் நிறுத்தி விடுவேன். கடைசியாகப் பிரயோகிப்பதற்கு ஒரு பெரிய பாணம் வைத்திருக்கிறேன்! சென்ற வருஷத்து ஜூலை மாதத்துக் காலெண்டரை வெளியிட்டு விடுவேன்!" என்று பயமுறுத்தினான்.

இதைக் கேட்ட முதல் மனிதன் சிரிக்காமல் வேறு என்ன செய்வான்?

காலெண்டரை வெளியிட்டு விட்டால் அதனால் யாருக்கு என்ன லாபம்? அல்லது நஷ்டம்? அதிலும் போன வருஷத்துப் பழைய காலெண்டரை வெளியிடுவதினால் என்ன பலன் ஏற்பட்டுவிடும்? "இரண்டும் இரண்டும் ஐந்தேகால்!" என்று ஏற்பட்டு விடுமா? அல்லது "இரண்டும் இரண்டும் நாலு" என்று சொன்னவன் மூர்ச்சையாகி விழுந்து விடுவானா?

ஆந்திர மாகாணப் பிரிவினை சம்பந்தமாக ஒரு முடிவில்லாத முரட்டு விவாதத்தை ஸ்ரீ டி. பிரகாசம் முதலிய ஆந்திரத் தலைவர்கள் சிலர் நடத்தி வருகிறார்கள். முக்கியமாக, மேலிடத்துத் தலைவர்களுடன் மேற்படி விவாதத்தை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லிப் பண்டித ஜவாஹர்லால் நேரு முதலிய தலைவர்கள் அலுத்துச் சலித்துப் போனார்கள். "ஆந்திர மாகாணம் ஏற்படாததின் காரணம் ஆந்திரத் தலைவர்கள்தான்!" என்று இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஒரு தடவை ஜவாஹர்லால்ஜி சொன்னார். இதைக் கேட்ட ஸ்ரீ டி. பிரகாசம் "அப்படியா சொன்னீர்? காலஞ்சென்ற சர்தார் படேலின் கடிதத்தை வெளியிட்டு விடுவேன்! ஜாக்கிரதை!" என்று பயமுறுத்தினார். ஜவாஹர்லால்ஜி "தாராளமாக வெளியிடுங்கள்!" என்றார். ஸ்ரீ டி. பிரகாசமும் மேற்படி கடிதத்தை வெளியிட்டு விட்டார்.

சர்தார் படேலின் மேற்படி பழைய கடிதத்திலிருந்து என்ன வெளியாகியிருக்கிறது! புதிய விஷயம் ஒன்றும் வெளியாகவில்லை. பழைய காலெண்டரானாலும் எப்படித் தேதிகள் சரியாகத்தான் இருக்குமோ, அப்படியே சர்தார் படேலின் கடிதத்திலும் சரியான விஷயங்கள்தான் இருக்கின்றன.

"தனி மாகாணம் பிரிப்பதற்கு இங்கே யாரும் குறுக்கே நிற்கவில்லை. உங்களுக்குள் நீங்கள் ஒற்றுமையான முடிவுக்கு வாருங்கள்! பொருளாதார விளைவுகளைத் தீர்க்கமாக யோசித்துக் கொள்ளுங்கள். முன் யோசனையின்றி அவசரமாக ஒன்றைச் செய்துவிட்டு அப்புறம் 'தனி மாகாணத்துக்குப் பணம் போதவில்லை' என்று எங்களிடம் வந்து மூக்கால் அழாதீர்கள்!" என்று சர்தார் படேல் அக்கடிதத்தில் எழுதியிருக்கிறார். எவ்வளவு உண்மையான வார்த்தை! தீர்க்க தரிசனம் படைத்த இரும்பு மனிதரான சர்தார் படேல் வேறு என்ன சொல்லியிருக்க முடியும்?

இதிலிருந்து ஆந்திர மாகாணத்தைத் தனியே பிரிப்பதற்கு இந்திய சர்க்கார் குறுக்கே நிற்பதாக எப்படி ஏற்படும்?

உண்மையில், ஆந்திர மாகாணத்தைப் பிரிப்பதற்குக் குறுக்கே நிற்பவர்கள் ஆந்திரத் தலைவர்கள்தான் என்பது அடிக்கடி வெளியாகி வருகிறது. சென்ற வாரத்திலே கூட வெளிப்படுத்தினார்கள். ஸ்ரீ டி. பிரகாசம், ஸ்ரீ புலுசு சாம்பமூர்த்தி முதலிய பிரபல ஆந்திரத் தலைவர்கள் முப்பதுபேர் சென்னையில் சென்ற வாரத்தில் ஒரு கூட்டம் கூடி, "சென்னை நகரம் ஆந்திர மாகாணத்தைத்தான் சேர வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றி வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆந்திர மாகாணத்துக்குக் குறுக்கே நிற்பவர்கள் ஆந்திரத் தலைவர்கள்தான் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

ஆந்திரத் தலைவர்கள் சென்னை நகரைக் கோரும் வரையில் ஒருகாலும் ஆந்திர மாகாணம் ஏற்படப் போவதில்லை என்று நிச்சயம் சொல்லலாம். ஏனெனில், அது அவ்வளவு அர்த்தமான, அர்த்தமற்ற, யாரும் ஒப்புக் கொள்ள முடியாத கோரிக்கையாகும்.

இடம் இடமாக மாறித் தவணை தவணையாகப் பட்டினி கிடந்து வரும் சுவாமி சீதாராம் அவர்களுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால் அதற்குப் பொறுப்பாளிகள் ஸ்ரீ பிரகாசம் முதலிய ஆந்திரத் தலைவர்கள் தான். ஜவாஹர்லால்ஜி ஒரு காலும் அதற்குப் பொறுப்பாளியாக மாட்டார்.

# தஞ்சைக்கு விமோசனம் (?)

—அந்தக் கேள்விக் குறியைச் சற்றுக் கவனித்துக் கொள்ளுங்கள்! கவனியாமல் விட்டு விட்டு, "தஞ்சைக்கு இன்னும் விமோசனம் கிட்டவில்லையே!" என்று நம்மைத் திட்டாதீர்கள்!


தஞ்சைக்கு விமோசனம் ஏற்படலாம் என்பதற்கு முதல் அறிகுறி கிடைத்திருக்கிறது. அவ்வளவுதான் தற்சமயம் சொல்லலாம்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அந்த ஜில்லாவில் காங்கிரஸ் வேலை ஸ்தம்பித்துப் போயிருந்தது. ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அமைப்பு சம்பந்தமான தகராறுதான் அதற்குக் காரணம். ஜில்லா கமிட்டியின் தலைமைப் பதவிக்கு இரண்டு பேர் போட்டியிட்டார்கள். ஒருவர் குன்னியூர் ஸ்ரீ சாம்பசிவ அய்யர். இன்னொருவர் திட்டை ஸ்ரீ சுப்பிரமணியம். இருவரும் "நான்தான் தலைவர்" என்று சொல்லிக் கொண்டார்கள். வழக்கு காங்கிரஸ் தேர்தல் டிரிபுனலுக்குப் போயிற்று. டிரிபுனல் ஒரு தீர்ப்பு அளித்தது. ஆனால் 'அந்த டிரிபுனலும் செல்லாது; அதன் தீர்ப்பும் செல்லாது' என்று மாகாண காங்கிரஸ் நிர்வாகம் கூறியது. நிலைமை இப்படியிருக்கும் போதே பொதுத் தேர்தலும் வந்தது. காங்கிரஸ் கமிட்டிகள் இயங்கவில்லை. அதன் பலனைத் தேர்தல் முடிவில் பார்த்தோம்.

சென்ற வாரத்தில் தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியைத் திருத்தி அமைத்துப் புத்துயிர் கொடுப்பதற்காக ஸ்ரீ எம். பக்தவத்சலம் தஞ்சை சென்றிருந்தார். எல்லா கோஷ்டியினரையும் அழைத்து ஏகமனதாக அனைவரும் ஒப்புக் கொள்ளும்படி புதிய ஜில்லா கமிட்டி அமைப்பதற்குப் பிரயத்தனம் செய்தார். அதில் அவர் வெற்றி யடைந்தது திருப்திகரமான செய்தி.

தலைமைப் பதவிக்கு முன்னம் போட்டியிட்டவர்களில் ஒருவரான குன்னியூர் ஸ்ரீ சாம்பசிவய்யர் புதுக் கமிட்டிக்குத் தலைவராகவும், இன்னொருவரான திட்டை ஸ்ரீ சுப்பிரமணியம் கமிட்டியின் காரியதரிசியாகவும் பொறுப்பு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். பழங்கால நீடித்த காங்கிரஸ் ஊழியரான நாகைப்பட்டினம் ஸ்ரீ கோவிந்தசாமி செட்டியார் கமிட்டியின் உதவித் தலைவர். இளம் காங்கிரஸ் தொண்டர்களின் பிரதிநிதியான ஸ்ரீ அய்யப்ப முதலியார் உதவிக் காரியதரிசியாக நியமனம் பெற்றிருக்கிறார். ஸ்ரீ சி. மருதவாணம் பிள்ளை எம். எல். சி. அவர்கள் கமிட்டியின் பொக்கிஷதாரராகத் தெரிந்தெடுக்கப் பட்டது கமிட்டியின் வேலைகள் சுமுகமாக நடப்பதற்கு மிக்க ஒத்தாசையா யிருக்கலாம்.

## அவசரப்படேல்!




காஷ்மீர் அரசாங்கத் தலைவர் ஷேக் அப்துல்லா பல பலன்களை யோசியாமல் அவசர சித்தத்துடன் அமுலுக்குக் கொண்டு வருவதாக இந்திய சர்க்கார் கருதுகின்றனர்.

ஆகக்கூடி தஞ்சை ஜில்லா கமிட்டி நல்ல முறையில் கோஷ்டி மனப்பான்மையில்லாத ஒற்றுமை அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரிய விஷயந்தான். ஆனால் கமிட்டி ஏற்பட்டவுடன் காரியம் பூர்த்தியாகி விடவில்லை.

இம்மாதிரி கமிட்டி இரண்டு வருஷங்களுக்கு முன்னால் அமைந்திருந்தால் இன்றைய நிலைமையே வேறு விதமா யிருந்திருக்கும். தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பது என்பார்களே, அவ்வளவு கஷ்டமான நிலைமையில் இப்போது அடியிலிருந்து முயற்சி செய்தாக வேண்டும்.

புது ஜில்லாக் கமிட்டி அமைப்பின் மூலம் எட்டில் ஒரு பங்கு வேலை ஆகியிருக்கிறது.

இதே மாதிரி சுமுகமான ஒற்றுமை அடிப்படையில் ஒவ்வொரு தாலுக்காவிலும் முக்கியமான எல்லாக் கிராமங்களிலும் காங்கிரஸ் கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும். இடைவிடாத காங்கிரஸ் பிரசாரம் செய்ய வேண்டும்.

உணவுக் கண்ட்ரோல் நீக்கத்தினால் இப்போது தீவிர காங்கிரஸ் பிரசாரத்துக்குச் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை உடனடியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பிரசாரம் மட்டும் போதாது. ஆக்க வேலையிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தஞ்சை ஜில்லாவில் இப்போது முக்கியமாக நடைபெற வேண்டிய ஆக்க வேலை என்ன! உணவு உற்பத்தியைப் பெருக்குவதுதான். தஞ்சை ஜில்லா முனைந்தால் இம்மாகாணத்தின் உணவுப் பற்றாக்குறை அடியோடு மறைந்து விடும். இதற்காகக் காங்கிரஸ் கமிட்டிகளும் ஊழியர்களும் செய்யக் கூடியது ஏதேனும் உண்டா! உண்டு; மிக முக்கியமான தொண்டு ஒன்று உண்டு. அது, விவசாயத்துக்கு எவ்வித இடையூறும் நேராமல் பார்த்துக் கொள்வதுதான். மிராசுதார்களுக்கும் பயிரிடுபவர்களுக்கும் எங்கேயாவது தகராறு நேர்ந்ததாக அறிந்தால், உடனே ஜில்லா காங்கிரஸ் நிர்வாகிகள் அங்கே சென்று சமரசம் உண்டு பண்ணி வைக்க முயல வேண்டும். இது அவர்களுடைய முதன்மையான கடமை; அவர்கள் செய்ய வேண்டிய முக்கியமான ஆக்க வேலை.

புதிய ஜில்லா கமிட்டியின் தலைவர் ஸ்ரீ கே எஸ். சாம்பசிவய்யர் அவர்கள் தஞ்சை ஜில்லாவின் பெரிய மிராசுதார்களில் ஒருவர். சென்ற பொதுத் தேர்தலின் போது அவர் பெரிய மிராசுதார் ஹோதாவை அடியோடு மறந்து விட்டுப் பொது மக்களுடனும் காங்கிரஸ் தொண்டர்களுடனும் சரிசமானமாகப் பழகி வேலை செய்ததைப் பார்த்தவர்கள் அனைவரும் வியந்து பாராட்டினார்கள்.

தேர்தல் முடிவு காரணமாக ஸ்ரீ சாம்பசிவய்யர் மனம் சோர்ந்து அரசியல் துறவு கொண்டு விடுவார் என்று சிலர் எதிர்பார்த்தார்கள். இந்த ஜோஸ்யம் பலியாதது பற்றி மகிழ்ச்சி யுறுகிறோம்.

மாகாண சட்ட சபை அங்கத்தினர் பதவியைக் காட்டிலும் ஜில்லா காங்கிரஸ் தலைமைப் பதவி குறைவானதன்று. இதை உணர்ந்து ஸ்ரீ சாம்பசிவய்யர் காங்கிரஸ் தொண்டில் இறங்க வேண்டும்.

தஞ்சை ஜில்லாவில் தீவிரமாகக் காங்கிரஸ் பணியில் ஈடுபடக் கூடியவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். காங்கிரஸ் அபிமானம் படைத்தவர்கள் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள்.

ஆனால் அவர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே தெரிந்த காரணங்களினால் மனம் தளர்ந்து உற்சாகக் குறைவு அடைந்து போயிருக்கிறார்கள். மீண்டும் அவர்களிடையே முன் போல் உற்சாகமும் ஊக்கமும் உண்டு பண்ணிக் காங்கிரசுக்குப் பலம் திரட்டும் பொறுப்பு ஸ்ரீ சாம்பசிவய்யருக்கும் அவரைத் தலைவராகக் கொண்ட புதிய கமிட்டிக்கும் ஏற்பட்டிருக்கிறது.

## புது மாகாணக் கமிட்டி உறக்கம்

தஞ்சை ஜில்லா புதுக் கமிட்டியைக் குறித்து ஏன் சிறிது சந்தேகத்துடனேயே எழுதியிருக்கிறோம் என்றால், புதிய மாகாண காங்கிரஸ் கமிட்டியின் வேலையை (அல்லது வேலை செய்யாமையைப் பார்த்துக் கொண்டிருப்பதினாலேதான்.

டாக்டர் சுப்பராயன் அவர்களைத் தலைவராகக் கொண்ட புதிய மாகாணக் காங்கிரஸ் ஏற்பட்டவுடன், காங்கிரஸ் வேலை இம்மாகாணத்தில் தீவிரமாக நடைபெறும் என்று எதிர்பார்த்தோம். அதற்குப் பதிலாகப் புதிய கமிட்டி கும்பகர்ண படலத்தில் ஆழ்ந்திருப்பதைத்தான் பார்க்கிறோம்.

உணவுக் கண்ட்ரோல் இம் மாகாணத்தில் நீக்கப்பட்டது ஓர் அற்புதமான செயல் என்று இந்தியா தேசம் எங்கும் பாராட்டப்படுகிறது. இம் மாகாணத்தின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள பற்பல ஸ்தாபனங்களும் மகிழ்ச்சி தெரிவித்திருக்கின்றன. பொது ஜனங்களுடைய உற்சாக வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது.

ஆனால் சென்னையிலுள்ள புதிய தமிழ் மாகாணக் கமிட்டியின் செவியில் அந்தச் செய்தி எட்டவேயில்லை என்று தோன்றுகிறது. கண்ட்ரோல் எடுபட்டது பற்றி மகிழ்ச்சி தெரிவிக்க ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்திருக்க வேண்டாமா! செய்யவில்லை! அல்லது சென்னை நகருக்கென்று ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஒன்று இருக்கிறதே! அதைக் கொண்டாவது ஒரு பொதுக் கூட்டம் நடத்தியிருக்கக் கூடாதா? அதுவும் இல்லை.

உணவுக் கண்ட்ரோலை எடுத்த நாலு நாளைக்குள் சென்னைக் கடற்கரையில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தியிருந்தால் இரண்டு லட்சம் மக்களுக்குக் குறையாமல் கூடியிருப்பார்கள். அந்த உற்சாகத்தை, மேலே நடக்க வேண்டிய காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். பொது மக்கள் ஒத்துழைக்க வேண்டிய முறைகளை எடுத்துச் சொல்லியிருக்கலாம். இம் மாகாணம் ஆறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டதின் நோக்கத்தை விளக்கிக் கூறி யிருக்கலாம். உணவுப் பொருளை வாங்கிச் சேகரித்து வைக்கக் கூடாது என்பதை வற்புறுத்திச் சொல்லியிருக்கலாம்.

இப்போது என்ன நடக்கிறது, தெரியுமா! காங்கிரஸ் எதிரிகள் வழக்கம்போல் மூலை முடுக்குகளில் கூட்டங்களை நடத்தி வருகிறார்கள். "அரிசி விலை ஏறப் போகிறது! தொழிலாளர்கள் கஷ்டப்படப் போகிறார்கள்!" என்ற தீய பிரசாரத்தைச் செய்து வருகிறார்கள். வேண்டுமென்று பீதியை வளர்த்து அரிசி விலை ஏறச் செய்வதற்கென்றே இந்த விஷமப் பிரசாரத்தைச் செய்கிறார்கள். இதற்கு மாற்றுப் பிரசாரம் ஒன்றும் செய்யப்படவில்லை.

புது மாகாணக் கமிட்டியும் ஜில்லா கமிட்டியும் உறக்கம் நீங்கி எழுந்து இனிமேலும் தத்தம் கடமையைச் செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாகாணக் கமிட்டி—ஜில்லாக் கமிட்டிகளை எதிர்பாராமல் காங்கிரஸ் பிரசாரத்தைத் தீவிரமாக நடத்தி வைப்பதற்கு ஒரு தனி அமைப்பு அவசியம் என்று தோன்றுகிறது. இம்மாகாணத்தின் வருங்கால க்ஷேமத்தில் கவலையுள்ளவர்கள் இந்த விஷயத்தில் உடனே கவனம் செலுத்த வேண்டும்.

# கோட்டை விடாதீர்கள் !

பாண்டிய நாட்டிலுள்ள வீரத் தமிழர்கள், தியாகத் தொண்டர்கள், தேச பக்தர்கள், காங்கிரஸ் அபிமானிகள் அனைவரையும் நாம் கேட்டுக் கொள்வதாவது :—"கோட்டை விடாதீர்கள் ; முக்கியமாக, அருப்புக் கோட்டைத் தொகுதியை விட்டு விடாதீர்கள் !" என்பதுதான்.

ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த அருப்புக் கோட்டை, முதுகுளத்தூர் தாலூகாக்களும் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த கோவில் பட்டி தாலூகாவும் அடங்கியது அருப்புக் கோட்டை பார்லிமெண்டரி தொகுதி. இந்தத் தொகுதியில் இந்தியப் பார்லிமெண்டுக்கு உபதேர்தல் நடக்கிறது. ஜூலை 23உ தேர்தல் தினம்.

மேற்படி தொகுதியில் காங்கிரஸின் சார்பாகப் போட்டியிடுகிறவர் ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சித பாதம் அம்மாள் பி. ஏ. அவர்கள்.

இந்தத் தொகுதியைச் சேர்ந்த எட்டயபுரத்தில் பிறந்த மகாகவி பாரதியார்,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்"

என்று தீர்க்கதரிசனத்துடன் பாடியிருக்கிறார்.

அந்த மகா கவியின் வாக்கை நிறைவேற்றுவதற்கே போலக் காங்கிரஸ் மேலிடத்தார் ஒரு பெண்மணியை இந்தத் தொகுதிக்கு அபேட்சகராக நிறுத்தி யிருக்கிறார்கள்.

அரசியல் வாழ்க்கையில் பெண்மணிகள் அதிகமாக முன்வந்து ஈடுபட வேண்டுமென்பது நம் மாபெருந் தலைவர் ஜவாஹர்லால்ஜியின் விருப்பம். ஆகையால் மாகாண சட்ட சபைகளுக்கும் பார்லிமெண்டுகளுக்கும் கூடுமானவரை, ஸ்திரீ அபேட்சகர்களை நிறுத்தும்படி தாக்கீது அனுப்பி வந்தார்.

பெண்கள் அரசியல் வாழ்க்கையில் முன்னணிக்கு வரவேண்டுமென்பதற்காக அந்தந்தப் பதவிக்குத் தகுதியில்லாதவர்களையும் போட்டுவிடக் கூடாதல்லவா !—அப்படிப் போடுவது குறித்த இலட்சியம் நிறைவேறுவதற்குக் குந்தகமாகவே முடியும்.

அதிர்ஷ்ட வசமாக, அருப்புக் கோட்டைத் தொகுதியில் அபேட்சகராக நிறுத்திவைப்பதற்கு, கல்வி யறிவும் மற்ற எல்லா விதத் தகுதிகளும் வாய்ந்த பெண்மணி ஒருவர் கிடைக்கவே, அவரையே நியமனம் செய்திருக்கிறார்கள்.

ஆகவே, அருப்புக் கோட்டைத் தொகுதியில் நாளை நடக்கும் தேர்தல் பலவகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தத் தொகுதியிலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள தேசபக்தர்களும் காங்கிரஸ் ஊழியர்களும் முழு மூச்சுடன் வேலை செய்து ஸ்ரீமதி ராஜாத்தி அம்மாளுக்கு வெற்றி தேடிக் கொடுத்து, அருப்புக் கோட்டைத் தொகுதியைக் காங்கிரஸ் கோட்டையாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

கோவை ஜில்லாவில் நடந்த உபதேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் ஸ்ரீ என். எம். லிங்கம் பெருமித வெற்றி அடைந்து விட்டார் ! கம்யூனிஸ்ட் கட்சியார் தங்கள் சக்திகளை யெல்லாம் திரட்டிப் பெருமுயற்சி செய்தும் அக் கட்சியின் அபேட்சகர் தோல்வி யடைந்தார்.

இந்தச் செய்தி பாண்டிய நாட்டிலுள்ள காங்கிரஸ் ஊழியர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்திருக்கும். அத்துடன் போட்டி மனப்பான்மையை உண்டாக்கி யிருந்தால் அதுவும் நல்லதுதான் !

கொங்கு நாட்டுத் தேசபக்திக்குப் பாண்டிய நாட்டுத் தேசபக்தி குறைந்து போய்விடலாமா !

<u>அட்டைப்பட விளக்கம்</u>

# பூமிக்குள் புதையல்

நிதி மந்திரிகள் சாதாரணமாகப் புது வரிகள் போட்டுத்தான் ஜனங்களைத் திடுக்கிடச் செய்வது வழக்கம். இந்திய சர்க்காரின் நிதி மந்திரி தேசமுக் சமீபத்தில் வேறு விதத்தில் நம்மைத் திடுக்கிடச் செய்தார். அவர் பார்லிமெண்டில் பேசும்போது தமிழ் மறையிலிருந்து ஒரு திருக்குறளைத் தூக்கிப் போட்டு அங்கத்தினரைத் திணற அடித்தார்.

"இல மென்று அசைஇ யிருப்பாரைக் காணில்
நில மென்னும் நல்லாள் நகும் !"

அற்புதமான தெய்வீக வாக்கு. "பொருளில்லை, உணவில்லை" என்று தலையில் கையை வைத்துக் கொண்டு சோம்பி யிருப்பவர்களைப் பார்த்துப் பூமாதேவி "அட பைத்தியக்காரனே !" என்று சிரிக்கிறாளாம் !—இவ்விதம் வள்ளுவர் கூறுகிறார்.

செந்நெற் கதிர்களையும், பொன்னிறக் கோதுமையையும், பல் நிறத் தானியங்களையும் கணக்கில்லாமல் பூமாதேவி தனக்குள்ளே வைத்துக் கொண்டிருக்கிறாள். அன்னை குழவியைக் கர்ப்பத்தில் வைத்துக் காப்பாற்றி வருவதுபோல் காப்பாற்றி வருகிறாள். உண்மையான உழைப்பாளிகளும் அறிவாளிகளும் வந்து பக்தியுடன் கேட்டால் அள்ளிக் கொடுப்பதற்குக் காத்திருக்கிறாள். சோம்பேறிகளையும், கலபத்தில் சேர்த்து விடுகிறவர்களையும், அழுமூஞ்சிகளையும் கண்டால் மட்டும் பூமாதேவிக்குப் பிடிப்பதில்லை. அத்தகையவர்களைக் கண்டால் தன்னுடைய தானியச் செல்வத்தை இன்னும் ஆழத்தில் புதைத்து மறைத்து விடுகிறாள்.

சென்ற வாரத்தில் ஸ்ரீ ஜவாஹர்லால்ஜி ஒரு ரேடியோப் பிரசங்கம் செய்தார். அதில் விவசாயப் போட்டியில் வெற்றி அடைந்து பரிசு பெற்றவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார். கோதுமையும் நெல்லும், உருளைக் கிழங்கும் சாதாரணமாகச் சராசரியில் உற்பத்தியாவதைக் காட்டிலும் ஐந்து மடங்கும் ஆறு மடங்கும் உற்பத்தி செய்து காட்டிச் சிலர் பரிசு பெற்றிருக்கிறார்கள்,

ஒருவர் சாதித்த காரியத்தை இன்னொருவர் சாதிப்பது இயலாத காரியமாகாது. அறிவின் துணை கொண்டு ஊக்கத்துடன் உழைத்தால் கட்டாயம் சாதிக்க முடியும். நாடெங்கும் உள்ள விவசாயிகள் அத்தகைய முயற்சிகளில் இறங்கிப் பூமாதேவியின் அருளைப் பெறுவார்களாக.






## பரிசுக் காளைகள்!

நீர் வளத்துக்கும் நிலவளத்துக்கும் அடுத்தபடியாக ஒரு நாட்டின் செல்வப் பெருக்குக்குக் காரணமாயிருப்பது கால்நடை வளமாகும். கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதில் தென்னாட்டில் கோவை ஜில்லா முன்னணியில் நின்று வருகிறது. திருப்பூரில் இம்மாதம் 7, 8, 9௳ களில் நடந்த கால்நடைக் கண்காட்சியின்போது சிவபெருமானே பார்த்து வாகனமாக்கிக் கொள்ள ஆசைப்படக் கூடிய காளைகள் சில காட்சி அளித்தன.

பரிசு பெற்ற காளைகளுக்குப் பரிசு வழங்குவதற்காக விஜயம்செய்திருந்த மந்திரி டாக்டர் யு. கிருஷ்ண ராவ் அவர்களையும், திருப்பூர் நகர சபைத் தலைவரும் கண்காட்சியின் காரியதரிசியுமான ஸ்ரீ கே. என். பழனிசாமிக் கவுண்டர், எம். எல். ஸி. அவர்களையும் மேலேயுள்ள படத்தில் காணலாம்.

போட்டோ: டி. ஆர். ராமச்சந்திரன்



# வட்ட மேஜை

## சுதந்திர உணவு

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்று பாடியது ஓர் கவிதா உள்ளம். ஆம்; உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைதான். ஆனால் இடைக் காலத்தில் அது சற்றுப் பொய்த்து விட்டதாகக் காணப் பட்டது.

"உண்மைக்கு என்றும் அழிவு கிடையாது. சில சமயம் அது அழிந்து விட்டதாகக் காணப்பட்டாலும் அது உண்மையில் அழிவதில்லை. நம் கண் கலக்கந்தான் அப்படித் தோன்றும்" என்று கூறுவர் கற்றறிந்த பெரியோர். அந்த 'மாயை இடைக்காலம்' தான் இதுவரை நம் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்தது போலும்.

உண்மையை ஒளி வீசச் செய்து விட்டார் நம் ஒப்பற்ற தலைவர் ராஜாஜி! ஆம், உணவு தானியக் 'கண்ட்ரோலை' எடுத்து விட்டார்.

இந்த மாபெரும் வெற்றியை நாங்கள் எங்கள் ஆரூர் கிராமத்தில் ஆனந்தமாகக் கொண்டாடினோம். இம்மாதம் 8-ம் தேதியன்று உணவு தானியக் கட்டுப்பாடு இல்லை என்று அப்பட்டமாகத் தெரிந்த அன்று மாலை ஆரூர் வாசிகளாகிய நாங்கள் பொங்கல் முதலிய உணவுகள் பல தயாரித்து அதை இறைவனுக்குப் படைத்துவிட்டு அந்தச் சுதந்திர உணவை இரவு காவேரி ஆற்றங் கரையில் வைத்துச் சாப்பிட்டோம்.

எல்லோரும் கூட்டமாகச் சேர்ந்து "ராஜாஜிக்கு ஜே!" "ராஜாஜி வாழ்க!" என்று ஆனந்தமாகக் கூவினோம். அந்த ஆனந்தக் கூக்குரலை ஆமோதிப்பதுபோல் அருகில் வயலில் நல்ல நிறைய நெல்லுடன் படுத்துக் கிடந்த நெற்பயிரும் கூடத் தன் நெற்கதிரை ஆட்டி ஆனந்தக் கூத்தாடியது.

ஆரூர்
10-6-52

சீ. வெங்கடேசன்

## விழாக் கொண்டாடுவோம்!

நமது மாகாணத்தில் உணவுப் பொருள் சம்பந்தமான சகல கட்டுப்பாடுகளும் சென்ற ஜூன் மாதம் 8-ந்தேதியுடன் ஒழிந்தது.

அன்றைய தினம் வரை சர்க்காரின் கோடிக் கணக்கான ரூபாய் செலவில் மக்களின் அதிருப்தியையே தனது ஆகாரமாக உட்கொண்டு வந்த "உணவுக் கண்ட்ரோல்" என்ற பிரும்மாண்டமான ராக்ஷதனை, நம் ராஜாஜி ஒழித்து விட்டார்.

கொள்முதல் சில்லரை தேவைகளின் இனசரி தொந்தரவுகளுக்கும், அவர்கள் யதேச்சாதிகாரமான அட்டகாசங்களுக்கும், ஆளாகிப் பயந்து, இது காறும் கடந்து வந்த வாழ்விற்கும் ஒரு முடிவு காலம் வந்து விட்டது.

அதிகாரிகளின் உருட்டல், மெரட்டல் முதலிய போலி நாடகங்கள் முடிவுற்றன.

மாகாண மக்கள் எல்லோரும் ஒரு முகமாய் இம் மாறுதலை வரவேற்கிறார்கள். அழுமூஞ்சித் திருவாளர்கள் இங்கு ஒருவருமில்லை. பிற மாகாணங்களும் ராஜாஜியின் துணிச்சலான செய்கையின் பலனை மிக ஆவலோடு கவனித்து வருகிறார்கள். ராஜாஜி இம் முயற்சியில் நிச்சயம் வெற்றி யடைந்து அகில இந்தியாவுக்கும் வழி காட்டுவார் என்று பரிபூரணமாய் நாம் நம்பலாம்.

ஒவ்வொரு கிராமத்திலும், மக்கள் கூட்டம் கூடி 'கண்ட்ரோல் இனி நமக்குத் தேவையில்லை. நாங்கள் அவமரியாதைப் படாமல் கால் வயிறுஇலும் சாப்பிடத் தயார்' என்ற தீர்மானத்தை நிறைவேற்றிச் சர்க்காருக்கு அனுப்பி வைத்துக் கண்ட்ரோல் ராக்ஷதன் ஒழிந்ததை ஒரு திருவிழாவாகக் கொண்டாடுவார்களாக.

நங்கவரம்
12—6—52

என். ஆர். அகண்டேசுவரன்

## எங்கும் மகிழ்ச்சி!

சென்ற பல ஆண்டுகளாக நம்மையும் நம் சமுதாயத்தையும் சீரழித்துப் பாழ்படுத்தி வந்த உணவு ரேஷன் தொலைந்தது.

லஞ்ச வேட்டையின் பிறப்பிடம் — விவசாயிகளை வாட்டிப் பிழிந்த ரேஷன் — மக்கள் மாறாத அன்பு வைத்திருந்த தேசிய ஸ்தாபனம் சரிவுக்குக் காரணமான இந்தச் சனியன் — இன்றோடு தொலைந்தது. ஒப்பில்லாத் தலைவர் ராஜாஜியால்.

அன்று (1937) விவசாயிகளை, கடன், மது என்னும் இரக்கமற்ற பேய்களிடத்திலிருந்து விடுதலை அளித்தார். இன்று அவைகளிலும் கொடிய அரக்களிடத்திலிருந்து அகில இந்தியாவிலே முதலாவதாகக் காப்பாற்றி விட்டார். எங்கும் மகிழ்ச்சி! ஒரே குதூகலம்!

பொது ஜனங்களும் காங்கிரஸ்காரர்களும் தள்ளாத வயதிலே பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் ராஜாஜியுடன் ஒத்துழைத்து அவர் வேலையைச் சுலபமாக்க வேண்டும்

வாழ்க ராஜாஜி! வாழ்க அவர் மந்திரி சபை!! வாழ்க நம் நாட்டு மக்கள்!!!

பூனை நகர்
8—6—52

ஆ. இ. இராமலிங்கம்


## பதுக்கக் கூடாது!

ராஜாஜி நம் மாகாண முதன் மந்திரியான நாள் முதல் நம் தேச மக்களுக்குச் சுபிட்ச வாழ்வுக்கு வழி காட்டிக் கொண்டிருக்கிறார். அவர் பதவி ஏற்ற சிறிய கால அளவுக்குள் அவர் செய்த பல அற்புதக் காரியங்களில் உணவு ரேஷனை எடுத்தது மிகப் பெரிய மகத்தான காரியமாகும். அவருடைய ரேடியோப் பிரசங்கத்தைக் கேட்ட மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தனர். தற்போதுள்ள உணவுக் கொள்கைக்கு விரோதமாக தேவைக்கு அதிகமாக யாராவது உணவு தானியத்தைப் பதுக்கி வைத்தால் அவர்களுக்குக் கடுமையான தண்டனையும் பெரும் தொகை அபராதமும் விதிக்கச் சட்டம் இயற்ற வேண்டும். பதுக்கும் பொருள்களைக் கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு நல்ல தொகை பரிசு கொடுப்பதாகவும் அறிவிக்க வேண்டும்.

அருப்புக்கோட்டை
5—6—52

அ. பொ. நாராயணன்.

[உணவுக் கண்ட்ரோல் ஒழிந்தது பற்றி மகிழ்ச்சி தெரிவித்து இம்மாதிரி அநேக கடிதங்கள் வந்திருக்கின்றன. எல்லாவற்றையும் வெளியிட இயலாததற்காக நேயர்களின் மன்னிப்பைக் கோருகிறோம். — ஆசிரியர்]




### அத்தியாயம் 34

## தீவர்த்தி அணைந்தது!

அமாவாசை முன்னிரவு. நன்றாக இருள் சூழ்ந்து விட்டது. வடதிசையில் தோன்றி மேலே வந்த கரிய மேகங்கள் இப்போது வான வெளி முழுதும் பரவி மறைத்து விட்டன. ஆகாசத்தில் ஒரு நட்சத்திரம்கூடக் கண் சிமிட்டவில்லை. மரங்களின் மீதும் புதர்களின் மீதும் பறந்த மின்மினிப் பூச்சிகள் சிறிது வெளிச்சம் அளித்தன. அதன் உதவி கொண்டு வந்தியத்தேவன் குதிரையைச் செலுத்திக் கொண்டு போனான். எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம், போவதினால் பயன் ஏதேனும் ஏற்படுமா என்பது ஒன்றும் தெளிவாகவில்லை. குந்தவைப் பிராட்டியின் அருமைத் தோழிக்கு ஆபத்து வந்திருக்கிறது. அவளைக் காப்பாற்ற முயலுவது தன் கடமை. அப்புறம் கடவுள் இருக்கிறார்!

ஒரு நாழிகை நேரம் குதிரை ஓடிய பிறகும் பல்லக்கைக் கண்டு பிடிக்க முடியவில்லை. வெறும் பைத்தியக்கார வேலையில் இறங்கி விட்டோமோ என்ற யோசனை வந்தியத்தேவன் மனதில் உதித்தது. குதிரையை நிறுத்தினான். அச்சமயம் சற்றுத் தூரத்தில் ஏதோ சத்தம் கேட்டது. கூர்ந்து கவனித்தான். குதிரைக் காலடிச் சத்தம்போலிருந்தது. ஆம், குதிரைதான்! ஒரு குதிரையா, பல குதிரைகளா என்று தெரியவில்லை. பல்லக்கைக் காவல் புரிந்து கொண்டு போகும் குதிரை வீரர்களாயிருக்கலாம். இனி ஜாக்கிரதையாகப் போக வேண்டும். திடீரென்று பெருங் கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. அதனால் வானதி தேவிக்கும் பயன் இல்லை; தன் காரியமும் கெட்டுப்போகும்.

மெள்ள மெள்ள, நின்று நின்று, குதிரையை விட்டுக்கொண்டு போனான். முன்னால் போவது ஒரே குதிரைதான் என்று ஒருவாறு நிச்சயித்துக் கொண்டான். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தக் குதிரை ஒரு மேட்டுப் பாங்கான கரையின்மீது ஏறுவது போலத் தோன்றியது. தான் பின் தொடர்வது தெரியாமல் மறைந்து நிற்க விரும்பினான். சுற்றுமுற்றும் கூர்ந்து பார்த்தான். பாழடைந்த மண்டபம் ஒன்று இடிந்த சுவர்களுடன் பக்கத்தில் காணப்பட்டது. அதன் அருகே சென்று மொட்டைச் சுவர் ஒன்றின் மறைவில் குதிரையை நிறுத்திக் கொண்டான். முன்னால் சென்று மேட்டில் ஏறிய குதிரையைக் கண்கள் வலிக்கும்படியாக இருட்டில் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"யார் அங்கே?" என்ற குரல் வந்தியத் தேவனைத் திடுக்கிடச் செய்தது. அது அவனுக்குப் பழக்கப்பட்ட மனிதரின் குரலாகத் தோன்றியது.

"மகாராஜா! அடிமை, நான்தான்!" என்ற மறுகுரலும் கேட்டது.

ஒரு நிமிட நேரத்துக்கெல்லாம், குரல்கள் கேட்ட இடத்தில் ஒரு தீவர்த்தி வெளிச்சம் தோன்றியது. மரத்தின் மறைவிலிருந்து கையில் தீவர்த்தியுடன் ஒருவன் வெளி வந்தான். அதன் வெளிச்சத்தில் குதிரை தெரிந்தது. குதிரையின் மேல் ஒரு ஆள் வீற்றிருப்பதும் தெரிந்தது. குதிரை மேலிருந்தவர் மதுராந்தகர்தான் என்பது உறுதியாயிற்று.

தரையில் நின்றவன் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தபோது இளவரசர் ஏறியிருந்த குதிரை மிரண்டது. முன்னங் கால்களை அது மேலே தூக்கி ஒரு தடவை சுழன்றது. பின்னர் சடால் என்று பாய்ந்து ஓடத் தொடங்கியது.

அந்தக் குதிரை நின்ற இடம் ஒரு அகன்ற வாய்க்காலின் கரை. அந்த மேட்டுக் கரையிலிருந்து குதிரை வாய்க்காலின் வெள்ளத்தில் பாய்ந்தது.

தீவர்த்தி பிடித்த மனிதன் "மகாராஜா! மகாராஜா!" என்று கூவிக் கொண்டே குதிரையைப் பின் தொடர்ந்து வாய்க்காலில் குதித்தான். குதித்தவன் இடறிவிழுந்தான். தீவர்த்தி வாய்க்காலின் வெள்ளத்தில் அமிழ்ந்தது.

மறு கணம் முன்னைவிடப் பன்மடங்கு கனாந்தகாரம் சூழ்ந்தது.

அதே சமயத்தில் இலேசாகத் தூற்றல் போடத் தொடங்கியது.

காற்றினால் மரங்கள் ஆடிய சத்தத்துக்கும் மழைத் தூறலின் சத்தத்துக்கும் மண்டூகங்களின் வறட்டுக் கத்தல்களுக்கும் இடையே மனிதர்களின் அபயக் குரல்களும் குதிரைகளின் காலடிச் சத்தமும் குழப்பமாகக் கேட்டன.

இளவரசர் மதுராந்தகர் அவ்வளவாகத் தைரியத்துக்குப் பெயர் போன மனிதர் அல்ல என்பதை வந்தியத்தேவன் அறிந்திருந்தான்.

மிரண்ட குதிரையின் மேலிருந்த மதுராந்தகருக்கு என்ன ஆபத்து விளையுமோ என்று அவன் உள்ளம் திடுக்கிட்டது. குதிரை அவரைச் சுமந்து கொண்டே தெறி கெட்டு ஓடினாலும் ஓடலாம். அல்லது அவரை வாய்க்கால் வெள்ளத்திலேயே தள்ளியிருந்தாலும் தள்ளியிருக்கலாம். அல்லது சற்றுத் தூரம் அவரைச் சுமந்து கொண்டு சென்று வேறு எங்கேயாவது தள்ளி விட்டுப் போயிருக்கவும் கூடும்.

தீவர்த்தியுடன் வந்த மனிதனால் குதிரையைத் தொடர்ந்து போய் அவரைக் காப்பாற்ற முடியுமா? அவனே தான் வாய்க்கால் வெள்ளத்தில் தடுமாறி விழுந்து விட்டானே?

அச்சமயம் தான் செய்ய வேண்டியது என்ன? வானதியைத் தேடிப் போவதா? மதுராந்தகரின் உதவிக்குச் செல்லுவதா? என்ற போராட்டம் ஒரு நிமிடம் அவன் உள்ளத்தில் நிகழ்ந்தது.

வானதி தேவி போன இடமே தெரியவில்லை. ஆனால் மதுராந்தகர் தன் கண் முன்னால் ஆபத்துக்கு உள்ளானார். அவருக்கு உதவி செய்வது எளிது. அவரைத் தேடிப் பிடித்து அபாயம் ஒன்றுமில்லை என்று கண்டால், பிறகு வானதியைத் தேடிப் போவது இருக்கவே இருக்கிறது! கடவுளே! சம்பந்தமில்லாத வேறு எந்தக் காரியத்திலும் தலையிடுவதில்லை என்று தான் சற்று முன்னால் தீர்மானித்துக் கொண்டு கிளம்பியது என்ன? இப்போது நடப்பது என்ன?

மண்டபச் சுவரின் மறைவிலிருந்து குதிரையை வெளியில் கொண்டு வந்தான் வந்தியத்தேவன். இருட்டிலும் தூற்றலிலும் உள்ளுணர்ச்சியினால் வழி கண்டுபிடித்து வாய்க்காலில் இளவரசரின் குதிரை இறங்கிய இடத்தை நோக்கிச் சென்றான். வாய்க்காலில் அவனும் இறங்கினான். சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்தான். ஒன்றும் தென்படவில்லை. எங்கேயோ தூரத்தில் 'ஆஆஆ!' 'ஓஓஓ!' 'ஈஈஈ!' 'டடபடா டடபடா' 'கடகட கடகடா!' என்பவை போன்ற விவரம் தெரியாத சத்தங்கள் கேட்டன.

வாய்க்காலின் அக்கரையில் ஏறினான். கரை மேட்டுக்கு அப்பால் உற்றுப் பார்த்தான். நெடுகிலும் நெல் வயல்களாகக் காணப்பட்டன. வயல்களில் சேற்றிலும், பச்சைப் பயிரிலும் குதிரையை நடத்திச் செல்வது இயலாத காரியம். கரையோடு போய்த்தான் தேடிப் பார்க்க வேண்டும்.

வாய்க்காலின் கரையிலோ செடி கொடிகளும் முட் புதர்களும் அடர்ந்திருந்தன. அவற்றின் நடுவே சென்ற குறுகிய ஒற்றையடிப் பாதை வழியாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டு சென்றான். மேலே மழை; கீழே சறுக்கும் சேற்றுத் தரை; ஒரு பக்கத்தில் வாய்க்கால்; இன்னொரு பக்கத்தில் நெல் வயல்கள்; சுற்றிலும் முட்புதர்கள்.

குதிரை மெள்ள மெள்ளச் சென்றது.

நேரமோ ஒரு நிமிஷம் ஒரு யுகமாகச் சென்றது!

தூற்றல் மழையாக வலுத்துக் கொண்டிருந்தது!

இருட்டு மேலும் இருண்டு கொண்டிருந்தது!

வந்தியத்தேவனுடைய உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது.

மதுராந்தகத்தேவர் தனியாகக் குதிரை மீது ஏன் வந்தார்? எங்கே செல்வதற்காகப் புறப்பட்டு வந்தார்? அவரை எதிர் கொண்டு வந்த மனிதன் யார்?

வானதியைச் சிலர் பிடித்துக் கொண்டு சென்றதற்கும் இதற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா?

வானதியின் கதி இப்போது என்ன ஆகியிருக்கும்?

நாம் எதற்காக இந்தச் சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கவேண்டும்?

நம்முடைய காரியத்தை நாம் பார்க்கலாமே? இராஜ பாட்டையைத் தேடிப் பிடித்து அடைந்து, காஞ்சியை நோக்கிப் போகலாமே?

அதுதான் இந்த மழைக்கால இருட்டில் எப்படிச் சாத்தியமாகும்?

இந்தக் காரியங்கள் எல்லாம் நமக்குச் சம்பந்தம் இல்லையென்று எப்படித் தீர்மானிக்க முடியும்?

கடம்பூர் சம்புவரையர் அரண்மனையில் நமக்குச் சம்பந்தமில்லாத காரியத்தைக் கவனித்ததினால் பிற்பாடு எவ்வளவு உபயோகம் ஏற்பட்டது?

ஆனாலும் இன்றிரவு இந்த இருட்டில் இந்த வாய்க்காலின் கரையோடு போய்க் கொண்டிருப்பதினால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை. சொட்ட நனைவது தான் பயன்! குதிரை எங்கேயாவது இடறி விழுந்து காலை ஒடித்துக் கொண்டால், பிரயாணமே தடைப்பட்டு விடும்.

திரும்பிச் சென்று அந்தப் பாழும் மண்டபத்தை அடைய வேண்டியது தான். மழை விட்ட பிறகுதான் மறுபடி புறப்பட வேண்டும்.

பளிச் சென்று ஒரு மின்னல். அதன் கண நேர வெளிச்சத்தில், சிறிது தூரத்தில், களத்து மேடு ஒன்றில், குதிரை நின்றது போலத் தெரிந்தது.

வந்ததுதான் வந்தோம்; இன்னும் கொஞ்ச தூரம் சென்று, அதையும் பார்த்து விட்டுத்தான் போகலாமே! இளவரசர் மதுராந்தகருக்கு ஆபத்துச் சமயத்தில் கை கொடுத்து உதவினால், அதன் மூலம் பிற்பாடு எவ்வளவோ காரியங்களுக்குச் சாதகம் ஏற்படலாம்.

குதிரையை வாய்க்காலின் கரையிலிருந்து பக்கத்து வயல் வரப்பில் வந்தியத்தேவன் இறக்கினான். குதிரை நின்றதாகத் தோன்றிய களத்து மேட்டை நோக்கிச் செலுத்தினான்.

களத்து மேட்டின் சமீபத்தை அடைந்த போது அது ஒரு பெரிய கரிய பூதத்தைப் போல் காட்சி அளித்தது.

இன்னொரு மின்னல்.

மேட்டின் மீது குதிரை நின்றது ஒரு கணம் தெரிந்தது. குதிரையின் பேரில் ஆள் இல்லை என்பதை வந்தியத் தேவன் கவனித்துக் கொண்டான்.

இடி இடித்தது!

இடிக்கும் மின்னலுக்கும் பயந்து தானோ என்னமோ அந்தக் குதிரை மறுபடியும் தெறிகெட்டுப் பாய்ந்து ஓடத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து போவதில் இனி ஒரு பயனுமில்லை.

பக்கத்தில் எங்கேயாவது குதிரை மேலிருந்து விழுந்த மதுராந்தகத் தேவர் ஒரு வேளை இருக்கக் கூடும்.

ஆகையால், வந்தியத் தேவன், பல முறை குரல் கொடுத்துப் பார்த்தான். "ஜிம் ஜிம்" "ரிம் ரிம்" என்னும் மழை இரைச்சலை மீறி அவனுடைய இடி முழக்கக் குரல் "அங்கே யார்?" "அங்கே யார்?" என்று எழுந்தது. நாலாபுறத்திலிருந்தும் "அங்கே யார்?" "அங்கே யார்?" என்ற எதிரொலிதான் கேட்டது.

மழை மேலும் வலுத்துக் கொண்டிருந்தது. வாடைக்காற்று விர் என்று அடித்தது. காற்றின் வேகத்தினால் மழைத் தாரைகள் பக்கவாட்டில் திரும்பித் தாக்கின. குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது. வந்தியத் தேவனுடைய உடம்பும் மழையினால் தாக்கப்பட்டுக் குளிரினால் நடுங்கத் தொடங்கியது.

இனி அங்கே நிற்பதில் ஒரு பயனுமில்லை. வந்தியத் தேவன் குதிரையை வந்த வழியே திருப்பினான். தன்னுடைய அறிவீனத்தை எண்ணி வருந்தப்பட்டுக் கொண்டே வந்தான். இனிமேலாவது இத்தகைய அசட்டுக் காரியங்களில் இறங்காமலிருக்க வேண்டும். நம்முடைய காரியம் உண்டு, நாம் உண்டு என்று பார்த்துக் கொண்டு போக வேண்டும்....

குதிரை தன்னுடைய உள்ளுணர்ச்சியைக் கொண்டு வழி கண்டு பிடித்து இடிந்த மண்டபத்துக்கு அருகில் வந்து நின்று ஒரு கனைப்புக் கனைத்தது; அப்போதுதான் வந்தியத்தேவன் சிந்தனை

உலகத்திலிருந்து இந்த உலகத்துக்கு வந்தான். குதிரை மீதிருந்து இறங்கினான். அவன் உடுத்தியிருந்த துணிகள் சொட்ட நனைந்து போயிருந்தன. அவற்றை உலர்த்தியாக வேண்டும். அன்றிரவு அந்த இடிந்த மண்டபத்தில் தானும் குதிரையும் தங்கியிருப்பதற்கு இடியாத பகுதி ஏதேனும் இருக்கிறதா என்று சுற்று முற்றும் பார்த்தான்.

வெட்ட வெளியில் கொட்டுகின்ற மழையில் காலிலே நெருப்புச் சுட்டால் எப்படியிருக்கும்? அவ்வாறு வந்தியத்தேவன் துள்ளிக் குதிக்க நேர்ந்தது. அதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. பேயில்லை, பிசாசில்லை; ஒரு சின்னஞ் சிறு குழந்தையின் குரல்தான்!

"அம்மா! அம்மா!"

பேயில்லை, பிசாசில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? அந்த வேளையில் அந்த மண்டபத்தில், குழந்தைக் குரல் எப்படிக் கேட்க முடியும்?

அது பேய் பிசாசின் குரல் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

சீச்சீ! பேயும் இல்லை; பிசாசும் இல்லை! பேயும் பிசாசும் பயப்பிராந்தி கொண்ட பேதைகளின் கற்பனை!

"அம்மா! அம்மா! ஊம்! ஊம்!" இது மனிதக் குழந்தையின் குரல்தான்! தாயைப் பிரிந்த சேயின் பயங் கலந்த அழுகைக் குரல்தான்!

இடிந்த மண்டபத்தின் இருளடைந்த பகுதியிலிருந்து வருகிறது.

குழந்தை மட்டுந்தான் இருக்கிறதா? வேறு யாரும் இல்லையா?

"அம்மா! அம்மா! ஊம்! ஊம்!"

குரல் வந்த இடத்துக்குச் சமீபத்தில் சென்று வந்தியத்தேவன் "யார் அங்கே?" என்றான்.

"யார் அங்கே?" என்று குழந்தையின் குரல் எதிரொலித்தது.

"நான்தான்! நீ யார்? இருட்டில் என்ன செய்கிறாய்! வெளியே வா!"

"வெளியில் மழை பெய்கிறதே!"

"மழை நின்று விட்டது; வா!"

"என் அம்மா எங்கே?"

"அம்மா உனக்குப் பால் வாங்கிக் கொண்டு வரப் போயிருக்கிறாள்."

"இல்லை; நீ பொய் சொல்கிறாய்!"

"நீ வெளியில் வருகிறாயா? நான் உள்ளே வரட்டுமா!"

"உள்ளே வந்தால் என் கையிலே கத்தி யிருக்கிறது; குத்தி விடுவேன்!"




"அடே அப்பா! பெரிய வீரனா யிருக்கிறாயே? வெளியில் வந்துதான் குத்தேன்!"

"நீ யார்? புலி இல்லையே?"

"நான் புலி இல்லை; குதிரை!" என்றான் வந்தியத்தேவன்.

"நீ பொய் சொல்லுகிறாய்; குதிரை பேசுமா?"

"புலியா யிருந்தால் பேசுமா?"

"வெளியில் வந்தால் புலி இருக்கும், ஒரு வேளை மேலே பாய்ந்து விடும் என்று அம்மா சொன்னாள்."

"நான் புலி இல்லை; உன் பேரில் பாயவும் மாட்டேன்; பயப்படாமல் வெளியே வா!"

"பயமா? எனக்கு என்ன பயம்?" என்று சொல்லிக் கொண்டே ஒரு சின்னஞ் சிறு குழந்தை இடிந்த மண்டபத்திலிருந்து வெளியே வந்தது.



இதற்குள் மழை நன்றாக விட்டுப் போயிருந்தது. மேகங்கள் சிறிது விலகி நட்சத்திரங்களும் தெரிந்தன.

நட்சத்திர வெளிச்சத்தில் அக் குழந்தையை வந்தியத்தேவன் பார்த்தான்.

சுமார் நாலு வயது இருக்கும்.

தெரிந்த வெளிச்சத்தைக் கொண்டு வெகு இலட்சணமான குழந்தை என்று தெரிந்து கொண்டான்.

இடுப்பில் ஒரு சிறிய பட்டுத் துணி உடுத்தியிருந்தது. கழுத்தில் ஒரு ரத்தின மாலை அணிந்திருந்தது.

பெரிய குலத்துக் குழந்தையாகவே இருக்க வேண்டும். இதை இங்கே தனியாக விட்டு விட்டுப் போன தாய் யார்? இங்கே எதற்காக வந்தாள்? ஏன் குழந்தையை விட்டு விட்டுப் போனாள்?

இதற்குள் குழந்தையும் வந்தியத் தேவனை உற்றுப் பார்த்து விட்டு, "நீ குதிரை இல்லை; மனிதனைப் போல்தான் இருக்கிறாய்!" என்றது.

"அதோ குதிரையும் இருக்கிறது. பார்!" என்றான் வந்தியத் தேவன்.

குழந்தை குதிரையைப் பார்த்தது.

"ஓகோ! எனக்காகத்தான் கொண்டு வந்திருக்கிறாயா? பல்லக்கு வரும் என்றல்லவா சொன்னார்கள்?"

சிறுவனின் மறுமொழி வந்தியத் தேவனுடைய மனதில் பற்பல முரண்பட்ட எண்ணங்களை உண்டாக்கின. இந்தக் குழந்தை யார்? இவன் ஏன் இங்கே தனியாயிருக்கிறான்? இவ்வளவு சின்னஞ் சிறு பிள்ளை இப்படிச் சற்றும் பயப்படாமல் இருக்கிறானே, இது ஆச்சரியமல்லவா? இவனுக்காக யார் பல்லக்கு அனுப்புவதாகச் சொல்லியிருந்தார்கள்? அது ஏன் வரவில்லை? இவனை விட்டு விட்டுப் போன இவன் அம்மா யார்? அவள் எங்கே போயிருக்கிறாள்?

"குழந்தை! உன்னை ஏன் உன் அம்மா விட்டு விட்டுப் போய் விட்டாள்?" என்று கேட்டான்.

"அம்மா என்னை விட்டு விட்டுப் போகவில்லை; நான்தான் அவளை விட்டு விட்டு வந்து விட்டேன்!" என்றான் அந்தச் சிறுவன்.

"ஏன் விட்டு விட்டு வந்தாய்?"

"குதிரை ஒன்று ஓடிவந்தது. அதைப் பிடித்து அதன்மேல் ஏறிக்கொண்டு வர

லாம் என்று நான் சொன்னேன். அம்மா கூடாது என்றாள். நான் அவளுக்குத் தெரியாமல் குதிரையைப் பிடிக்க ஓடி வந்தேன். அந்தக் குதிரைதானா இது?''

''இல்லை; இது வேறு குதிரை! அப்புறம், எப்படி இங்கே வந்தாய்?''

''குதிரை அகப்பட வில்லை. அம்மாவையும் காணவில்லை. மழை அதிகமாக வந்தது. அதற்காக இந்த மண்டபத்துக்குள் வந்தேன்.''

''இருட்டில் தனியாக இருக்க உனக்குப் பயமா யில்லையா?''

''பயம் என்ன? தினம் தினம் இந்த மாதிரிதானே இருக்கிறேன்?''

''புலிக்குக்கூடப் பயமில்லையா?''

''அம்மாவுக்குத்தான் பயம். எனக்குப் பயம் இல்லை. நான் மீன். புலியை விழுங்கி விடுவேன்.''

''அடே! மீன் புலியை விழுங்குமா?''

''நான் சாதாரண சின்ன மீன் இல்லை! பெரிய மகர மீன்; திமிங்கலம்! புலி, சிங்கம், யானை எல்லாவற்றையும் விழுங்கி விடுவேன்!......''

வந்தியத் தேவன் மனதில் என்ன வெல்லாமோ எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்தன. புலியை விழுங்கும் மீன் அதிசயமான மீன் அல்லவா! இப்படி யார் இந்தப் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுத்திருப்பார்கள்?

''அதோ அங்கே என்ன சத்தம்?'' என்று கேட்டான் சிறுவன்.

**வ**ந்தியத்தேவன் பார்த்தான். தூரத்தில் ஒரு கூட்டம் வந்து கொண்டிருந்தது. கூட்டத்தில் சிலர் தீவர்த்திப் பந்தங்களை வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் ஒரு பல்லக்கும் தெரிந்தது. எல்லாரும் பரபரப்புடன் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு பெண் பிள்ளையும் இருந்ததாகத் தோன்றியது. ''அங்கே!'' ''இங்கே!'' ''அதோ!'' ''இதோ!'' என்ற கலவரமான குரல்கள் கேட்டன.

இடிந்த மண்டபத்தைக் கூட்டத்தில் ஒருவன் பார்த்துச் சுட்டிக் காட்டினான். அவ்வளவுதான்; எல்லாரும் அம் மண்டபத்தை நோக்கி ஓட்டம் பிடித்து ஓடி வந்தார்கள்.

''அதோ வருகிறார்கள். பல்லக்கும் வருகிறது. எனக்குப் பல்லக்கில் ஏறப் பிடிக்கவில்லை. என்னை உன் குதிரையின்மேல் ஏற்றிக் கொண்டு போகிறாயா?'' என்று சிறுவன் கேட்டான்.

அந்தக் குழந்தையின் முகமும் தோற்றமும் பேச்சுக்களும் வந்தியத் தேவனுடைய மனதைக் கவர்ந்தன. அவனைக் கட்டி அணைத்துத் தூக்கிக் கொள்ளலாம் என்று தோன்றியது. ஆனால், மனதிற்குள் ஏதோ ஒரு தடங்கலும் கூடவே ஏற்பட்டது.

''எனக்கு வேறு அவசர வேலை இருக்கிறதே!'' என்றான் வந்தியத் தேவன்.

''நீ எங்கே போகப் போகிறாய்?''

''காஞ்சிக்கு!''

''காஞ்சிக்கா! அங்கேதான் என்னுடைய முக்கிய சத்துரு இருக்கிறான்!''

வந்தியத் தேவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவ்விடம் அந்தப் பிள்ளையின் அருகில் தான் நிற்பதுகூடப் பிசகு என்று எண்ணினான். ஆனால் குதிரையின்மேல் ஏறிப் போவதற்கும் அவகாசம் இல்லை. கூட்டம் வெகு அருகில் வந்து விட்டது. ஓடினால் சந்தேகத்துக்கு இடமாகும். இவ்வளவுடன், என்னதான் நடக்கப் போகிறது என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் வந்தியத் தேவனைப் பற்றி யிருந்தது. ஆகையால் சற்று ஒதுங்கிச் சென்று இடிந்த சுவர் ஓரமாக இருட்டில் நின்றான்.

''இதோ நான் இருக்கிறேன்'' என்று முன்னால் போய் நின்றான் சிறுவன்.

வந்தவர்களிலெல்லாம் முதலில் வந்தவள் ஒரு பெண் பிள்ளை. அவளுக்கு ஓடி வந்ததினால் இரைத்துக் கொண்டிருந்தது. அதை அவள் பொருட்படுத்தாமல் தாவி வந்து குழந்தையை எடுத்துவாரி அணைத்துக் கொண்டு ''பாண்டியா! இப்படிச் செய்து விட்டாயே?'' என்றாள்.

அவளுக்கு அடுத்தபடியாக வந்தவன் ரவிதாஸன். அவன் சிறுவனின் பக்கத்தில் வந்து நின்று ''சக்கரவர்த்தி! இப்படி எங்களைப் பயமுறுத்தி விட்டீர்களே?'' என்றான்.

சிறுவன் சிரித்தான். ''அப்படித்தான் பயமுறுத்துவேன். நான் குதிரை வேண்டும் என்று கேட்டேன். பல்லக்குக் கொண்டு வந்திருக்கிறீர்களே!'' என்றான்.

நாம் முன்னம் பார்த்திருக்கும் சோமன் சாம்பவன், இடும்பன்காரி, தேவராளன் முதலியவர்கள் சிறுவனை வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

''சக்கரவர்த்தி! ஒரு குதிரை என்ன? ஆயிரம் குதிரை, பதினாயிரம் குதிரை கொண்டு வருகிறோம். இன்றைக்கு இப் பல்லக்கில் ஏறிக் கொள்ளுங்கள்!'' என்றான் சோமன் சாம்பவன்.

"மாட்டேன்; நான் அந்தக் குதிரை மேலே தான் ஏறி வருவேன்" என்று சிறுவன் கூறிச் சுவர் மறைவில் நின்ற குதிரையைச் சுட்டிக் காட்டினான்.

அப்போதுதான் குதிரையையும் அதன் அருகில் நின்ற வந்தியத் தேவனையும் அவர்கள் கவனித்தார்கள்.

ரவிதாஸன் முகத்தில், வியப்பும், திகிலும் குரோதமும் கொழுந்து விட்டு எரிந்தன.

இரண்டு அடி முன்னால் சென்று "அட பாவி! நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்?" என்று கேட்டான்.

"அட பிசாசே! கோடிக் கரையிலிருந்து நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று கேட்டான் வந்தியத் தேவன்.

ரவிதாஸன் 'ஹா ஹா ஹா' என்று சிரித்தான். "நீ என்னை உண்மையாகவே பிசாசு என்று நினைத்துக் கொண்டாயா?" என்று கேட்டான்.

"சிலர் செத்துப் போன பிறகு பிசாசு ஆவார்கள். நீ உயிரோடிருக்கும் பிசாசு!" என்றான் வந்தியத்தேவன்.

இதற்குள் சிறுவன், "அவனோடு சண்டை போடாதே! அவனை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. இருட்டில் அவன் எனக்குத் துணையாயிருந்தான். புலி வந்தால் கொன்று விடுவதாகச் சொன்னான். அவனும் நம்மோடு வரட்டும்" என்றான்.

ரவிதாஸன் சிறுவன் அருகில் சென்று, "சக்கரவர்த்தி! அவசியம் அவனையும் அழைத்துப் போகலாம். தாங்கள் இன்றைக்கு ஒரு நாள் பல்லக்கில் ஏறிக் கொள்ளுங்கள்!" என்றான்.

சிறுவன் அவ்வாறே பல்லக்கை நோக்கிச் சென்றான்.

ரவிதாஸன் வந்தியத் தேவனை மறுபடியும் நெருங்கி "இப்போது என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான்.

"நீயல்லவா சொல்ல வேண்டும்?"

"எங்களுடன் வந்து விடு! எங்களுடைய இரகசியம் உனக்கு முன்னமே அதிகம் தெரியும். இப்போது இன்னும் அதிகமாகத் தெரியும். உன்னை விட்டு விட்டு நாங்கள் போக முடியாது. வந்து விடு!"

"உங்களுடன் நான் வர மறுத்தால்?..."

"முடியாத காரியம். நீ பெரிய சூரன் என்பதை அறிவேன். ஆயினும் நாங்கள் இருபது பேர் இருக்கிறோம். எங்களைத் தப்பி நீ போக முடியாது."

"உயிரோடு தப்ப முடியாது என்று தானே சொல்கிறாய்?"

"நீ இளம்பிராயத்தவன். உலகத்தின் சுகங்கள் ஒன்றையும் அநுபவியாதவன். எதற்காக வீணுக்கு உயிரை விட வேண்டும்?"

"வீணுக்கு யார்தான் உயிரை விடுவார்கள்? உங்களுடன் வரச் சொல்கிறாயே? எங்கே கூப்பிடுகிறாய்? நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

"அப்படிக் கேள், சொல்கிறேன். பழுவூர் இளைய ராணியிடந்தான்!"

"ஓகோ! அப்படித்தான் நினைத்தேன். இளைய ராணி இன்று எங்கே இருக்கிறாள்?"

"இளையராணி இத்தனை நேரம் திருப்புறம்பயத்துக்கு வந்திருப்பாள். நீ வருவாயா, மாட்டாயா?"


"நானும் அந்தப் பக்கந்தான் போக வேண்டும். வழிகாட்ட யாரும் இல்லையே என்று பார்த்தேன். நல்ல வேளையாக நீ வந்து சேர்ந்தாய்! போகலாம், வா!" என்றான் வந்தியத்தேவன்.

இதற்குள் சிறுவன் பல்லக்கில் ஏறிக் கொண்டான். பல்லக்கு நகர்ந்தது. அதைச் சுற்றிலும் தீப்பந்தங்களைப் பிடித்துக் கொண்டும் பலவித கோஷங்களை எழுப்பிக் கொண்டும் ரவிதாஸனுடைய கோஷ்டியார் சென்றார்கள்.

வந்தியத்தேவனும் அவர்களைத் தொடர்ந்து சென்றான். அவன் உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் அலைபாய்ந்தன. வானதியின் கதி என்ன? தெரியவில்லை. மதுராந்தகர் என்ன ஆனார்? தெரியவில்லை. தன்னுடைய கதி இன்றிரவு என்ன ஆகப் போகிறது? அதுவும் தெரியவில்லை.

கடம்பூர் மாளிகையில் அன்று கண்டறிந்த சதிச் செயலைவிடப் பன்மடங்கு பயங்கரமான சதிச் செயலைப் பற்றி இன்று நேர்முகமாக அறிந்து கொள்ளப் போகிறோம் என்பதில் சந்தேகமில்லை. அந்தவரையில் பிரயோஜனகரமானதுதான். ஆனால் அதற்குப் பிறகு என்ன நடக்கும்? தன்னை உயிரோடு தப்பிச் செல்ல இவர்கள் விடுவார்களா? இவர்களோடு சேர்ந்து விடும்படி தன்னையும் கட்டாயப் படுத்துவார்கள். மாட்டேன் என்று சொன்னால், பலியிடத்தான் பார்ப்பார்கள். ஒருவேளை மறுபடியும் நந்தினியின் தயவினால்......

பழுவூர் இளையராணியின் பெயரை ரவிதாஸன் கூறியதும் அவர்களுடன்





தேசமெங்கும் பொதுவாக விலை வாசிகள் இறங்கி வருகின்றன. இதற்குக் காரணம் திறமையான நல்ல அரசாங்க நிர்வாகந் தான் என்று கருதப்படுகிறது.


போகத் தான் இணங்கிவிட்டதை வந்தியத்தேவன் நினைத்துப் பார்த்தான். அது அவனுக்கே வியப்பை அளித்தது. 'மாயை' என்றும், 'மோகம்' என்றும் பெரியோர்கள் சொல்வது இதைத்தான் போலும். அவள் எவ்வளவு பயங்கரமான சதிச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரிந்து தானிருந்தது. ஆயினும் அவளைச் சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்றால், அதைப் பயன் படுத்திக் கொள்ள அவன் மனதில் ஓர் ஆர்வம் எழுந்தது. அடக்க முடியாமல் தன்னை மீறி எழுந்தது. யோசித்துப் பார்ப்பதற்கு முன்னால் அவன் வாய் 'வருகிறேன்' என்று பதில் சொல்லி விட்டது...... ஆனால் வேறு வழிதான் என்ன? ரவிதாஸன் கூறியதுபோல் இத்தனை பேருடன் தன்னந் தனியாகச் சண்டையிடுவது சாத்தியமில்லை. சிறிது அவகாசம் கிடைத்தால், தப்பிச் செல்வதற்கு ஏதேனும் ஓர் உபாயம் தென்பட்டாலும் தென்படலாம். அத்துடன், இந்தச் சதிகாரக் கூட்டத்தைப் பற்றியும் இவர்களுடைய நோக்கங்களைப் பற்றியும் இன்னும் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

"காஞ்சிக்கா போகிறாய்? அங்கே தான் என்னுடைய முக்கிய சத்துரு இருக்கிறான்!" என்று அந்தச் சின்னஞ்சிறு குழந்தை மழலை மொழியில் கூறியது அடிக்கடி வந்தியத் தேவனுக்கு நினைவு வந்து கொண்டிருந்தது. அந்தச் சிறுவன் யார்? அவனைச் "சக்கரவர்த்தி" என்று இவர்கள் அழைப்பதேன்? "முக்கிய சத்துரு" என்று அச்சிறுவன் யாரைக் குறிப்பிட்டான்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவனுடைய மனதில் பதில்களும் தோன்றிக் கொண்டிருந்தன. நினைக்க நினைக்க, பயங்கரம் அதிகமாகிக் கொண்டிருந்தது. கடவுளே! இவற்றுக்கெல்லாம் முடிவு எப்போது? "வெகு சீக்கிரத்தில்" என்று அவனுக்குள் ஒரு குரல் சொல்லியது.

அந்த அதிசய ஊர்வலம் போய்க் கொண்டே யிருந்தது. வயல்கள், வாய்க் கால்கள், வரப்புகள், காடு மேடுகளைத் தாண்டி ஒரு கணமும் நிற்காமல் போய்க் கொண்டிருந்தது, கடைசியாக, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிய மண்ணி நதியையும் தாண்டி அப்பால் திருப்புறம்பயம் எல்லையை அடைந்தது. பள்ளிப்படையைச் சுற்றிலும் மண்டியிருந்த காட்டுக்குள்ளும் பிரவேசித்தது.




தி கிராமபோன் கம்பெனி லிமிடெட், கல்கத்தா, பம்பாய், மதராஸ், டில்லி



"சென்னையில் எத்தனையோ ஹோட்டல்கள் இருக்கின்றன. ஆயினும், அம்பீஸ் கபேக்கு இணை ஒன்றுண்டா?" என்ற பெயரும் புகழும் பெற்று விளங்கும் அம்பீஸ் கபே முதலாளி ஸ்ரீ அம்பி அய்யர் தமது அருமைப் புதல்வி சௌ. கல்யாணிக்கும், சிரஞ்சீவி பி. கோபாலன், பி.எஸ்ஸி. டி.எப்.ச். (லண்டன்) கிராட். ஐ.இ.இக்கும் 4-6-1952ல் கீழ்ப்பாக்கம் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடத்தி வைத்தார். திருமணத்துக்கு ஏராளமான பிரமுகர்களும் பிரபலஸ்தர்களும் மந்திரிகளும் ஜட்ஜ்மார்களும் விஜயம் செய்து சிறப்பித்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். அன்று மாலை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இன்னிசை விருந்தும் நடந்தேறியது. மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும் வாழ்த்துகளும் வந்து குவிந்தன!




அறிவாளி! ஸெவன் ஓ' கிளாக் ஸ்லாட்டெட் பிளேடுகளினால் தினசரி முகத்தை க்ஷவரம் செய்து கொள்கிறார்.



# ஸெவன் ஓ' கிளாக்
## ஸ்லாட்டெட் பிளேடுகள்

முகத்தைச் சுத்தமாக க்ஷவரம் செய்திருப்பது முன்னேற்றத்தின் அறிகுறியாகும். ஆனால் தினசரி க்ஷவரம் செய்து வருதல் அவசியம். நாவிதனைக் கொண்டு க்ஷவரம் செய்வதால் அதிகச் செலவு நேரிடும்.

ஆனால், மிகவும் சிக்கனமான முறையில், சுத்தமாக க்ஷவரம் செய்து கொள்வதற்கு ஸெவன் ஓ' கிளாக் பிளேடுகள் கிடைத்திருப்பது ஓர் அதிர்ஷ்டமே. ஸெவன் ஓ' கிளாக் பிளேடுகள் அதி கூர்மையானவை, சுத்தமாக க்ஷவரம் செய்பவை, நெடுநாள் உழைப்பவை, உண்மையான சிக்கனம் வாய்ந்தவை.

வெற்றியடைந்த, வசீகரத் தோற்றமுடைய, மனிதர்களோடு சேர்ந்து கொள்ளுங்கள்! தினசரி ஸெவன் ஓ' கிளாக் பிளேடுகளினால் க்ஷவரம் செய்யுங்கள்.

# 7 o'clock

ஸெவன் ஓ' கிளாக் ஸ்லாட்டெட் பிளேடுகள்



10 பிளேடுகள் கொண்ட பாக்கெட் ரூ. 1

# மனோரதம்

**பகீரதன்**

மனிதர்களாகப் பிறந்த எல்லாருக்கும் ஏதாவது ஒரு மனோரதம் இருக்கிறது. சிலருக்கு உழைத்துப் பாடுபட்டு உயர வேண்டும் என்று மனோரதம் இருக்கிறது. சிலருக்கு உழைக்காமலே உயர வேண்டும் என்ற மனோரதம் இருக்கிறது. சிலருக்குப் பணம் சேர்க்க வேண்டும் என்ற மனோரதம் இருக்கிறது. அதற்காக எந்த வழியிலாவது எப்பாடு பட்டாவது தங்கள் மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்ள முயலுகின்றனர். சிலருக்குத் தாங்கள் காதலித்த காரிகையையோ அல்லது இளைஞனையோ கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று மனோரதம் இருக்கிறது. அதற்காக எந்தக் கஷ்டத்தையும் படத் தயாராக இருக்கிறார்கள். எதை வேணுமானாலும் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறார்கள்.

ஆனால் எல்லாருடைய மனோரதமும் நிறைவேறி விடுகிறதா! இல்லை. ஒரு சிலருடைய மனோரதம் தான் நிறைவேறுகிறது.

புண்ணியகோடி என்ற கனவான் தம் மகனையும் பொருளையும் ஜாதிலிங்கம் என்ற கொடியோனுக்குப் பலியிட்டு விடுகிறார். தம் அருமை மகனையும் கண்களையும் இழந்து விட்ட அவருக்கு அவர் மகன் தியாகுவும் பேத்தி ஜயந்தியும் ஆறுதலாயிருக்கின்றனர். ஜயந்தியும் தியாகுவும் காதல் புரிகின்றனர். வழக்கம் போலவே அவர்கள் காதலுக்கு இடையூறுகள் வருகின்றன. ஜாதிலிங்கத்தின் மருந்து வியாபாரத்தின் மோசடிக்கு உடந்தையாக இருந்து வரும் கொள்ளைக்கார ரௌடி நாகராஜன் தான் ஜயந்தியைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான். தியாகுமீது திருட்டுப் பட்டம் சூட்டி அவனைச் சிறையில் தள்ளுகிறான். ஜயந்தியைத் தனக்குத் தர மறுத்த ஜாதிலிங்கத்தையும் போலீசுக்குக் காட்டிக் கொடுத்து விடுகிறான். அவன் ஊழல் வெளிப்படுகிறது. தியாகு விடுதலையடைகிறான். ஜயந்திக்கும் தியாகுவுக்கும் திருமணம் நடக்கிறது. அவர்கள் மனோரதம் நிறைவேறுகிறது. நாகராஜன் தங்கை புஷ்பா ஒரு வெகுளி. அவள் ஆனந்தன் என்ற வாலிபனைக் காதலிக்கிறாள். அந்தக் காதலுக்கும் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. வீட்டை விட்டு வெளியேறித் தன் காதலனைப் பதிவுத் திருமணம் செய்து கொள்ளுகிறாள். அவளிடம் இருந்த பணத்தையும் நகையையும் பிடுங்கிக் கொண்டு வயிற்றுப் பிள்ளையோடு துரத்தி விடுகிறான் ஆனந்தன். புஷ்பாவுக்குக் குழந்தை பிறக்கிறது. திருந்திய வாலிபனாக வருகிறான் ஆனந்தன். வெகுளிப் புஷ்பாவின் மனோரதமும் நிறைவேறுகிறது.



"நடிப்புக் கலை சொல்லிக் கொடுத்து வராது ஸார்!"

இவ் விரு சிக்கல் நிறைந்த காதல் மனோரதங்களையும் அடிப்படையாகக் கொண்டதுதான் "மனோரதம்" என்ற நாடகம்.

இந் நாடகத்தை எழுதிய இளம் நாடக ஆசிரியர் ஸ்ரீ டி. கே. கோவிந்தன், தாம் ஒரு நாடகத்தை எழுதி அதைக் "கல்கி" ஆசிரியர் தலைமையில் நடத்த வேண்டும் என்று பத்து வருஷங்களாக நினைத்து வந்தாராம். அவருடைய நீண்டகால மனோரதமும் ஈடேறி விட்டது!


நாடகத்தை ஹாஸ்யமாகவும், உணர்ச்சி மிக்கதாயும், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்ததாயும் எழுதியிருக்கிறார். ஆங்காங்கு தற்போது சமூகத்தில் நடந்து வரும் பற்பல நிகழ்ச்சிகளை ஹாஸ்யத்தோடு புகுத்தியிருக்கிறார். இதன் மூலம் நாடகக் கலைக்கு ஒரு நல்ல தொண்டாற்றியிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த நாடகத்தில் நடித்தவர்கள் பெரும்பாலும் தொழில் நடிகர்கள் அல்ல. பல்வேறு தொழில் ஸ்தாபனங்களில் நல்ல உத்தியோகத்தில் இருப்பவர்கள். "கருணை விலாச சபா" என்ற நாடக சபையில் அங்கம் வகிப்பவர்கள். இவர்கள் அம்பத்தூர் "கலா மண்டலி"யின் ஆதரவில் ராயலசீமைப் பஞ்ச நிவாரண நிதிக்காக மேற்படி "மனோரதம்" என்ற நாடகத்தில் நடித்தார்கள். இது சென்ற மூன்றாம் தேதியன்று சென்னை மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் நடந்தது.

நாடகத்தில் நடித்த எல்லாருமே நன்றாக நடித்தார்கள். என்றாலும் ஒரு சிலரின் நடிப்பு மனத்தை விட்டு அகலவே இல்லை.

ரௌடி நாகராஜனாக நடித்த ஸ்ரீ ஒய். ஜி. பார்த்தசாரதி அவர்களின் நடிப்பு பிரமாதம். "அப்பப்பா! இப்படிப்பட்ட கொடிய காரியங்களையும் ஒரு படித்த நாகரிகமான வாலிபன் செய்ய முடியுமா!" என்று கருதும்படி செய்து விட்டார். நகரில் நாகரிகமாக சூட்டு கோட்டு முதலியவைகளை அணிந்து செல்பவர்களைப் பார்த்தால் "அடாடா! இவர் எந்த விதத்தில் கொள்ளையடித்து அந்தப் பணத்தில் இப்படி நாகரிகமாகச் செல்லுகிறாரோ" என்று எண்ணும்படி செய்து விட்டார். தன்னுடைய மோசடிகளை மறைப்பதற்காக யோக்கியன்போல் நடிக்க வேண்டியிருந்தது. அப்போது "நடிப்புக் கலை சொல்லிக் கொடுத்து வராது ஸார்! அது பிறவியிலேயே இருக்க வேண்டும்" என்றார். அது ஸ்ரீ ஒய். ஜி. பார்த்தசாரதி விஷயத்தில் முழுக்க முழுக்க உண்மை. சாதாரணமாக அவரைப் பார்த்தால் இப்படி வெல்லாம் அற்புதமாக நடிப்பவரா என்று எண்ணி வியக்கும்படிதான் இருக்கும்.

இந்த நாடகத்துக்குத் தலைமை வகித்த "கல்கி" ஆசிரியர் கூறினார்: "நீண்டநாளாகப் பட்டணம் ரவுடிகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன்; ஆனால் நேரில்தான் பார்த்ததில்லை.



நல்ல குடும்பத்தை நாசமாக்கத் திட்டம் நடக்கிறது.

இன்று இந்த நாடகத்தில் பார்த்தாகி விட்டது. நாடக மேடையில் பார்த்ததே போதும்; வீதியில் பார்க்காமலிருந்தால் க்ஷேமம்!'' என்று சொன்னதைச் சபையோர் உற்சாகமாக ஆமோதித்தனர்.

ஜயந்தியாக நடித்த ஸ்ரீ பாபுவும், புஷ்பாவாக நடித்த ஸ்ரீ முத்துவும் இந்தக் காலத்து நவநாகரிகப் பட்டணத்துப் பெண்களைப் போலவே நடித்தார்கள். ஆண்களே பெண் வேடம் தாங்கி நடிப்பது அவ்வளவு சிறப்பாக இருக்காது என்றாலும் அவர்கள் இருவரும் அவர்கள் ஏற்றுக் கொண்ட பாத்திரத்துக்குப் பொருத்தமாகவே இருந்தார்கள். இவர்களைப் பார்த்தபோது காதல் என்றும் பதிவுத் திருமணம் என்றும் சொல்லித் திரியும் பலர் நம் கண்முன் வந்து நின்றார்கள். காதலையும் பதிவுத் திருமணத்தையும் பார்த்துப் பயப்படும்படி செய்து விட்டார்கள்.

கதாநாயகன் கோபாலுவாக வந்த ஸ்ரீ கண்ணப்பா கச்சிதமாக நடித்தார். கணீரென்று பேசி, கலகல வென்று கண்ணீர் விட்டு, பார்ப்போர் மனத்தைக் கரையும்படி செய்து விட்டார். நம் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையுடன் உண்மைக்காகவும் நேர்மைக்காகவும் பாடுபட்டால் அது கடைசியில் நல்ல பலனையே கொடுக்கும் என்பதைச் சபையோர் உணரும்படியாகச் செய்து விட்டார்.

தன் சகோதரியின் மகள், சகல சௌகர்யங்களுடன் வாழும் ஜயந்தியின் மீது தான் அன்போடு இருப்பது தெரிந்து விட்டால் அதனால் எங்கே தன் குடிசைக்கு வந்து கஷ்டப்படுவாளோ என்று எண்ணி அவள் ஆசையோடு கொண்டு வந்த பட்சணங்களைப் படார் என்று தட்டி, சிறிதுகூட அன்பில்லாததுபோல நடித்தது அபாரமாயிருந்தது.

ஆனந்தன் என்ற வீரத் தமிழன் வேஷத்தில் வந்த ஸ்ரீ பட்டு, ஒரு முதல்தர நடிகர். அவர் தமிழனின் பெருமையையும், காதலின் சிறப்பையும் எடுத்துப் பேசியபோதுதான் காதலும் தமிழனும் ஏன் உயரவில்லை என்பதைச் சபையோர் நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.

தன் பதிவுத் திருமணக் காதலியுடன் தனி வாழ்க்கை நடத்தியபோது காதலியின் கையிலிருந்த பணமும் அவள் கழுத்தில் கிடந்த நகைகளும் சிறிது காலம் உதவி புரிந்தன. அவை போன பிறகு மேலே என்ன செய்வது என்று தெரியாமல் உட்கார்ந்து விடுகிறான். பதிவுத் திருமண மனைவி "எங்கேயாவது வேலைக்குப் போகக் கூடாதா!'' என்று கேட்கிறாள்.

வீரத் தமிழனுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வருகிறது. "ஹா! ஒரு கணவனைப் பார்த்து மனைவி வேலைக்குப் போகச் சொல்லுவதா! வீரத் தமிழன் ஒருவனிடம் கைகட்டி வேலை செய்வதா! நாடாண்ட தமிழன் வேலை செய்யலாமா! கங்கையும் கடாரமும் கொண்ட சோழ மன்னனின் பரம்பரையில் வந்த தமிழன், வீரபாண்டியனின் வழியில் வந்த தமிழன், சேரன் செங்குட்டுவனின் வம்சத்தில் வந்த தமிழன் வேலை செய்யலாமா!'' என்று கேட்டுச் சபையோரைச் சிரிக்கச் சிரிக்க அடித்து விட்டார்!

இன்னும் இதுபோல ஒவ்வொரு நடிகரும் எத்தனையோ ஹாஸ்ய அணுகுண்டுகளைத் தூக்கிப் போட்டுக்கொண்டே இருந்தனர். கொலைகார நாகராஜனைக் கைது செய்ய வந்த போலீஸ்காரனுக்கு அவன் லஞ்சம் கொடுக்க முயலுகிறான். "ஐயா! இது பழைய காலமில்லை. ராஜாஜி சர்க்கார்!'' என்று அந்தப் போலீஸ்காரர் சொன்னபோது கொட்டகைக்கு வெளியில் இருந்தவர்கள்கூட ஹாலின் கூரையைத் தடதட வென்று தட்டி ஆரவாரித்தனர்.

பட்டாளம் என்று ஒரு வேலைக்காரன் வருகிறான். தோளில் கிடந்த துண்டை எடுத்துக் கீழே போட்டு விட்டு, "மேடைமீது ஏறி வீர கர்ஜனை செய்கிறார்களே, அவர்கள் ஒரு நாளைக்கு என் வேலையைச் செய்து பார்க்கட்டும்!'' என்று கர்ஜனை செய்கிறான். "அவர்கள் உன் வேலையைப் பார்த்தால் நீ என்ன செய்யப் போகிறாய்!'' என்று கேட்டதற்கு "நான் தேர்தலுக்கு நிற்கப் போகிறேன்!'' என்கிறான்.

நாகராஜனின் தந்தையாக வரும் உலகநாதம் பிள்ளையிடம் நாகரிகமாக உடை அணிந்த வாலிபன் ஒருவன் வருகிறான். தன் தந்தை தாயார் எல்லாரும் பட்டினியாலும் நோயாலும் கஷ்டப்படுவதாகப் பல்லைக் காட்டுகிறான். அவர் "இப்படியெல்லாம் பொய் சொல்லாதே. பணம் வேண்டும் என்று கேள் தருகிறேன்'' என்று சொல்லி ஒரு ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுக்கிறார். அவருடைய பெருந்தன்மையைப் பார்த்துச் சபையோர் வியந்து கொண்டிருக்கும் போதே அதைப் பெற்றுக் கொண்ட வாலிபன் "அடாடா! என்னை விடப் பெரிய ஆள் போலிருக்கிறதே! இது பாகிஸ்தான் நோட்டு!'' என்று சொல்லித் தன் ஏமாற்றத்தை வெளியிடுகிறான். சபை ஒருதரம் குலுங்கச் சிரித்து மகிழ்ந்தது!

இப்படியாகப் பலப் பல ஹாஸ்யத் துணுக்குகள் சேர்ந்து பிரதான நாடகக் கதையை ஓரளவு மறக்கும்படி செய்து விட்டன.

ராயல சீமைப் பஞ்சத்தின் உதவிக்காக நடத்திய இந்த நாடகத்தில் பஞ்சப் பாட்டு ஒன்றும் இல்லை. அதற்குப் பதிலாகச் சில காதல் பாட்டுக்கள் பாடப்பட்டன.

மற்றப்படி நாடகத்தில் எந்தவிதமான ரஸத்துக்கும் பஞ்சம் இல்லை. சபையிலும் ரஸிகத் தன்மைக்கும் பஞ்சமில்லை என்று தெரிந்தது. ஒவ்வொரு ஹாஸ்யத்தையும் ரஸித்துச் சபையோர் சிரித்தும் கையைத் தட்டியும் தள்ளிவிட்டார்கள்.

ஓர் உத்தமமான கைங்கரியத்துக்காக ஒரு நல்ல நாடகத்தை நடத்தி வெற்றி பெற்ற அம்பத்தூர் கலா மண்டலியையும் கருணைவிலாச சபை அங்கத்தினரையும் பாராட்டுகிறோம். நாடகத்தின் மூலம் வசூலான தொகை ரூ. 1,450 ராயலசீமைப் பஞ்ச நிதிக்குச் சேர்க்கப்பட்டதாக அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.




# இடுப்பொடியும் வேலையைத் தவிர்க்கின்றது.

## நூதனம் — சிக்கனம் — திறமை

உங்கள் வீட்டு சம்பந்தமான எல்லா சுத்தமாக்கும் அலுவல்களுக்கும் கோத்ரெஜ் சவுக்காரத் தூள்களை உபயோகியுங்கள். துணிமணிகள், தளங்கள், ஜலதாரைகள், தட்டுமுட்டுச் சாமான்கள் - எல்லாம் ஒரு துடைப்பிலேயே சுத்தப்படுத்தப் படுகின்றன.

இதுதான் சகல வேலைகளுக்கும் பொருத்தமான சலவை சோப். புதிது, கெட்டியானது. பொருத்தமான அளவு. குறைந்த உழைப்பில் மிகுந்த சுத்தத்தைத் தரவல்லது.




**கோத்ரெஜ்** சோப்ஸ், லிட்.

மதராஸ்: 164, பிராட்வே; கொச்சின்: 6/36, கல்வத்தி.




# யாருக்கு அரசுரிமை?

பி. எஸ். எம்.

மகிழுபுரி மன்னன் மிகுந்த கவலையுடன் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தான். அச்சமயத்தில் காவலர்களில் ஒருவன் பணிவுடன் வந்து நின்று, "அரசே! தங்களைக் காண மந்திரி சத்தியசந்தர் வந்திருக்கிறார்" என்று அறிவித்தான். அரசன் சிறிது யோசித்து விட்டுப் பிறகு, "வரச் சொல்" என்று உத்தரவிட்டான்.

மந்திரி சத்தியசந்தர் அரசனை நெருங்கியதும் அவன் முகத்திலிருந்து ஏதோ கவலையில் மூழ்கி யிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டார்.

"அரசே! தங்கள் முகம் பெரிதும் வாட்டமுற்றிருக்கக் காரணம் என்ன?" என்று தயக்கத்துடன் வினவினார் சத்தியசந்தர்.

"மந்திரி, எனக்கோ வயதாகி விட்டது. மூத்தவனுக்குத்தான் ராஜ்யம் ஆள உரிமை உண்டு. ஆனால் தீரவர்மனும் வீரவர்மனும் இரட்டைக் குழந்தைகளாயிற்றே? சம வயதினராயிற்றே? இவர்களில் யாருக்கு அரசுரிமையை அளிப்பது என்பதுதான் என் மனத்தைப் பெரிதும் வாட்டி வருகிறது" என்றான் மகிழுபுரி மன்னன்.

"அரசே! இதற்காகவா கவலைப்படுகிறீர்கள்? இரண்டு இளவரசர்களில் யார் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குகிறாரோ அவனுக்குப் பட்டமளித்து விடலாம் அல்லவா?" என்று கூறினார் சத்தியசந்தர்.

"அது எப்படி முடியும்? இருவரும் ஒரே மாதிரி கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குகிறார்கள். வீர தீரத்திலும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களில்லை. எப்படி அவர்களில் ஒருவனை அரசனாகத் தேர்ந்தெடுப்பது என்பதுதான் எனக்குப் புரியவில்லை" என்றான் அரசன் மிகுந்த கவலையுடன்.

"அரசே! நீங்கள் கவலைப்பட வேண்டாம். என்னிடம் அந்தப் பொறுப்பை விட்டு விடுங்கள். நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று சமாதானப் படுத்தினார் சத்தியசந்தர். மகிழுபுரி மன்னனும் மந்திரியின் வேண்டுகோளுக்குச் 'சரி' என்று தலையசைத்தான்.

ஒரு வாரம் சென்றது. அன்று மகிழுபுரியின் தலைநகரம் திமிலோகப்பட்டது. மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து பந்தய மைதானத்தில் குழுமியிருந்தனர். பல தேசத்து அரசர்களும் சிற்றரசர்களும் வேடிக்கை பார்க்க வந்திருந்தனர். ஆம்! மந்திரி சத்தியசந்தர் இளவரசர்கள் இருவருக்கும் ஒரு போட்டி ஏற்பாடு செய்திருந்தார். அந்தப் போட்டியைக் காணுவதற்கே எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு வந்திருந்தனர்.

காலை இளஞ் சூரியனின் கதிர்கள் இளவரசர்களின் பட்டாடைகளில் பட்டு ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசிக்கச் செய்தன. தீரவர்மனும் வீரவர்மனும் அழகிய இரண்டு குதிரைகளில் பந்தய மைதானத்தை வந்தடைந்தனர். பக்கள் குதூகல ஆரவாரம் செய்து அரச குமாரர்கள் இருவரையும் வரவேற்றனர்.

மந்திரி சத்தியசந்தர் அவ்விரு இராஜகுமாரர்களின் அருகில் வந்து, "அரச குமாரர்களே! நீங்கள் இருவரும் உங்கள் குதிரையிலேறிச் செல்ல வேண்டும். யாருடைய குதிரை

மைதானத்தின் கோடியைக் கடைசியில் மிதிக்கிறதோ அவனே இப்போட்டியில் வெற்றி பெற்றவன். அவனுக்குத்தான் இந்தத் தேசத்து அரச பதவியும் கிடைக்கும்" என்று அறிவித்தார். அவர் தெரிவித்த செய்தியைச் சேவகர்கள் நாலு திசைகளிலும் கேட்கும்படி அறிவித்தனர்.

அரசகுமாரர்களிருவரும் அதற்கு ஒப்புக் கொண்டு குதிரையில் ஏறினார்கள். போட்டி ஆரம்பமாயிற்று. இருவர்களுடைய குதிரைகளும் ஆமை போல் நகர்ந்தன.

நேரம் ஏறிக் கொண்டே யிருந்தது. போட்டி முடியவில்லை. இருவருடைய குதிரைகளும் எறும்பு ஊர்வது போல் ஊர்ந்து சென்றன. "இது என்ன போட்டி? மந்திரி சத்திய சந்தர் இந்தப் போட்டியால் ஒன்றும் யார் சிறந்தவன் என்று தேர்ந்தெடுத்து விட முடியாது" என்று கூட்டத்தில் ஒரு சிலர் முணு முணுத்தனர். மக்கள் களைத்துப் போனாலும் ஆவலினால் அவர்கள் இருந்த இடத்தை விட்டு அகலாமல், வைத்த கண் வைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தனர். ஆம், தங்களுக்கு வரப் போகும் அரசன் யார் என்று தெரிந்து கொள்ள அவர்களுக்கு ஆசை யிராதா, என்ன?


மாலை வந்தது. இளவரசன் தீரவர்மன் பொறுமை இழந்து விட்டான். அவனால் மேலும் குதிரையைச் செலுத்த முடியவில்லை. அவனுக்குப் போட்டி மிகவும் அலுத்து விட்டது போலும்!


அவன் அயர்ந்து போய்க் குதிரையைத் திருப்பி நேராக சத்திய சந்தரிடம் வந்து, "ஐயா! நான் தோற்றேன். தங்கள் போட்டி என் பொறுமையைப் பெரிதும் சோதித்து விட்டது" என்று கோபத்துடன் கூறிவிட்டுப் பந்தய மைதானத்திலிருந்து கண வேகமாகச் சென்று விட்டான்.

பொறுமைசாலியான வீர வர்மனே போட்டியில் வெற்றி பெற்றான் என்ற செய்தி தேசமெங்கும் கண நேரத்தில் பரவியது.

மகிழ்புரி மன்னன் தன்னுடைய கவலை தீர்ந்ததைக் குறித்துப் பெரிதும் சந்தோஷப் பட்டான். தன் கவலையைத் தீர்த்து வைத்த மந்திரி சத்தியசந்தருக்குப் புகழ்மாலை சூட்டினான்; அதோடு மட்டுமல்ல பூமாலையும் சூட்டி மகிழ்வித்தான்.

நல்லநாளில் பொறுமைசாலியான வீர வர்மனுக்கு மகுடாபிஷேகம் செய்து விட்டு மன நிம்மதிக்காக காடு நோக்கிச் சென்றான் மன்னன். மகிழ்புரி மக்கள் அனைவரும் கண்களில் நீர் மல்க நின்று வழியனுப்பினர்.






இன்னொரு விஷயம்: அந்தக் காலத்தில் மரக்கால்களை இரும்பினால் செய்வதில்லை. ஏதோ மரக் கட்டையை எடுத்து அளவுப் படி தோண்டிக் கொள்ளுகிற காரியம் தான். மரத்தினால் செய்த காரணத்தால் அளக்க அளக்க விளிம்பு தேயும். பல வருஷங்கள் உபயோகப்படுத்தி விட்டால் விளிம்பு ரொம்பவும் கீழே இறங்கி விடும். இந்தத் தேய்ந்த மரக்காலைக் கொண்டு குடியானவர்களுக்குச் சம்பளத்தை அளக்கிறதென்றால் கொடுமைதானே? வேண்டும் என்று செய்கிற கொடுமை அல்ல. ஆலோசியாமல் ஏற்படுகிற கொடுமை.

பண்ணையார்களுடைய அமுல் இந்த விதமாய் இருக்கிறது.

## 2. மகராஜப் பிரபு

பண்ணையார்கள் என்றால் நல்லவர்கள்தான். தாராள மனசு உடையவர்கள்தான். ஆனாலும் ஏதோ மறதி, பிறர் கஷ்டத்தை உற்று நோக்காத பராமுகம் — இதெல்லாம் சேர்ந்து அவர்களை இரக்க மற்றவர்கள் என்று கூடச் சொல்லத் தோன்றும்.

பண்ணையார்களுக்கெல்லாம் மேலே சொன்ன குணம் மொத்தத்தில் பொதுவான குணம் என்றே சொல்லலாம்.

பண்ணையார் கிராமத்துக்குப் போவார். ஜடுதி பார்ப்பார் காரியங்களை. வில் வண்டியில் ஏறுவார். அந்தத் தருணத்தில் குடியானவர்கள் சம்பள நெல் வேண்டுமென்று கேட்பார்கள். பண்ணையாருடைய அவசரத்தில் வண்டியை விட்டு இறங்கிச் சேரை (நெற் களஞ்சியத்தை)த் திறந்து நெல் அளக்க நேரமா இருக்கும்! ''சரிதான் போ! அடுத்த மாசம் பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூறிவிட்டு வண்டியை விடச் சொல்லி விடுவார்.

இந்த விதமாகச் சம்பளப் பாக்கிகள் ஆறு மாசத்துக்கு விழுந்து விடும். குடியானவர்கள் என்ன செய்வார்கள்? அக்கம் பக்கத்தில் கடன் வாங்கிக் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பார்கள்.

தப்பிப் பிறந்த பண்ணையார் ஒருவர். அவருடைய கிராமம் திருக்குற்றாலத்தை அடுத்துள்ள வல்லம் என்ற கிராமம். இரு போக நிலம். இரண்டு தடவை களம் தயாரித்து அங்கு அறுவடை வேலை நடக்கும். களம் தயாராகும்போது முதல் முதலில் தச்சனைக் கூப்பிட்டு, ''அதோ பூவரச மரம் நிற்கிறது. வைரம் பாய்ந்திருக்கிறது. இரண்டு மரக்கால் செய்து கொண்டு வா'' என்று சொல்லுவார்.

ஒவ்வொரு அறுவடையிலுமே புதிதாக மரக்கால் தயாரிக்கச் சொல்லி விடுவார். தேய்ந்த மரக்காலைத் தூரப் போட்டு விடச் சொல்லுவார்.

இது போக, ஒவ்வொரு மாச முதல் தேதியிலும் குடியானவர்கள் அவ்வளவு பேரையும் கூப்பிட்டுச் சம்பள நெல்லை அளந்து விடுவார்—தேய்ந்த மரக்காலைக் கொண்டல்ல.

இத்தகைய பண்ணையாரைக் குடியானவர்களுடைய நெஞ்சு வாழ்த்தத் தானே செய்யும்? குடியானவன் ஒருவன் வாழ்த்தினான்:

பூவரசங் கட்டைவெட்டி
புதுமரக்கால் உண்டுபண்ணி
மாசமாசம் படிஅளக்கும்
வல்லத்தையா மகராசன்!



அழகான பாட்டு. அற்புதமான தமிழ்க் கவி. பாடப் பாட உள்ளத்தில் ஒளியும் சுவையும் பிறக்கும். இதைப் பாடின ஆசாமிக்கு நன்னூல் தெரியாது; தொல்காப்பியம் தெரியவே தெரியாது; ஆனால் தமிழ் தெரியும்.

* * *

## அற்புதத்தில் எல்லாம் அற்புதம்!

நாம் எத்தனையோ காரியங்களைச் சாதிக்கிறோம். மலையைக் குடைகிறோம். கடலைத் தூர்க்கிறோம். ஆனாலும் ஒரு காரியம் முடிகிற காரியம் அல்ல. "நான்" என்கிற தத்துவத்தை லேசில் சிதைக்க முடிகிறதில்லை. 'எனக்குச் செயல் இல்லை' என்று எண்ணுகிற காரியம் எல்லாம், கல்லைப் பிசைந்து கனி ஆக்குகிற காரியம் தான். ஆனாலும் நம்முடைய முன்னோர்கள் இந்த நான் என்கிற ஆணவத்தை ஒழிக்கப் பார்த்தார்கள் என்பது மாத்திரம் அல்ல; ஒழித்துக் கட்டித் தீர்த்தே இருக்கிறார்கள். இதற்குத் துணையாய் நின்றது தத்துவ ஞானந் தான் என்று சொல்ல முடியாது. சமய அனுபவங்கள், கலை அனுபவங்கள், மூர்த்தி வழிபாடுகள் எல்லாம் சேர்ந்து துணை செய்திருக்கின்றன.

ஒரு பக்தர் திருவேங்கடத்துக்குப் போனார். மலைக் காட்சிகளை எல்லாம் அனுபவித்துப் பரவசமானார். கோயிலுக்குள் சென்றார். வழிபாடுகளுடன் திருவேங்கட நாதனைச் சேவித்தார். இறைவனோடு ஐக்கியமானார். கற்றிருந்த தத்துவ ஞானத்துக்கெல்லாம் தெளிவு உண்டாய் விட்டது. எல்லாம் இறைவன்தான். அவன் செயலால்தான் மலையில் உள்ள காட்சிகளெல்லாம் உண்டாகின்றன என்று ஆனந்த பரவசத்தில் மூழ்கி விட்டார்.

இந்த அனுபவத்தை அவருடைய உல்லாசமான முறையில் சொல்கிறார்.

கூன்கொண்டு சென்றவன்
கூன்நிமிர்ந் தோடக்
குருடன்கொம் பில்த்
தேன் என்று காட்ட

எப்படியிருக்கிறது காரியம்! உச்சாணிக் கொம்பில் வைத்த தேன் கூட்டைக் காட்டுகிறானும் குருடன்! பேஷ் பேஷ்!

கூன்கொண்டு சென்றவன்
கூன்நிமிர்ந் தோடக்;
குருடன்கொம் பில்த்
தேன்என்று காட்ட;
மூடவன்அத் தேனை
எடுக்க; அ யல்
நானின்ற ஊமை
எனக்கென்று கேட்கத்
தருவன்வ ரம்
வான்நின்ற சோலை
வடமலை மேல்நின்ற
மாதவ னே.

பாட்டில் எடுத்துச் சொல்லியிருக்கிற விஷயங்கள் அற்புதங்கள் அல்ல: முடியாத காரியங்கள், அவ்வளவுதான்! கூன் நிமிர்ந்து போய் விடவில்லை. ஊமை "எனக்கு" என்றும் கேட்டுவிடவில்லை. இதற்கும் மேலான அற்புதத்தைத் திருவேங்கட நாதன் செய்தருளினான். "நான் என்று ஒன்றும் இல்லை என்ற உண்மையைத் தெரிவித்துத் தன்னுடைய ஆனந்த மயத்துக்கு என்னை உள்ளாக்கினான்" என்பதுதான் அற்புதம்.

சாமான்ய அற்புதங்களைக் குறிப்பிட்டு விட்டு அற்புதத்துக்கும் அற்புதமான ஒன்றைச் சாதித்திருக்கிறது தமிழ். இது தமிழ் செய்த அற்புதம்.

குறிப்பு:—பாடல்களை நிறுத்த வேண்டிய இடங்களில் கூசாமல் நிறுத்தி ஆற அமரப் பாட வேண்டும். பாடத்தான் வேண்டும். மீண்டும் மீண்டும் பாட வேண்டும். அனுபவிப்பது ஒன்றே லக்ஷ்யமாய் இருக்க வேண்டும். பாடும்போது அவசரத்தில் ராய்ட்டர் தந்தியைப் போலப் பார்த்துத் தள்ளி விட்டால் கவிதை தென்படாது. வெள்ளைக் கடுதாசியும் கறுப்பு மையுந்தான் மிச்சம் என்று ஆய்விடும். பிறகு தமிழ் மேல்க் குற்றம் சொல்லக் கூடாது.


ஜூன் 21 முதல்
தமிழ் நாடெங்கும்
ஆரம்பமாகிறது...
கல்யாணி
மாடர்ன்
தியேட்டர்ஸ்
தயாரிப்பு...

# சந்திப்பு

கி. ரங்கராஜன்

அன்று ராமச்சந்திரனுக்கு அவன் தகப்பனாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவனுக்காக வந்த ஜாதகங்களில், மேலக்காவேரியிலிருந்து வந்த ஜாதகம் அவன் ஜாதகத்துடன் நன்கு பொருந்துவதாகவும், பெண் கண்ணுக்கு நன்றாக இருப்பதாகவும், முடியுமானால் ஒரு நடை, இரண்டு நாள் லீவு எடுத்துக் கொண்டு, பெண்ணைப் பார்த்து விட்டுப் போகும்படியும் அதில் எழுதியிருந்தார்.

ராமச்சந்திரன் சென்னையில் ஒரு கம்பெனியில் உதவி மானேஜர். மாதம் இருநூறு ரூபாய் சம்பளம். நல்ல அழகன்; அத்துடன் குணசாலி. ஒரு தப்புத் தண்டாவுக்குப் போகமாட்டான். தான் உண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவன். எல்லாவற்றுக்கும் மேலாகத் தாய் தந்தையரைத் தெய்வம் போலக் கருதுபவன்.

பெற்றோர்கள் பார்த்து எந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்தாலும், கட்டிக் கொள்ளச் சித்தமாக இருந்தான் அவன். அவர்கள் பார்த்து, 'பெண் நன்றாக இருக்கிறது' என்று சொன்னால் போதாதா? தான் வேறு எதற்காக ரயில் செலவு பண்ணிக் கொண்டு அவ்வளவு தூரம் போக வேண்டும்? என்று முதலில் நினைத்தான். ஆனால் அவன் ஆபீஸ் மானேஜர் "என்ன அப்பா! விவாகம் உனக்கா? உன் பெற்றோர்களுக்கா? அவர்கள் சொல்லுவது மட்டும் போதுமா? உன் கண்ணுக்கும், மனசுக்கும் பிடிக்க வேண்டாமா? மாற்றக் கூடிய காரியமா ஐயா இது! போயும் போயும் ஒரு பத்து ரூபாய் ரயில்காரன் சாப்பிடுவதால், குடி முழுகி விடாது" என்று மேலும் ஏதேதோ சொல்லி அவனைக் கும்பகோணத்துக்கு அனுப்பி விட்டார்.

அன்று புதன்கிழமை. முகூர்த்த நாள். பெற்றோர்களுடனும், தங்கையுடனும் ராமச்சந்திரன் மேலக் காவேரிக்குப் பெண் பார்க்கப் போனான்.

உள்ளே விசாலமான கூடத்தில் அவர்கள் நால்வரையும் வரவேற்று உபசரித்தார் பெண்ணின் தகப்பனார் நாகராஜ ஐயர்.

முதலில் 'டிபன் ஜட்டம்' ஆயிற்று. பிறகு சம்பிரதாயத்துக்காக ஏதோ பேசிவிட்டு "அம்மா ஜானகி, வா! எல்லாருக்கும் நமஸ்காரம் பண்ணம்மா!" என்றார் நாகராஜ ஐயர்.

பட்டுப் புடவை சலசலக்க அடக்க ஒடுக்கமாய் ஜானகி எல்லாருக்கும் நமஸ்காரம் செய்தாள்.

ராமச்சந்திரனை நமஸ்கரித்துவிட்டு எழுந்த போதுதான், அவன் கண்களும் அவள் கண்களும் சந்தித்தன.

அவ்வளவுதான். ராமச்சந்திரனுக்கு 'ஷாக்' அடித்தது போல இருந்தது. அவளும் அதே நிலையை அடைந்திருக்க வேண்டும். அவள் முகம் 'குப்'பென்று சிவந்துவிட்டது. உடம்பு முழுதும் ஒரு தரம் வேர்த்து நனைந்தது. சரேலென்று வேகமாக உள்ளே போய் மறைந்து கொண்டாள்.

ராமச்சந்திரன் புத்திசாலி. தன் உள்ளக் கிளர்ச்சியை அடக்கிக் கொண்டு, சலனமின்றி உட்கார்ந்திருந்தான்.

ராமச்சந்திரன் தகப்பனார், "எங்களுக்குப் பெண் பிடித்துவிட்டது. பையனுக்கும் பிடித்திருக்கும் என்று நினைக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே, தம் மகன் முகத்தைப் பார்த்தார். அந்த முகத்தில் ஒருவித சலனமும் அவருக்குத் தோன்றவில்லை. விருப்போ வெறுப்போ அந்த முகத்திலிருந்து அவரால் காண முடியவில்லை.




நண்பர்:—சரியான வெய்யில் ஸார், இன்றைக்கு! அப்பாடி!

மற்றவர்:—உஸ்...ஸ்...! ஆமாம், ஸார்! தாங்க முடியவில்லை.

ஸர்வர்:—என்ன ஸார், வேணும் உங்களுக்கு?

நண்பர்:—இரண்டு கப் காப்பி நல்ல சூடாகக் கொண்டு வா!



கிட்டு (ஓடும் ரயிலில்):—அம்மா, நம்ம ரயில் கொஞ்ச நாழிகைக்கு முன்னாலே நின்றதே, அது என்ன ஸ்டேஷன்? ரொம்ப நாழிகையாகக் கேட்கிறேன், சொல்லமாட்டேன் என்கிறாயே, அம்மா!

அம்மா (புஸ்தகம் படித்துக்கொண்டே):—ஏண்டா ஓயாமல் நச்சரிக்கிறாய்? எனக்குத் தெரியாதென்றுதான் அப்பொழுதே சொன்னேனே! அது உனக்குத் தெரிந்து இப்பொழுது என்ன ஆகணும்?

கிட்டு:—எனக்கு ஒன்றும் இல்லை, அம்மா! அந்த ஸ்டேஷனிலே நம்ப அம்பி ரயிலை விட்டு இறங்கி விட்டான்!

---

"சரி, நாங்கள் புறப்படுகிறோம். விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம்" என்று சொல்லிக்கொண்டே அவர் எழுந்தார்.

நாகராஜ ஐயரும் வாசல்வரை போய் அவர்களை வழி அனுப்பிவிட்டு வந்தார்.

அன்றிரவு போட்மெயிலில், ராமச்சந்திரன் சென்னைக்குப் பயணமானான். "என்னடா அவசரம்? இரண்டு நாள் இருந்துவிட்டுத்தான் போயேன்" என்று தாயார் சொல்லியும்கூடக் கேட்காமல், "ஆபீஸில் ரொம்ப வேலை, அம்மா" என்று சமாதானம் சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டான்.

ரயிலில் உட்கார்ந்ததும், ஒரு நீண்ட பெருமூச்சு அவன் இதயத்தினின்றும் எழுந்தது.

ஆபீஸ் மானேஜரை வாயார வாழ்த்தினான். அவரால் அல்லவா தான் அங்கு வந்து பெண் பார்க்கும்படியாக அமைந்தது? அவர் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும் என்று நினைத்தான்.

அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது.

இரண்டு வருஷங்களுக்கு முன் அந்தப் பெண்மணி—ஜானகியா அவள் பெயர்?—பார்த்திருக்கிறான். அவள்தானா இவள்? சந்தேகமென்ன? அவளேதான். அப்பொழுது நடந்த சம்பவம் ஒன்றை மீண்டும் அவன் மனம் அவனுக்கு நினைவூட்டியது.

ராமச்சந்திரன் சினிமாவுக்கு ஆடிக்கொரு தரம், ஆவணிக்கொரு தரம் போவான். ஏதோ ஒரு தியேட்டரில் பல வாரங்களாக ஒரு தெலுங்குப் படம் ஓடிக்கொண்டிருந்தது.

"ரொம்ப நல்ல படம், ஸார்! நீங்கள் கட்டாயம் பார்க்கவேண்டிய படம், ஸார்!" என்று நண்பர்கள் ஒருமுகமாக அபிப்பிராயம் சொன்னதன் பேரில், ஒருநாள் அந்தப் படத்துக்குப் போனான். அவன் போனபோது, படம் ஆரம்பமாகிக் கால் மணி ஆகிவிட்டது. விளக்குகள் அணைந்து இருட்டாயிருந்தது. காலியாக இருந்த ஏதோ ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். சில விநாடிகளுக்குப் பிறகு மல்லிகைப் பூவின் மெல்லிய கந்தம் அவன் மூக்கில் தாக்கியது. சிலரைப்போல் அநாகரீகமாக, அடிக்கடி இடத்தை மாற்றுவது, அப்படியும் இப்படியும் திரும்பித் திரும்பிப் பார்ப்பது முதலிய வழக்கம் அவனுக்குக் கிடையாது. அதே பிரகாரம் அன்றும் நேரே படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இடை வேளையின்போது விளக்குகள் மீண்டும் எரியத் தொடங்கின. அப்பொழுதுதான், தன் பக்கத்தில் அடுத்த நாற்காலியில் இளநங்கை ஒருத்தி உட்கார்ந்திருப்பது அவனுக்குத் தெரிந்தது. மல்லிகைப்பூவின் பரிமள கந்தம் அவள் கூந்தலில் சூடிய அந்தப் பூவினால் வந்தது என்பதை உணர்ந்தான். பின்னாலே உட்கார்ந்திருந்த சிலர் தன்னையும் அந்தப் பெண்ணையும் மாறி மாறி ஒப்பிட்டுப்





இது உண்மைதானா என்று நீங்கள் கேட்டீர்கள்.

ஆம், முற்றிலும் உண்மையே! மேல் கண்ட கடிகாரத்தைக் குறைந்த விலைக்கு நீங்கள் இப்பொழுது பெற்றுக்கொள்ளலாம்.

5 வருஷம் உத்தரவாதம்.

நெ. 2501—வாட்டர் புரூப், ஷாக் புரூப், ஆன்டிமாக்னடிக், க்ரோம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேக், சிவப்பு சென்டர் செகண்டு, ரேடியம் டயலுடன் 15 ஜுவல் கடிகாரம் ரூ. 48/- தபால் செலவு ரூ. 1/- தனி.

இரண்டு வாங்குகிறவர்களுக்கு தபால் செலவு இனாம்.

சொல்ப கடிகாரங்களே கைவசமுள்ளதால் உடனேயே ஆர்டர் செய்யுங்கள்.

குறிப்பு:—குறித்த நேரத்தில் கையாள 15, 17 ஜுவல் கடிகாரமும் அகில இந்திய ரேடியோவையும் பெற நூதன முறையை ஏற்படுத்தி யிருக்கிறோம். இதைப் பெற விரும்புவோர் உடனே நூதன முறைகாட்டலாக்கிற்கு எழுதவும்.

EAST INDIA WATCH CO., POST BAG No. 16. CALCUTTA-1

பார்ப்பதுபோல் பார்த்தபோது அவனுக்கு என்னவோ போல இருந்தது.

யாரோ முன்பின் தெரியாத ஒருத்தியின் சமீபமாகத் தான் உட்கார்ந்திருப்பது அவனுக்கு என்னவோ போல் இருந்தது. அப்பொழுதே அந்த 'ஸீட்'டை விட்டு வேறு இடத்துக்குப் போக அவன் மனம் துணியவில்லை. பலர் காண அப்படிச் செய்வதால், பல சந்தேகங்களுக்கு இடம் கொடுக்கும் என்று அவன் கருதினான். அவள் அவனைத் தவறாக நினைக்கக்கூடாது அல்லவா!

விளக்கு அணைந்து காட்சி ஆரம்பமாகும் போது வேறு இடத்துக்குப் போய்விடவேண்டும் என்று அவன் திட்டமிட்டான்.

எத்தனையோ நாற்காலிகள் காலியாகக் கிடக்கும்போது வேண்டும் என்றே தன் பக்கத்தில் அவன் உட்கார்ந்து விட்டான் என்று அந்தப் பெண் எண்ணினாள். நல்லவனாக இருந்தால் இடைவேளையின் போதாவது வேறு இடத்துக்குப் போயிருப்பானே! அவன் அப்படிச் செய்யாதது அவன் சுத்தப் போக்கிரியாக இருக்க வேண்டும் என்று அவள் தீர்மானமாக நினைத்து விட்டாள்.

விளக்கு எப்பொழுது அணையும் என்று காத்துக் கொண்டிருந்த ராமச்சந்திரனுக்கு, விளக்கு அணைந்ததும் கிடைக்காதது கிடைத்து விட்டது போல இருந்தது. தப்பினோம் பிழைத்தோம் என்று நினைத்துக் கொண்டு வேறொரு நாற்காலியை நோக்கி விரைந்தான்.

படம் முடிந்தது. எல்லாருக்கும் முன்னால் வெளியே விரைந்து சென்றான். அந்தப் பெண்ணைத் தியேட்டர் வாசலில் சந்தித்து, தான் அறியாமற் செய்த பிழைக்கு அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள நினைத்தான். ஆனால் வெளியே வந்த அந்தப் பெண்ணுக்கு வாசலில் அவனைக் கண்டதும், ரௌத்ராகாரமாகக் கோபம் வந்தது. புருவம் துடித்தது. அவள் முகத்துக்கு எதிரே காறித் துப்பி விட்டு வேகமாக அப்பால் போய் விட்டாள்.

ராமச்சந்திரன் பயந்து போனான். தான் அங்கு நின்றதை அவள் தவறாக நினைத்துக் கொண்டு விட்டாள் என்று அறிந்து வேதனைப்பட்டான்.

ஒன்றும் தோன்றாமல் வீட்டுக்குப் போய் விட்டான். அது முதல் அவனுக்குப் பெண்களைக் கண்டாலே ஒரு பயம். அவர்கள் இருக்கிற திக்குக்கு ஒரு நமஸ்காரம் என்று தீர்மானித்து விட்டான். நாட்கள் செல்லச் செல்ல அந்தச் சம்பவம் கொஞ்சம் கொஞ்சமாக அவன் மனத்தினின்றும் மறைந்தது. அந்தப் பெண்ணை அதற்கப்புறம் அவன் பார்க்கவில்லை..........

அவளா இவள்! தன்னைப்பற்றி, தன் நடத்தையைப் பற்றி, கேவலமாக நினைத்துக் காறி உமிழ்ந்தாளே! அவளா இவள்? விதி எப்படி எல்லாம் சதி செய்கிறது! தன்னைப் பார்த்த பிறகு தன்னை அவள் மணக்க விரும்புவாளா? ஒரு நாளும் மாட்டாள். அவள் விரும்பாமல் இருக்கத் தான் அவளை விரும்பி மணப்பது என்பது கூடாத காரியம் என்று நினைத்தவனாய்த் தன் தீர்மானத்தைத் தன் தந்தைக்கு எழுதி விட்டான். காரணம் காட்டவில்லை.

"அப்பா அவர்களுக்கு நமஸ்காரம். மேலக்காவேரிப் பெண்ணை மணக்க விருப்பமில்லை. மன்னிக்க வேண்டும்" என்று சுருக்கமாக ஒரு கடிதம் எழுதித் தானே தபாலில் சேர்க்க அதனை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். அப்பொழுது தபால்காரன் "ஸார், உங்களுக்கு ஒரு கடிதம்!" என்று சொல்லிக் கொண்டே ஒரு கவரை அவனிடம் கொடுத்தான். முத்து முத்தாக எழுதிய ஒரு பெண்ணின் கையெழுத்து அதில் இருந்தது.

"அன்புள்ள ............

இந்தக் கடிதம் தங்களுக்கு வியப்பைக் கொடுக்கும். எதிர்பாராதபடி நாம் அன்று சந்தித்தோம். தங்களைப் பற்றி முன்பு - அதாவது சினிமா பார்த்த அன்று - தவறாக நினைத்து விட்டேன். அதனால் தங்கள் மனசுக்கு வேதனையைக் கொடுத்துமிருப்பேன். என்னை மணக்க எத்தனையோ பேர் பார்க்க வந்தார்கள். என் மனம் ஒருவர்மீதும் செல்லவில்லை. அது ஆண்டவன் அருள் என்று நினைக்கிறேன். எதிர்பாராதபடி மீண்டும் தங்களைச் சந்தித்தேன். தங்க




புத்தம் புதியதும் சிறந்ததுமான இந்த மூன்று சக்கரம் சைகிள்களுக்கு (Try-Cycle) ஆர்டர் செய்யுங்கள். இதன் விலை ரூ. 25/- லிருந்து ரூ. 15/-க்கு குறைக்கப் பட்டிருக்கிறது. ரயில்வே சார்ஜ் சுமார் ரூ. 1/8.- உங்கள் அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரைத் தெரிவித்து இன்றே ஆர்டரை அனுப்புங்கள்.

JUPITER TRADING CO.,
P. BAG 16602 - CALCUTTA - 4

ளுக்கு மனைவியாகி நான் அன்று தங்களுக்கு இழைத்த அவமானத்துக்கு, தாங்கள் அளிக்கும் தண்டனையை ஏற்கக் காத்திருக்கிறேன். என் வேண்டுகோளை மறுக்க மாட்டீர்களே! ஜானகி."

கடிதத்தைப் படித்து முடித்த ராமச்சந்திரன் தன் தந்தைக்கு எழுதிய — ஆனால் தபாலில் சேர்க்காத — அந்தக் கடிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து எறிந்தான்.

அவன் மனம் இன்பத்தால் நிறைந்தது.

# படித்துப் பாருங்கள்!

## ஸ்ரீமத் பகவத் கீதை

பாரத தேசத்தில் தோன்றிய 'நூல்களில் கண்ணன் உபதேசித்த பகவத் கீதையைப் போன்ற உலகத்தாரால் போற்றப்பட்ட நூல் வேறொன்று கிடையாது. அந்த பகவத் கீதையை எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்களாக நம் நாட்டினர் போற்றிப் பாராட்டி மெய்ஞானம் பெற்று வந்திருக்கிறார்கள். அத்தகைய அருமையான நூலைக் காமாக்ஷி தாஸராகிய அட்வகேட் ஆர். சோமசுந்தரய்யரவர்கள் தமிழ்ச் செய்யுள்களாக வெளியிட்டிருக்கிறார். ஜகத்குரு காஞ்சி காம கோடி பீடம் சங்கராச்சார்ய ஸ்வாமிகள், "மூலத்தின் அநேக முக்கியமான சுலோகங்களையும் அவைகளுக்கு அர்த்தம் எடுத்துரைக்கும் மொழிபெயர்ப்புப் பாக்களையும் ஒத்திட்டுப் பார்த்ததில் இந்த நூல் சரியான மொழி பெயர்ப்பு என்று விளங்குகிறது" என்று ஸ்ரீமுகம் கொடுத்திருக்கிறார்கள் என்றால் நாம் சொல்வதற்கு என்ன இருக்கிறது!

கிடைக்குமிடம்: 10 ஜி, எட்வர்டு எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை. விலை: ரூ. 2.

## 1. ஆதாரக் கல்வி என்றால் என்ன?
## 2. முதல் வகுப்பு ஆசிரியர்

கல்வியானது மாணவர்களை உத்தமப் பிரஜையாக்க வேண்டும். நேர்மை, நீதி யுணர்ச்சி, இரக்கம், பணிவு, பொறுமை முதலிய மனிதப் பண்புகளை வளர்க்க வேண்டும்; அஞ்சாமை, துணிவு, ஆண்மை, தன்னம்பிக்கை, சுயமுயற்சி முதலிய அருங் குணங்களை வளர்க்க வேண்டும். மூளையைப் பாடப் புத்தகங்களினால் நிரப்புவது கல்வி யாகாது; மூளையை வளர்ப்பதுதான் கல்வி.

இத்தகைய கல்வியை ஆதாரக் கல்வியின் மூலம் தான் பெற முடியும் என்று மாந்தருக்குள் ஒரு தெய்வமான காந்தி மகான் தம் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார். "ஆதாரக் கல்வி என்றால் என்ன!" என்னும் நூலில் ஆசிரியர் மூ. அருணாசலம் மிகவும் தெளிவாக அக் கல்வித் திட்டங்களை விளக்கி யிருக்கிறார்.

"ஆதாரக் கல்வி என்பது, புத்தகத்தை மையமாக வைக்கிற முறையன்று; குழந்தையை மையமாகக் கருதிக் கல்வி வளர்க்கும் முறையாகும். எனவே, இது வாழ்க்கையே மையமாக உடைய கல்வி" என்று இந்நூலில் ஆசிரியர் அழகாகக் கூறுகிறார். பாலர் கல்வியில் ஆரம்பித்து, சர்வ கலாசாலைக் கல்வி, வயது வந்தோர் கல்வி வரையில் இந்நூலில் விரிவாக எழுதப் பட்டிருக்கிறது.

இத்தகைய சிறந்த கல்வி முறைப்படி புதிதாக வகுப்பைத் தொடங்கும் ஆசிரியருக்குத் துணையாக நின்று உதவும் முறையில் "முதல் வகுப்பு ஆசிரியர்" என்னும் நூல் அமைந்திருக்கிறது. ஆதாரக் கல்வியின் தத்துவம், மனோ தத்துவம், போதனை முறை, வகுப்பு நிர்வாகம், செயல் திட்டம் முதலிய பல பிரிவுகள் கொண்ட இந்நூல் ஆதாரக் கல்வித் திட்டத்தைச் செயல் முறையில் நடத்தும் பயிற்சி அளிப்பதில் சிறந்து விளங்குகிறது. இந்நூலை இயற்றியவர்கள்: கே. அரங்கநாதன், மூ. அருணாசலம். பிரசுரம்: காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், மரத்துறை போஸ்டு, குத்தாலம் வழி, தஞ்சை ஜில்லா. புத்தகங்களின் விலை முறையே: ரூ. 1. ரூ. 1-9-0.

## தலைவர் ம. பொ. சி.

"ஆர்த்த சபை நூற்றொருவர்; வார்த்தை பதினாயிரத் தொருவர்" என்று ஔவைப் பிராட்டியார் மேடைப் பிரசங்கத்தின் மேன்மையைக் குறிப்பாக விளக்கினார். அந்தக் குறிப்புக்கு எடுத்துக் காட்டாக மிகச் சிலரையே கூற முடியும். அவர்களுள் ஸ்ரீ சிவஞான கிராமணியார் தமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்குகிறார் என்று கூறினால் அது மிகையாகாது. அவரது ஆற்றொழுக்குப் போன்ற தூய தமிழ்ப் பேச்சில் புயற்காற்றின் வேகம் கலந்திருக்கும். மின்னல் வேகத்தில் செல்லும் அவரது மேடைப் பேச்சில் சிறந்த கருத்துப் பின்னல்கள் பின்னிக்கொண்டே செல்லும்.

அறிஞர் சிவஞான கிராமணி அவர்கள் தமிழ் அன்பர்; சிறந்த பேச்சாளர்; பழுத்த தேச பக்தர்; பொது நல ஊழியர்; சிந்தனையாளர். அவர்களைப்பற்றித் திரு வி. க., டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, ஸ்ரீ டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், டாக்டர் மு. வரதராசனார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, சுவாமி சுத்தானந்த பாரதி முதலிய அறிஞர்கள் இந்நூலில் எழுதி யிருக்கின்றனர்.

புத்தகத்தின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள ஸ்ரீ கிராமணியாரின் வரலாற்றுச் சுருக்கம் அவரைப் பற்றி அறிந்துகொள்ள மிகவும் உதவியா யிருக்கிறது. பாட்டாளி சிவஞானம், பண்டிதரும் பாவலரும் போற்றும் தமிழ் ஞானம் படைத்த சிவஞானமாகப் பரிணமித்ததற்கு அவரது இணையற்ற நாவன்மையும், அவர் ஆற்றி யிருக்கும் தன்னலமற்ற தொண்டுகளும், அவர் தம் சீரிய நோக்கமும், தேசிய நடையும்தான் காரணம் என்பது இவ் வரலாற்றின் மூலம் நன்கு அறியக் கிடக்கிறது.


தொகுத்தவர்: சோம. சுவாமிநாதன்; பிரசுரம்: இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை—4. விலை: ரூ. 1-12-0.

## ஜோதி

பல கதைகளும் கட்டுரைகளும், செய்யுள்களும் பாடல்களும் கொண்டு கல்கத்தாவிலிருந்து வெளியாகி யிருக்கிறது, 1952-ம் வருஷத்திய ஜோதி ஆண்டு மலர்.

கிடைக்குமிடம்: ஜோதி காரியாலயம், 6, மகாநிர்வாண் ரோடு, கல்கத்தா—29. விலை: அணா 12.


வருகிறது
மூன்று
பிள்ளைகள்
ஜெமினி சித்திரம்...



ஒவ்வொரு வேலைக்கும் பிரத்யேகமான
ஷாலிமார் பெயிண்ட்
இருக்கிறது
புத்திசாலிகள் ஷாலிமார் பெயிண்டையே
உபயோகிக்கிறார்கள்
SHALIMAR PAINT
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.
POST BOX 136, MADRAS 1
Importers & Distributors for Ceylon :
LEWIS BROWN & CO., LTD., POST BOX 85, COLOMBO



# தந்தையும் மகனும்

எஸ். கிருஷ்ணன்

**ப**கல் முழுதும் எங்கெல்லாமோ உத்தியோக வேட்டையில் திரிந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்த ரங்கராஜனிடம் அவன் தகப்பனார் பசுபதி ஒரு கடிதத்தைக் கொடுத்து, "மத்தியானத் தபாலில் வந்தது" என்றான். ரங்கராஜன் கடிதத்தைப் படித்து விட்டு, "அப்பா, பாங்கியில் நாலு வருஷங்களுக்கு முன்னால் எதையோ அடகு வைத்தீர்களாமே! வட்டி கட்டாததால் அதை ஏலத்துக்கு விடப் போகிறார்களாம்" என்றான்.

பசுபதி அதற்கு மறுமொழி ஏதும் கூறவில்லை. ஆறு வருஷங்களுக்கு முன் பசுபதியின் மனைவி எலும்புருக்கி நோயாகப் படுத்தாள். பசுபதி தன் சொத்து, சுதந்திரம், நிலபுலன்களை யெல்லாம் விற்று அவளுக்குச் சிகிச்சை செய்து பார்த்தான். ஆனால் இரண்டு வருஷ காலம் அவதிப்பட்டபின் அவள் கண்களை மூடிவிட்டாள். கடைசியில் மனைவி இறந்தபோது அவளுடைய ஈமச் சடங்குகளுக்காக அவளுடைய கழுத்துச் சங்கிலியையே அவன் அடகு வைக்கும்படி ஆகிவிட்டது. அதுதான் ஏலத்தில் போகப் போகிறது. அவளே இல்லாதபோது அந்தச் சங்கிலியை எண்ணி அவன் எதற்காக வருத்தப்பட வேண்டும்? ஆனால் அவன் கவலைப்பட்டதெல்லாம் தன் மகன் ரங்கராஜனைப் பற்றித்தான். எஸ். எஸ். எல். ஸி. தேறி விட்டு ஒரு வருஷமாக வேலை தேடுகிறான் ரங்கராஜன். அவனுடைய ஒட்டியுலர்ந்த கன்னங்களையும் ஒளியிழந்த கண்களையும் பார்க்கும்போது பசுபதிக்குப் பகீர் என்றது. "பகவானே, தகுதியில்லாத பாத்திரமான என்னிடம் இந்த அருமைக் குழந்தையை ஒப்படைத்து விட்டாயே!" என்று மனம் புழுங்கினான். 'மனைவியிருந்தபோது இளங் காளையாய்க் குதித்துத் திரிந்து கொண்டிருந்த அந்த ரங்குவுக்கும் இந்த ரங்குவுக்கும் எவ்வளவு வித்தியாசம்!' என்பதை எண்ணிப் பார்த்த பசுபதி, தன்னை இகழ்ந்து கொண்டே, "ரங்கு, ஒரு தகப்பன் செய்ய வேண்டியதைச் செய்யத் திறமையற்ற பாழ் ஜன்மம் நான். அதற்காக நீ என்னைச் சபிக்காதே, குழந்தாய்!" என்றான்.

ரங்கராஜன் அதற்குப் பதில் ஏதும் சொல்லாமல் தகப்பனாருடைய முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றுவிட்டான். அவனுக்குத் தகப்பனாரிடம் கோபமோ வருத்தமோ இல்லை. சூது வாது அறியாத பரம சாது அவர். பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்த உலகத்தில் பிறப்பெடுக்காமல் நியாயமும் சத்தியமும் ஆட்சி புரியும் உலகில் பிறக்க வேண்டியவர். அவர் சீரும் சிறப்புமாக ஒரு காலத்தில் நாகப்பட்டினத்தில் பெரிய ஹோட்டல் முதலாளியாயிருந்தார். தம் உறவினரைக் கைதூக்கிவிட எண்ணித் தன் ஹோட்டலை நிர்வகிக்கச் செய்தார். அவர் செய்த உபகாரத்துக்கு ஈடாக அவரை ஏமாற்றி ஆண்டியாக்கினர் உறவினர். இன்று அந்த உறவினர் நல்ல நிலைமையில் இருக்கின்றனர். ஆனால் யாரால் அவர்களுக்கு வாழ்வு கிடைத்ததோ, அவரை மறந்து விட்டனர். தன் தகப்பனாரைத் தவறாக நினைத்தால் தெய்வத்துக்கே பொறுக்காது. இப்படி யோசித்துக்கொண்டு நின்ற ரங்கராஜன் மாலையில் நண்பன் ஒருவன் சொன்ன யோசனையை அப்பாவிடம் தெரிவிப்பதற்காக, "அப்பா, நான் ஒரு யோசனை சொல்கிறேன். கேட்கிறீர்களா?" என்று கூறிவிட்டுச் சற்றுத் தயங்கியபின், தொடர்ந்தான். "உங்களைத் தனியாய் விட்டு விட்டு எனக்குப் போக இஷ்டமில்லை. ஆனாலும் இரண்டு வருஷம் நான் மதுரையில் 'டிரெயினிங்' படித்து விட்டு வருகிறேன். ஆசிரியர் பயிற்சி முடிந்தால் எந்தப் பள்ளிக்கூடத்திலாவது

கட்டாயம் வேலை கிடைக்கும். படிக்கிற போதும் பதினெட்டு ரூபாய் உதவிச் சம்பளம் கிடைக்கும். எனக்கு வேலை கிடைத்தால் நீங்களும் என் கூடவே இருக்கலாம். உங்களுக்குக் கவலை தராமல் சந்தோஷமாக வைத்துக் கொள்வது ஒன்றுதான் என் ஆசை..."

"அப்படியே செய், குழந்தாய். நீ எப்படியாவது சந்தோஷமாயிருப்பதைக் காதால் கேட்டாலே போதும்" என்று சொன்ன பசுபதியின் முகத்தில் தோன்றிய புன்முறுவலின் பின் மறைந்து நின்ற ஏமாற்றத்தின் நிழலை ரங்கு கண்டு கொண்டான்.

* * *

**ம**கனை ரயிலேற்றி விட்டு வந்த பசுபதியின் முகத்தைப் பார்த்தால் கல்லும் கரையும். அவன் முகத்தில் ஒரு வெறி பிடித்த பார்வை. மனநிலை சூனியத்தின் பேரிரைச்சல். வாழ்க்கையின் பாதையில் ஏமாற்றத்தையும் துயரத்தையும் துணையாகக் கொண்டு அவன் ஏன் வாழ வேண்டும்?



வழியில் பறவைகள் தங்கள் கூடுகளை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தன. குருவிகள் கிறீச் என்று சத்த மிட்டுச் சென்றன. பகல் முழுதும் பிரிந்திருந்த பின், தன் குஞ்சுகளைப் பார்க்கப் போகும் நினைப்பே அவைகளுடைய இறக்கைகளுக்கு அவ்வளவு வலிவும் உள்ளங்களுக்கு அத்தனை ஆவலும் தந்தன போலும்! அவைகளுக் கென்ன கவலை? படைத்த தெய்வம் இரையும் கொடுக்கிறது. ஆனால் பசுபதியோ? சோறு போட முடியாததால் பெற்ற பிள்ளையையே துரத்தி விட்டான்! இடி விழுந்து பட்டுப்போன மரம்போல் உபயோகமற்றவன் பசுபதி!

வீட்டை அடைந்தான். இருள் படிந்திருந்த கூடத்துக்குள் நுழையவே தயக்கம். எப்படியாவது இத்தனிமையிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும். விரிந்த உலகில் கலந்து வீட்டை மறக்க வேண்டும். இனி வீடு யாருக்கு? மகன் படித்து எங்காவது வேலையா யிருப்பான். அவனுடன் நாளைக்குப் போய் வாழ்வதா? தகப்பனாக இருந்தும் தகப்பனுடைய கடமையைச் செய்ய முடியாமல் வயதானபோது மகனிடம் போவதா? கடமை ஒரு தலைப்பட்டதல்ல. ரங்கு எங்கேயாவது சௌக்கியமா யிருக்கட்டும். துரதிர்ஷ்டம் பிடித்த அப்பன் நிழல் படாமல் அவன் சந்தோஷமாக வாழட்டும். இவ்வாறு எண்ணிக் கொண்டு கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டான். இருளில் வெளியே சென்றான்.

* * *

**வ**ருஷங்கள் ஏழாகி விட்டன. பசுபதி தன் சொந்த ஊரிலிருந்து வெகு தூரத்தில் ஒரு ஊரில் இருந்தான். அவன் அங்கே யிருந்தது அவன் ஊரில் எவருக்கும் தெரியாது. ரங்கராஜனுக்குக் கூடத் தெரியாது.

அந்த ஊர் உயர்தரப் பாடசாலையில் தண்ணீர் கொண்டு கொட்டி வந்தான். எட்டு ரூபாய் சம்பளம். பாடசாலையின் ஹாஸ்டலில் சமையற்காரர்களுக்கு உதவியாக ஏதாவது செய்து கொண்டிருப்பான். ஆகவே, அவர்கள் எஞ்சியதை மிஞ்சியதைப் பசுபதிக்குக் கொடுப்பார்கள்.

அன்று வழக்கம் போல் தண்ணீர் வண்டியை இழுத்துக்கொண்டு தாலுக்கா ஆபீசுக் கிணற்றிலிருந்து வந்து கொண்டிருந்தான் பசுபதி. அவன் மனம் எங்கோ சென்றிருந்தது. பள்ளிக்கூடத்துக்கு ஒரு புது ஆசிரியர் வந்திருந்தார் இரண்டு நாள் முன். அவர் ஹாஸ்டலில் சாப்பிட்டுக் கொண்டே அன்று ஒரு ஆசிரியரிடம் தன் வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருந்ததை நினைத்துக் கொண்டான் பசுபதி. அவர் எஸ். எஸ். எல். ஸி. தேறி, செகண்டரி கிரேட் டிரெயினிங் தேறினாராம். மூன்று வருஷங்களுக்குப் பிறகு ஆசிரியர்களுக்குள்ள தனிச் சலுகையின் உதவியுடன் இண்டர் தேறினாராம். கல்லூரியில் சேராமலே, நான்கு வருஷங்களுக்குப் பிறகு பி. ஏயும் தேறினாராம். பிறகு சென்ற வருஷம் எல். டி. டிரெயினிங் தேறினாராம். ஒருகால் ரங்கராஜனும் அப்படித் தேறியிருக்கலாம் அல்லவா? படிப்பில் அளவில்லாத அக்கறை யுடையவன் ரங்கு.

இப்படியே கற்பனைகளில் மூழ்கி யிருந்ததால் அவன் தண்ணீர் வண்டி மேட்டிலிருந்து கீழே இறங்குகிறது என்பதை மறந்து போனான். வண்டி அவனைக் கீழே தள்ளியது. அவன் விலாவில் ஒரு கல் தாக்கிற்று. வெளியே காயமொன்று மில்லையாயினும் நன்றாக வலித்தது. 'ஆசைக் கடிமையாய் நான் மறுபடியும் ரங்குவை நினைத்தது தவறு என்று பகவானே கற்பித்தார்' என்று தன் மனத்தைத் தேற்றிக் கொண்டான்.

பசுபதி அந்த ஏழு வருஷங்களில் தலைமை ஆசிரியரிடம் நன்றாகப் பழகினான். அவர் தாமாகவே முதன் முதலில் "உனக்கு யாருமே இல்லையா, பசுபதி?" என்று கேட்டார்.

"எனக்கு ஆண்டவன் இருக்கிறான், சார்" என்றுதான் அன்று அவருக்கு மறுமொழியளித்தான் பசுபதி. பரம பக்தரான ஹெட்மாஸ்டரும், "ஆம், உனக்கும் எனக்கும் எல்லோருக்குமே உறுதுணை அவன்தான்" என்றார் புன்முறுவலுடன்.

பசுபதி தன் வேலையைக் கவனிப்பான். இந்த ஏழு வருஷங்களில் எத்தனை ஆசிரியர்கள் வந்தனர், போயினர். ஆனால் பசுபதி அவர்களிடம் பேசியதில்லை. இந்தக் காலத்துக்குள் பசுபதி எவ்வளவோ மாறிவிட்டான். அவன் தலை நரைத்து விட்டது. கண்கள் பள்ளத்தில் விழுந்து விட்டன.

அவன் இறைத்துக் கொண்டே யிருந்தும் தாலுக்கா ஆபீசுக் கிணற்றில் இன்னும் நீர் நிரம்பியே இருக்கிறதே என்று விஷயம் புரியாத கீழ் வகுப்புச் சிறுவர்கள் அவன் காதில் விழும்படி பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிறான். ஆயிரக் கணக்கில் மாணவ மாணவிகள் தாக சாந்திக்காகத் தண்ணீர் கொடுத்த புண்ணியத்துக்காகச் சித்திரகுப்தன் தன் கணக்குப் புத்தகத்தில் பசுபதிக்குச் சொர்க்கத்தில் இடமிருப்பதாகக் குறித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இப்பிறவியில் உடல் நோக உழைத்து அரை வயிற்றை நிரப்பவும் ஒரு சிறு குடிசையில் புழங்கவுமே அவன் கொடுத்து வைத்திருந்தான்.

சில மாதங்களுக்கு முன் தண்ணீர் வண்டியுடன் விழுந்ததால் ஏற்பட்ட வலி குறையவில்லை. அதிகமாகிக் கொண்டுதான் வந்தது. தாலுக்கா ஆபீஸ் கிணற்றிலிருந்து வண்டியைத் தள்ளிக்கொண்டு வரும்போது மிகவும் சிரமமா யிருக்கும். வழியிலுள்ள மேடு நந்தனுக்கு வழி மறுத்த நந்தியைப்போல் மலைப்பைத் தரும். இன்னும் வெகுநாள் இப்படி உழைத்துக்கொண்டு அவனால் இருக்க முடியவா போகிறது?

இந்தச் சந்தர்ப்பத்தில் இவனிடம் அன்பு வைத்திருந்த தலைமை ஆசிரியர் வயதாகி வேலையிலிருந்து விலகிக் கொண்டார். அவர் புதுத் தலைமை ஆசிரியரிடம் இவன் தானாக வேலையை விட்டு விலகாத வரையில் இங்கேயே வைத்துக்கொள்ளுங்கள். பாவம், இவன் ஒரு அகதி" என்றார்.

ஆனால், பசுபதிக்கு மேலும் வேலை செய்ய இஷ்டமில்லை. அவன் உடம்பு தள்ளவில்லை. கடைசிக் காலத்தில் பிறந்த வீட்டிற்குப் போய்விட வேண்டும் என்று அவன் எண்ணிக் கொண்டான்.

ஊரை அடைந்தான். அவன் வீடு பூட்டிக் கிடந்தது. திறந்து பார்த்தான். உட்புறம் இடிந்துபோ யிருந்தது. யாரும் கவனிப்பாரில்லை. மழைத் தண்ணீர் விழுந்து தேங்கி நின்றதால் தரையில் பள்ளங்கள் தோன்றி யிருந்தன. பொருளற்ற கவலைத் தண்ணீரால் பள்ளம் விழுந்த அவன் உள்ளம்போல் பாழாகி யிருந்தது தரை. அந்த வீட்டை அவனால் சரி செய்ய இயலாது. அதேபோல் தன் உடலையும் சரிசெய்ய முடியாது. அதற்குத் திறமையுள்ள ரங்கு எங்கிருக்கிறானோ?

இரவு முழுவதும் அந்தப் பாழ் வீட்டில் ஏகாங்கியாகப் படுத்திருந்தவன் காலையில் எழுந்து திண்ணைக்கு வந்தான். அவன் தலை சுழன்றது. திண்ணையின் சுவரில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்தான். அடுத்த வீட்டு மனிதர் சத்தம்கேட்டு வாசலில் வந்து, "யார், பசுபதியா? எப்போது வந்தாய் அப்பா?" என்று விசாரித்துவிட்டு உட்புறம் சென்று ஒரு கோப்பைக் காப்பியைக் கொண்டுவந்து கொடுத்தார். "இரண்டு மாதங்களுக்கு முன் கூட ரங்கு வந்திருந்தான். 'அப்பாவுடன் இனி இந்த வீட்டுக்கு வந்தால் வருவேன். இல்லையானால் வரமாட்டேன்' என்று சபதம் கூறிக்கொண்டு போனான்" என்றார். அதைக் கேட்ட பசுபதிக்கு விம்மலை அடக்க வெகு சிரமமா யிருந்தது.

அவன் அவரிடம், "எனக்கு ஒரு உபகாரம் பண்ணுங்கள். நான் வேலை பார்த்து வந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கு என் ராஜிநாமாவை அனுப்புங்கள். இனி என்னால் போக முடியாது. பதினைந்து நாள் சம்பளம் கிடைக்க வேண்டும். அதைக் கொண்டு என் கடைசி......" என்று சொல்லும்போதே அவர் குறுக்கிட்டு, அசம்பாவிதமாகப் பேசாதே, பசுபதி. உன் பிள்ளை நல்ல நிலைமையிலிருக்கிறான். அவன் வருவான், பார்" என்றார். அவர் சொல்வதை ஆமோதிப்பது போல் கோயில் மணி அடித்தது.

ஒன்பது வருஷங்கள் ரங்கராஜன் தன் தகப்பனாரைப் பார்க்கவில்லை. வாழ்க்கையின் தரம் உயர்ந்து கொண்டே வந்தது. அவன் இன்று ஒரு பி. ஏ. எல். டி. சென்ற எட்டுக் கோடை விடுமுறைகளாக அவன் தகப்பனாரைப் பார்க்க ஆசையுடன் ஊருக்கு வந்து ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றிருக்கிறான். இரண்டு மாதங்களாக அவனுக்குப் பள்ளி டெபுடி இன்ஸ்பெக்டர் வேலையாகியிருக்கிறது. ஜில்லாக் கல்வி அதிகாரியுடன் பள்ளிக் கூடங்கள் பலவற்றில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தான்.

அவன் மனத்தில் அமைதியில்லை. இதழ்களில் புன்முறுவலுடனும் கண்களில் தேங்கி முட்டி நிற்கும் கண்ணீருடனும் அவனை வழியனுப்பிய தகப்பனார் அவன் மனத்தில் நிரந்தரமாக இடம் பெற்று விட்டார். அப்பாவுக்கு ஆண்டவன் திறமையைத் தரவில்லையானாலும் பாசம் நிறைந்த இருதயத்தைக் கொடுத்தார். தாயார் இறந்த பிறகு அவனுக்குத் தலை கால் வலித்தாலும், அவன் அருகில் உட்கார்ந்து கொண்டு, "என்ன செய்கிறது, குழந்தாய்!" என்று நிமிஷத்துக்கு ஒருதரம் கேட்பார். ஆஸ்பத்

திரியில் தண்ணீர் மருந்தாகக் கொடுக்கப்படும்போது டாக்டரைத் தனியாய்ப் பார்த்து, "எனக்கு ஒரே குழந்தை, தாயாரில்லை. கொஞ்சம் நல்ல மருந்து தருகிறீர்களா, டாக்டர்?" என்று கெஞ்சுவார். டாக்டர் சிரிப்பார், சில சமயம் சீறி விழுவார். சில சமயம் கம்பவுண்டர் "ஓய், பைத்தியம்! இங்கே எல்லோருக்கும் ஒரேமாதிரி மருந்துதான் கொடுப்பார்கள்!" என்று இண்டல் செய்தாலும் பொருட்படுத்தமாட்டார். பெற்ற பாசத்துக்கு முன் மானம் மரியாதை ஒன்றுமே நிற்காது! அவர் கதி என்னவாயிற்று? எங்கே இருக்கிறார்? என்ன செய்கிறார்? ஒருகால் உழைத்து உழைத்து உடல் நலிந்து உள்ளமும் நலிந்து கடைசியில்......" அவனால் மேலே சிந்திக்க முடியவில்லை. "தெய்வமே! பரம சுத்தரான என் தகப்பனாரைப் பார்க்க வழிகாட்ட மாட்டாயா?" என்று அவன் ஆண்டவனை வேண்டிக் கொள்ளாத நாளே இடையாது. என்றைக்காவது ஒரு நாள் நாம் நம் தகப்பனாரைப் பார்ப்போம் என்ற நம்பிக்கை மட்டும் அவனை விட்டு அகலவே யில்லை.

*　　　*　　　*

ஜில்லாக் கல்வி அதிகாரியுடன் அந்த உயர்தர பாடசாலையைப் பார்க்க வந்திருந்தான் ரங்கராஜன். தலைமை ஆசிரியரின் அறையில் உட்கார்ந்து கொண்டு அவன் ரிக்கார்டுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது பள்ளியின் தலைமை குமாஸ்தா ஹெட்மாஸ்டரிடம் ஒரு கடிதத்தை நீட்டி "வாட்டர் மேன் பசுபதி எழுதி யிருக்கிறான். உடம்பு பலஹீனமாகி விட்டதால் வேலையிலிருந்து விலகிக் கொள்கிறானாம். கணக்குத் தீர்த்து அனுப்பும்படி கேட்டுக் கொண்டிருக்கிறான்" என்றார்.

"அப்படியே செய்யுங்கள்! போன இடத்தில் படுத்துவிட்டானோ, என்னமோ? பாவம், அனாதை!" என்று பரிதாபப் பட்டார் தலைமை ஆசிரியர். கடிதத்தில் தலைமை ஆசிரியர் கையெழுத்திட்டபோது அந்த ஊரின் பெயர் தெரிந்தது ரங்கராஜனுக்கு. அவனுடைய சொந்த ஊரேதான் அது. சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. மறுகணமே ஜில்லா அதிகாரியிடம் ஒருவார லீவு கேட்பதற்காக எழுந்தான்.

பசுபதி ஆஸ்பத்திரியில் படுத்திருந்தான். நர்ஸ் ஒருத்தி அவன் அருகில் உட்கார்ந்திருந்தாள். அடுத்த வீட்டுக்காரர் தன் செல்வாக்கைக் கொண்டு பசுபதிக்கு அந்த ஆஸ்பத்திரியில் ஆதரவையும் அன்பையும் தேடித் தந்திருந்தார். ஆனால் அன்பாலும் ஆசையாலும் பசுபதியை இவ்வுலகில் தேக்கி நிறுத்தும் திறமையை இழந்து விட்டோம் என்று டாக்டரும் நர்ஸும் உணர்ந்திருந்தனர்.

சுய நினைவில்லாமல் மயங்கிக் கிடப்பான். நடுவே எதையோ நினைத்துக் கொண்டவன் போல் கண்களை விரித்துப் பார்ப்பான். மறுகணம் கண்களை மூடிக் கொண்டு விடுவான்.

"அப்பா!" என்று கூப்பிட்டுக் கொண்டு ரங்கராஜன் உள்ளே நுழைந்ததும் குரலைக் கேட்டு பசுபதி கண்களைத் திறந்தான்.

அவனைத் தழுவிக் கொண்டே ரங்கராஜன், "அப்பா, இத்தனை வருஷங்களாக உங்களைத் தேடினேன். கடைசியில் இங்கேயா உங்களைப் பார்க்கக் கொடுத்து வைத்தேன்?" என்று ஏங்கினான்.

"நீ நல்ல சமயத்தில்தான் வந்தாய், ரங்கு! நான் உன்னை ஒரு முறை பார்த்து விட்டுப் போகவே எண்ணியிருந்தேன். என்னால் நீ அடைந்திருக்கும் துன்பத்தை மறந்து விடு, குழந்தாய்! மறுபடியும் அலைப் பிறப்பு எடுக்காமலிருக்க ஆண்டவன் அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொள். நான் போகிறேன்!" என்று கூறி விட்டு மேலே பேச முடியாமல் திணறினான் பசுபதி.

"அப்பா, உங்களிஷ்டப்படியே செய்கிறேன். இந்தப் பிறவியில் நான் உங்கள் பிள்ளையாயிருந்தும் உங்களுக்குச் செலுத்த வேண்டிய கடமையைச் செலுத்த முடியாத பாபி, நான்! மறு பிறப்பிலும் அதற்கு வழி இல்லாமல் செய்கிறீர்கள்" என்று கூறிக் கொண்டே ரங்கராஜன் கண்களைக் கடைசி முறையாக மூடும் தகப்பனாரைப் பார்த்தான். மறு கணம் அவர் மேல் விழுந்து "பகவானே! என் தகப்பனாருக்கு முக்தி கொடு! என்னை மன்னித்து விடு" என்று விம்மினான்.



"என்னப்பா இது? தோட்டம் முழுவதும் ஒரே குப்பையாக இருக்கிறதே!"

"அதுங்களா! நம்ம கமிஷனர் ஐயா வந்து தோட்டத்தில் குப்பை போடாதிங்க என்று சொல்லியிருக்கும் நோட்டீஸை எல்லாருக்கும் நேத்துக் கொடுத்தாரு. அவுங்க அதைப் படித்து விட்டு இங்கேயே போட்டுவிட்டுப் போய் விட்டாங்க!"




"எட்டு மாதங்களாக எனது கீழ் முதுகுப் பாகத்தில் பொறுக்க முடியாத வலி யிருந்தது. சில சமயங்களில் வலியின் கொடுமையால் என்னால் ஒன்றும் முடியாமலும், மிகுந்த க்ஷீண மாயும் இருந்தது. பிறகு "க்ருஷன்" உபயோகித்துப் பார்த்தேன். இரண்டு வாரங்களுக்குப் பின்னர் நான் ஒரு வேற்று மனிதனா யிருக்கிறேன். எனது வலி முழுதுமே விட்டொழிந்து விட்டது.—H.W.S.

மூத்திரக் காய்கள் சரிவரக் கழிவு பதார்த்தங்களை வெளியேற்றுவிடில், ரத்தக் குழாய்களில் விஷச் சத்துக்களில் சேமிக்கப்பட்டு அவை முதுகு வலியை உண்டாக்குகின்றன. "க்ருஷ"வின் ஆறுவித உப்புக்கள் மந்தித்துப்போன மூத்திரக் காய்களை மெதுவாகத் தூண்டி அவற்றைச் சரிவர இயக்கி ரத்தக் குழாய்களை சுத்தமாக்கச் செய்விக்கின்றன. தினந்தோறும் ஒரு சிறு அளவு "க்ருஷன்" உட்கொள்வது உங்களை முதுகு வலியினின்றும் விடுவிக்கும்.

**"க்ருஷன்"** உங்கள் ஆரோக்யத்திற்கும் ஆனந்தத்திற்கும் உற்ற உதவி

KSM - 6

# அதிகப்படி தென்பு



நீங்களும் பெறுக

## வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்



தென்புடன் விளங்குக...... உங்கள் தினசரி போஜனத்துடன் வாட்டர்பரீஸ் காமபவுண்ட் சாப்பிட்டு வருக...... அது சுறுசுறுப்பூட்டுவதும் ருசிமிகுந்ததுமான ஒரு டானிக். அதிகப்படி தென்பை வளர்க்க உதவுவதில் நிச்சய குணமுள்ளது. வாட்டர்பரீஸ் காம்பவுண்டு உங்களுக்கு அத்யாவசியமான புஷ்டிபதார்த்தங்களை வழங்கி, உங்களுக்கு சோர்வு, ஜலதோஷம், இருமல், எதுவும் ஏற்படாத வாறு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். வயது வந்தவர், இளைஞர் யாவருக்கும் தேக வலிமை பெற இன்றியமையாதது.




**WATERBURY'S**

**COMPOUND**

**வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்**

உங்களை தென்புடன் வைத்திருக்கும்

NAS 744




## 10. கரும்பும் கசந்தது!

சாய்வு நாற்காலியில் சாய்ந்ததும், வருங்கால வாழ்க்கையின் இன்ப நினைவுகளை மனத்திரையில் எழில் மிக்க சித்திரங்களாகத் தீட்டும் ஆசையில் என் இரு இமைகளும் தாமாகவே மூடிக் கொண்டன. எனக்கும் ஸ்டீலாவுக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நிகழ்வது போலவும், அதைக் கண்ணுற்ற ஜனங்கள் திகைத்துப் பிரமித்துப் போய் வைத்த கண் வாங்காமல் எங்களையே பார்ப்பது போலவும், பிரபல பத்திரிகைகள் எங்கள் திருமணத்தைப் பற்றிப் பற்பல விதமாகப் பத்தி பத்தியாகச் செய்திகள் பிரசுரிப்பது போலவும், ஸ்டீலாவை அடைவதற்காக இலவு காத்த கிளியைப் போல் காத்துக் கிடந்த எத்தனையோ லட்சாதிபதிகள் மனமொடிந்து நம்பிக்கையிழந்து, சிறகு ஒடிந்த பட்சியாகத் துடிப்பது போலவும், 'ஆங்கிலேயர்களான நம்மை ஒரு இந்தியன் வெற்றி கொண்டு விட்டானே! என்ன அதிசயம்! அவனிடம் அப்படியென்ன மாய சக்தி இருந்து விட்டது!' என்று என்னைப் பற்றிப் பேசிக் கொள்வது போலவும் பற்பல இன்பக் காட்சிகளைக் கற்பனைக் கண்கொண்டு ரசித்துக் கொண்டிருந்த என் உள்ளக் கடலிலே எத்தனையோ விதமான சிந்தனை அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்து என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க வைத்து விட்டன. இந்த இன்ப நினைவிலே என் உடல் பூரித்தது; உரோமங்கள் சிலிர்த்தன. என்னைக் கட்டிப் பிடிக்க இனி ஆள் யாருமே கிடையாது என்பது போன்ற உணர்ச்சி என் நிறைந்த இருதயத்தை ஆட்கொண்டது.

ஸ்டீலாவின் இன்ப நினைவிலே மூழ்கியிருந்த எனக்கு அன்று பசி - தாகம் ஏதாவது தெரிந்தால்தானே? மனிதனுக்கு எல்லை மீறிய மகிழ்ச்சியோ துயரமோ ஏற்பட்டு விட்டால் பசி தெரிவதில்லை; உணவு செல்வதில்லை. அன்று நானும் உணவை மறந்து ஸ்டீலாவின் நினைவாகவே இருந்து விட்டேன். பொழுதும் போவது தெரியாமலேயே வெகு வேகமாக ஓடி விட்டது.

சாயந்திரம் ரூப் சந்தும் தேவகியும் என்னைக் காண வந்தார்கள். அப்பொழுது தான் எனக்குப் பொழுது சாய்ந்து விட்டது என்ற நினைவு வந்தது. நான் அவர்களிடம் ஸ்டீலாவைப் பற்றிய விஷயங்களை ஆதியோடு அந்தமாகச் சொல்லி, அன்று பத்திரிகையில் வெளியான அந்த நற்செய்தியையும் சொன்னேன். ஆனால் அவர்கள் நம்பவில்லை.

"நீ ரொம்ப ரொம்ப சாது; அப்பாவி; விஷயம் தெரியாதவன். மேல் நாட்டில் இருந்து விட்டால் மட்டும் என்ன ஆயிற்று? உன் பிறவிக் குணம் போகுமா? அது சிறிதும் மாறவில்லையே! ஸ்டீலா பணம் இல்லாதவளாக இருந்த வரை உன்னுடையவளாக இருந்தாள். கையில் காசு இல்லாத காலத்தில் உன்னை மண்டியிருந்ததில் அவளுக்கு லாபமாயிருந்தது; நன்மையாயிருந்தது. ஆனால் இப்பொழுதோ அவள் பணக்காரி. அவளுடைய சுய ஜாதிக்காரர்களான எத்தனையோ பெரிய பெரிய பணக்காரர்களே இனி அவளை கல்யாணம் செய்து கொள்ள 'நான் முந்தி நீ முந்தி' என்று போட்டி போட்டுக்கொண்டு வரத் தொடங்கி விடுவார்கள். ஆகவே, இனி அவள் உன்னை ஏன் லட்சியம் செய்யப் போகிறாள்? நாங்கள் சொல்லுகிறோமே என்று நினைத்துக் கொள்ளாதே! அவள் கட்டாயம் நாங்கள் சொல்வது போல் மனம் மாறி விடுகிறாளா, இல்லையா என்று வேண்டுமானால் நீயே பொறுத்திருந்து பார். நாங்கள் சொன்னது உண்மையாகி அவள் மனம் மாறி விட்டால் ரூப் சந்தும் தேவகியும் அப்பொழுதே சொன்னார்களே, அது எவ்வளவு சரியாகி விட்டது என்று நீயே சொல்லுவாய்!" என்றார்கள்.

என் காதுகளில் அவர்களுடைய அந்தச் சொற்கள் நாராசமாக ஒலித்தன. மனிதன் ஒருவரைத் தனக்கு வேண்டியவர்கள் என்று நினைத்துப் பிடிமானம் கொண்டு நேசிக்கத் தொடங்கி விட்டால், முழு மனத்துடன் நம்பத் தொடங்கி விட்டால், அந்த நபருக்கெதிராக யார் என்ன சொன்னாலும் காதில் வாங்கிக் கொள்ள மாட்டான்; தனக்கு



வேண்டியவர்கள் என்று தீர்மானித்து விட்ட அவர்கள் ஏதாவது கோள் சொன்னாலும் குணமாகக் கொள்ளுவான். ஆனால் அவர்களுக் கெதிராக யாராவது தனக்கு நல்லதைச் சொன்னாலும் அதைப் பொல்லாததாகத்தான் எடுத்துக் கொள்வான். இது மனிதனுடைய சுபாவம். ஆகவே, ஸ்டீலாவை முழு மனத்துடன் நம்பி நேசித்த எனக்குத் தேவகி—ரூப்சந்தின் வார்த்தைகள் தவறாகப் பட்டதில் ஆச்சரியம் என்ன? எனக்கு அவர்கள் மீது எல்லையற்ற கோபம் உண்டாகியது. ஆயினும் அதை அடக்கிக்கொண்டு வெடிப்பாக, "நீங்கள் நினைப்பது சிறிதும் சரியல்ல; வெறும் பிரமை!" என்றேன்.


இப்பொழுது இவனிடம் என்ன சொன்னாலும் காதில் ஏறாது. வியர்த்தமாகத்தான் முடியும் என்பதை ரூப்சந்த் உணர்ந்து கொண்டார். பித்தனுக்கும் காதல் பித்தனுக்கும் கூறும் உபதேசம் கொஞ்சமும் பலன் அளிக்காது. நேர் எதிரிடையான பலனை அளிக்கத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பது ரூப் சந்தைப் போன்ற அறிவாளிகள் அறியாத விஷயம் அல்லவே! ஆகவே, அவர் தம்முடைய பேச்சின் போக்கை மாற்றினார். ஆயினும் அவர்களுடைய பேச்சு அன்று எனக்கு ரசிக்கவில்லை. ஒரு காலத்தில் அவர்கள் வாயிலிருந்து வெளி வரும் ஒவ்வொரு சொல்லும் என் காதுக்கு அமிர்த வர்ஷமாகத் தோன்றியது உண்டு; கனுவுக்குக் கனு இனிக்கும் கரும்பாக இருந்தது உண்டு. என் உள்ளத்தை மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க விட்டதுஉண்டு. ஆனால் அதே பேச்சு, கரும்பாக இனித்த அதே பேச்சு, அன்று எனக்கு வேம்பாகக் கசந்தது. ஆகவே, செய்தித் தாளைக் கையில் எடுத்துக் கொண்டு படிப்பது போல் பாவனை செய்யலானேன். வேண்டாதவர்களை வெளியேற்றுவதற்கு மேல் நாட்டவர் கையாளும் முறை இது. என் உத்தேசத்தை உணர்ந்த ரூப்சந்தும் தேவகியும் எழுந்து விட்டார்கள். அதைக் கண்ட நான், "என்ன, இன்று இவ்வளவு சீக்கிரம்......?" என்று இழுத்தேன்.

நான் ஒப்புக்கு அவ்வாறு சொன்னேனே ஒழிய, என் உள்ளம் உள்ளூற அவர்கள் திரும்பவும் உட்கார்ந்து விடாமல் இருக்க வேண்டுமென்றுதான் அடித்துக் கொண்டது.

"நாங்கள் சீக்கிரமாகப் போவதைக் குறித்து நீங்கள் உள்ளூறச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பீர்கள்!" என்றாள் தேவகி. என் உள்ளத்தில் உள்ளதை அவள் எப்படித் தான் கண்டு சொன்னாளோ, எனக்குத் தெரியாது.

ஆனால் அதைக் கேட்டதும் எனக்குத் திருடனுக்குத் தேள் கொட்டினாற் போலிருந்தது. இருந்தாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் சிரித்து மழுப்பி விட்டேன். இருவரும் விடைபெற்றுக் கொண்டு போன பின்புதான் எனக்கு என் உணர்வு வந்தது. 'அப்பாடா!' என்று அமைதியான ஒரு நீண்ட மூச்சு விட்டேன்.

ஸ்டீலா வந்துவிடுவாள் என்ற நம்பிக்கை என் உள்ளத்தில் அலைபாய்ந்து கொண்டிருந்தது. ஆகவே, நான் நள்ளிரவு வரை அவள் வரவை எதிர்பார்த்த வண்ணம் வாசற்படியில் நின்று கொண்டிருந்தேன். ஆனால் அவள்



வரவில்லை. 'இன்று நேரம் ஆகி விட்டது. நாளை வருவான்!' என்று எண்ணி என் அறையில் போய்ப் படுத்தேன். சரியான தூக்கம் வந்தால்தானே? கண்ணைத் திறந்தால் அவள் கற்பனை உருவம். கண்ணை மூடினால் அவளுடைய கனவு. கனவிலும் நினைவிலும் அவள் நினைவு. இப்படியே இரவு கழிந்தது. பொழுது விடிந்தது. 'அவன் வருவான்' என்ற நம்பிக்கை என்னை மறுபடியும் வாசற்படியில் கொண்டு போய் நிறுத்திவிட்டது. ஏதாவது மோட்டார் வந்தால் அவள்தான் வருகிறாளோ என்று எண்ணிக் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்ப்பேன். ஏதாவது பெண் குரல் கேட்டால் அவள்தான் வந்து விட்டாளோ என்று எண்ணிக் காதைத் தீட்டிக் கொண்டு கேட்பேன். ஆனால் அவள் வரவில்லை. இப்படியே மறு நாள் பகல் பொழுதும் ஊர்ந்து சென்று விட்டது. என் கால்கள் கடுத்தனவே ஒழிய, அவள் வரும் வழியாகத் தோன்றவில்லை. நம்பிக்கை இழந்து அறைக்குச் சென்று நாற்காலியில் தொப்பென்று விழுந்தேன். ஆனால் நம்பிக்கை இவ்வளவு சீக்கிரம் நசிக்கக் கூடியதல்லவே! ஆகவே, என் விழிகள் வாசற்புறத்தை விட்டு உள்ளே வர மறுத்து விட்டன. கடைசியில் நள்ளிரவும் கடந்துவிடவே, ஹோட்டல் வேலைக்காரன் வாசற் கதவையும் தடாரென்று சாத்தித் தாளிட்டுவிட்டான். அதைக் கண்ணுற்ற எனக்கு என்னுடைய நம்பிக்கைக் கதவும் அத்துடன் சேர்ந்தாற்போல் அடைபட்டு விட்டதாகவே தோன்றியது.

'இன்றைக்கும் இவள் வரக் காணோமே, என்னதான் காரணமாயிருக்கலாம்?' என்று யோசித்தேன். யோசிக்க யோசிக்க எனக்குக்

காரணம் விளங்கனுல்தானே? ஆகவே, எனக்கு இடையிடையே அவள்மீது அளவற்ற கோபம் உண்டாயிற்று. 'கையில் நாலு காசு வந்ததும் நம்மை மறந்து விட்டாளா, என்ன? அப்படியிருந்தால் இனி நாம் இவளுடன் முகங் கொடுத்துக் கூடப் பேசக் கூடாது. ஏன்? இவள் முகத்திலேயே கூட விழிக்கக் கூடாது. இவளுக்குச் செல்வச் செருக்குத் தலைக்கு ஏறிவிட்டது போலும்! இருக்கட்டும், சொல்லுகிறேன்!' என்று மனத்துள் கருவிக் கொண்டேன்.

'ஆமாம், ஒரு காலத்தில் நாமும் பணக்காரனுகத்தான் இருந்தோம். காசுக்கு விங்கிச் சாகும் ஏழையாயில்லை என்பது இவளுக்கு நினைவு இருக்க வேண்டாமா? நான் என் பணம், சொத்து, சுதந்திரம், சுகம் முழுவதையும் இவளுக்குத்தானே அர்ப்பணம் செய்திருக்கிறேன்! நானும் எல்லோரையும் போலப் பணத்தைப் பத்திரப் படுத்தியிருந்தால் இவளைப்போல் எத்தனையோ பேரை விலைக்கே வாங்கியிருப்பேன் அல்லவா? இதையெல்லாம் இவள் சிறிதாவது சிந்தித்துப் பார்த்தால்தானே? பணம் வந்தாலே இப்படித்தானே?' என்ற எண்ணம் என் உள்ளத்தை வாட்டியது. 'ரூப்சந்தும் தேவகியும் கூடச் சொன்னர்களே! அவர்கள் நம்மை விட அநுபவசாலிகளாயிற்றே! தெரியாமலா சொல்லியிருப்பார்கள்?' என்ற எண்ணம் முன் எண்ணத்துக்கு வலுவூட்டியது.

ஆனல் அடுத்தகணமே, 'சேச்சே! அப்படியெல்லாம் இராது. அவள் உண்மையாகவே உயிருக்கு உயிராக என்னைக் காதலிக்கிருள். ஒருகாலும் என்னை மறக்கமாட்டாள். புதுச் சொத்து வந்திருக்கிறதல்லவா? அதற்காக வக்கீல்களைக் கண்டு ஏதாவது ஆலோசித்துக் கொண்டிருப்பாள். இல்லாவிட்டால் கடைகண்ணி எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் கவனிப்பதில் தன் கவனத்தைச் செலுத்தியிருப்பாள். இதனுல் எல்லாம் என்னைப் பார்க்க வர அவளுக்குப் பொழுது கிடைத்திராது. கிடைத்திருந்தால் இவ்வளவு நேரம் என்னைப் பார்க்க ஓடிவந்திருக்க மாட்டாளா?' என்ற எண்ணம் எனக்கு மறுபடியும் இழந்த நம்பிக்கையை அளித்தது.

இந்தமாதிரி நம்பிக்கைப் போராட்டத்தில் ஒரு வாரம் உருண்டோடிவிட்டது. ஆனல்... ஆனல் அவள் வரவில்லை. ஒரு வாரத்துக்கு மேல் ஆகிவிடவே, 'இனி நம் நம்பிக்கைப் பயிர் துளிர்க்காது. அது வாடினது வாடினது தான்' என்ற நம்பிக்கை உறுதிப்பட்டு விட்டது. தனது அன்புக்கன்பான சுற்றத்தார் யாராவது இறந்துவிட்டால் மனிதன் தன் மனத்தைத் தேற்றிக் கொள்வானே, அதுபோல் நான் என் உள்ளத்தைத் தேற்றி அவளை மறக்க முயன்றேன். ஆயினும் அவள் நினைவு முகம் மறக்கவில்லை; ஆசை முகம் அகலவில்லை; நேச முகம் நகரவில்லை.

எவ்வளவுதான் மறக்க முயன்றாலும் இறந்த சுற்றத்தாரின் நினைவு இலேசில் மறப்பதில்லையல்லவா? அதேபோல், அவள் என் மனத் திரையில் தன் நிழலுருவத்தைக் காட்டிக் காட்டி என் மனத்தை வருத்திக் கொண்டிருந்தாள்.


இப்படி நான் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கும்பொழுதுதான் ஒரு நாள் திடீரென்று ஒரு மனிதன் வந்து என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துச் சென்றன். அதில் என்ன எழுதியிருந்தது, தெரியுமா?

"உடனே புறப்பட்டு வரவும். வாசலில் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். ஸ்டீலா" என்று எழுதியிருந்தது. (தொடரும்)



கவிச்சக்கரவர்த்தி ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதியாரின் பேத்தி சௌபாக்கியவதி லலிதா பாரதிக்கும் புதுக்கோட்டை சிரஞ்சீவி சி. வேங்கட சுப்பிரமண்யம் பி. ஏ.க்கும் சென்ற மே மாதம் 5உ திருச்சியில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்குப் பல பிரமுகர்களிடமிருந்தும் ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன.

**வாழ்க! லலிதா - வேங்கடசுப்பிரமண்யம்!**



டாக்டர்:— ஏன் ஐயா! என்றைக்காகிலும் நீர் வயிற்றுக்கு ஆகாரம் சாப்பிட்டுப் பழக்கம் உண்டா?




நல்ல
சிகரெட்
வாங்க
ஏன்
அதிக விலை கொடுக்கிறீர்கள்

50 விலை ரூ 1/4 ★ 10 விலை 3½ அணா
உள்ளூர் வரி அலாதி

ACI Issued by the National Tobacco Co. of India Ltd., Licensees of James Carlton Ltd., London. Cigarettes made in India. N.T.S-47



ஜாம் - பக் நிதமாகவே குணப்படுத்தும் நோய் நிவாரணி

எவ்வளவு விரைவில் ஜாம்பக்

**Zam-Buk**

வெட்டுக் காயங்கள்,
காயங்கள்,
மண்டைச் சொறி,
நெருப்புக் காயங்கள்
ஆகியவற்றை
குணப்படுத்துகிறது என்று பாருங்கள்!

ஜாம்-பக் மூலிகை ஆயின்ட்மென்ட் விரைவாகவும், நிச்சயமாகவும் வேலை செய்கிறது; எப்படியெனில் அதன் ஊடுருவும் திறப்புவாய்ந்த நோய் நிவாரணத் தைலங்கள் நோயுற்ற பாகங்களில் ஊடுருவிச் சென்று குணப்படுத்துகின்றன. ஜாம்-பக் வலியையும் புண்ணையும் குணமாக்குகிறது. ஆபத்து தரும் கிருமிகளை ஜாம்-பக் நாசம் செய்கிறது. அழுக்குக் கழிவுகளை உலர்ந்து போகவும் செய்கிறது. ஜாம்-பக் சருமத்தைப் பாதுகாத்து விரைவாகக் குணப்படுத்துகிறது. மீண்டும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது. வெட்டுக் காயங்கள், காயங்கள், புண்கள், ரணங்கள் ஆணி, நமைச்சல், மற்றும் பல சரும நோய்கள், பூச்சிக்கடி ஆகியவற்றிற்கு ஜாம்-பக் உலகத்திலேயே சிறந்த நிவாரணியாகும். காலில் ஏற்படும் நோய்களுக்கும், மூலத்திற்கும் ஜாம்-பக் அற்புதமான நிவாரணியாகும்.




ஜாம்-பக் உலகத்தின் சிறந்த சரும ஆயின்ட்மென்ட்
மிருகக் கொழுப்புக் கலப்பற்றது என்பது உத்தரவாதம்

மதராஸிற்கு ஸோல் ஏஜண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன் FZY 4

# சித்தப்பா



எஸ். டி.
ஸ்ரீநிவாஸன்

"அப்பா, அப்பா! இது யார் படம்அப்பா!"

ஆபீஸ் பைல்களுக்கு இடையே புதைந்து கிடந்த நாராயணன், தன் கையில் இருந்த பென்ஸிலால் காதைக் குடைந்து கொண்டே முகத்தை நிமிர்த்திப் பார்த்தான். பக்கத்தில் சேகரன் கையில் ஒரு போட்டோவுடன் நின்று கொண்டிருந்தான். போட்டோவைக் கண்ட நாராயணன் சட்டென்று அதைத் தன் கையில் வாங்கிக்கொண்டு, "இதை எங்கே இருந்தடா எடுத்தாய்!" என்று பரபரப்புடன் கேட்டான்.

"வராந்தா மூலையிலே போட்டுக் கிடக்கிறதே, ஒரு பழைய மரப் பெட்டி, அதிலிருந்து எடுத்தேன்......யார் போட்டோ, அப்பா இது!" என்று கூறிக்கொண்டே ஆவலுடன் நாராயணனின் முகத்தைப் பார்த்தான் சேகரன்.

கையில் இருந்த போட்டோவை ஒரு கணம் உற்றுக் கவனித்த நாராயணனின் இருதயத்திலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது.

தான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், பெரிய சிந்தனையில் ஆழ்ந்து விட்ட தன் தந்தையின் போக்கு சேகரனுக்குப் பிடிபடவில்லை. 'போட்டோவில் இருப்பது யார்!' என்பதை அறிந்து கொள்ளத் துடித்தது அவனுடைய பிஞ்சு உள்ளம்.

"அது யார் என்று சொல்லாமல் நீ அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டு இருக்கிறாயே......!" என்றான்.

அப்போதுதான் சுய உணர்வு வந்தது நாராயணனுக்கு.

"அது உன் சித்தப்பா......!"

"சித்தப்பாவா......! அவரை நான் பார்த்ததே இல்லையே! அவர் இப்போ எங்கே இருக்கிறார்! நம் வீட்டுக்கு எப்போ வருவார்!......"

குழந்தையின் கேள்விக்கு அவனால் நேரடியான பதில் சொல்ல முடியவில்லை. தன் வாழ்க்கையின் கசந்ததொரு அம்சத்தை கூறிக் குழந்தையின் மனத்தில் புரியாத பிரச்னைகளைக் கிளப்ப அவன் இஷ்டப்படவில்லை. ஆகவே அவன், "உன் சித்தப்பா வேறு ஒரு ஊரிலே இருக்கிறார். அவருக்கு லீவு கிடைக்கும்பொழுது இங்கே வருவார்" என்று கூறித் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டான்.

"எங்களுக்குப் பெரிய பரீக்ஷை முடிந்து லீவு விடும்பொழுது நீ என்னை அந்தச் சித்தப்பாவின் ஊருக்கு அழைத்துக் கொண்டு போகிறாயா!" என்று கேட்டான் சேகரன்.

"ஆகட்டும். நீ போய் விளையாடு!......" என்று கூறி அவனை அந்த இடத்திலிருந்து அனுப்ப முயன்றான் நாராயணன்.

"அந்தப் போட்டோவை என்னிடம் கொடு. நான் வைத்துக் கொண்டு விளையாடுகிறேன்......" என்று தன் கையை நீட்டினான் சேகரன்.

"இதற்கு நல்ல கண்ணாடி போட்டு அப்பு தருகிறேன்" என்று சொல்லிவிட்டு நாராயணன் அதைத் தன் மேஜை டிராயரில் வைத்தான். சேகரன் மெதுவாக அந்த அறையை விட்டு வெளியே சென்றான்.

மறுபடியும் நாராயணன் கையில் பென்ஸிலை எடுத்தான். பைல்களைப் புரட்டினான். ஆனால் அவன் கண்கள் அவைகளைப் பார்த்தனவே தவிர, அவன் கவனம் அங்கில்லை. ராமமூர்த்தியைச் சுற்றி அவன் சிந்தனை சுழன்றது.

* * *

தன் பெற்றோரை இழந்தபோது நாராயணனுக்கு வயது இருபது. ராமமூர்த்தி அவனைவிட நான்கு வயது சின்னவன். நாராயணன் பி. ஏ. பாஸ் செய்து விட்டு ஒரு கம்பெனியில் வேலையாக இருந்தான். ஒரு நல்ல இடத்தில் அவனுக்கு மணமாயிற்று. அவனுக்கு வாய்த்த மனைவி—ராஜமும் நல்ல பெண்தான். தன் மைத்துனனை நன்றாகத்தான் வைத்துக் கொண்டிருந்தாள்.

ராமமூர்த்திக்கு இயற்கையிலேயே ஒரு குறை இருந்து வந்தது. அவன் வலது கால் சற்று ஊனம். அந்தக் குறையின் காரணமாக அவன் படிப்பு மூன்றாவது பாரத்துடன் நின்றுவிட்டது. இயற்கையிலேயே ஒரு ஊனத்துடன் இருந்த தன் தம்பியைப் பரிவுடன் காப்பாற்றி வந்தான் நாராயணன். தன்னைப்போல் அக்கறை எடுத்துக் கொண்டு ராமமூர்த்தியைத் தன் சொந்தத் தம்பி மாதிரி பாவித்து நடத்திய ராஜத்திடமும் அவனுக்குத் தனி மதிப்பு ஏற்பட்டது.

வயது ஆகிக்கொண்டே இருந்ததே தவிர, ராமமூர்த்தியால் எந்த வேலைக்கும் போக முடியவில்லை. அவன் வேலை செய்து சம்பாதிக்க வேண்டும் என்ற விருப்பமும் நாராயணனுக்கு இல்லை.

இதனிடையே ராஜம் கருவுற்றாள். பிறந்தகம் சென்ற அவள் சேகரனைப் பெற்றெடுத்துக் கொண்டு வந்தாள். ஆனால் அவள் திரும்பி வந்த சில மாதங்களுக்குள் அந்த ஆதரிசத் தம்பதிகளின் ஆனந்த வாழ்க்கையில் திடீரென்று அந்தச் சம்பவம் நடந்து அவர்கள் நிம்மதியைப் பெரிதும் கலைத்தது.

சேகரன் அப்போது ஒரு வயதுக் குழந்தை. அவனுக்கு மூன்று சவரனில் ஒரு தங்க அரைஞாண் செய்து போட்டிருந்தனர்.

அன்று வெள்ளிக்கிழமை. மாலை ஐந்து மணிக்குக் கையில் ஒரு செண்டுப் பூவுடன் வீட்டிற்குள் நுழைந்தான் நாராயணன். கூடத்தில் விளையாடிக் கொண்டிருந்த சேகரனைக் கண்டதும் அவனுக்குத் 'திக்' கென்றது. அவன் இடுப்பில் இருந்த அரைஞாணைக் காணவில்லை. பரபரப்புடன் ராஜத்தைக் கூப்பிட்டான். அவளும் விஷயத்தை அறிந்து திடுக்கிட்டாள். இருவரும் வீடு முழுவதும் தேடினர்.

தன் அறையில் உட்கார்ந்து ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த ராமமூர்த்தியும் அவர்களுடன் சேர்ந்து தேடினான். அது எங்கு போய் விட்டதென்று ஒருவருக்கும் புரியவில்லை.

அரை மணி நேரத்திற்கெல்லாம் ராமமூர்த்தி வெளியே போகக் கிளம்பினான். சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான். சட்டைப் பையிலிருந்து 'தொப்' பென்று ஏதோ ஒன்று கீழே விழுந்தது. அச்சமயத்தில் நாராயணன் அந்த அறைக்குள் வந்தான். கீழே விழுந்த அதை ராம

மூர்த்தி பரபரப்புடன் குனிந்து கையில் எடுத்தான். சேகரனின் அரை ஞாண்!

நாராயணனின் கண்கள் கோபத்தால் சிவந்தன. ''அயோக்கியப் பயலே! ஹூம்! சரிதான். இப்போ இந்தக் காரியம் வேறு நடக்கிறதோ!...'' என்று கேட்டவாறே சட்டென்று அதை அவன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டான்.

ராமமூர்த்தி 'திரு திரு' வென்று விழித்தான்.

தன் கணவன் போட்ட சப்தத்தைக் கேட்டு ராஜம் அங்கு ஓடி வந்தாள். தன் கணவன் கையில் குழந்தையின் அரைஞாண் இருப்பதையும், மைத்துனன் எதிரே ஆடு திருடிய கள்ளன் மாதிரி விழித்துக் கொண்டு நிற்பதையும் கண்டாள். அவளுக்கு விஷயம் ஒன்றுமே புரியவில்லை.

மனைவியைக் கண்ட நாராயணன், ''ராஜம்! பார்த்தாயா, இவன் காரியத்தை! வீட்டிலிருந்த குழந்தையின் நகை எங்கே போய்விடும்! நீ உள்ளே இருக்கும்போது இவன் குழந்தையின் இடுப்பிலிருந்து கழற்றித் தன் சட்டைப் பையிலே போட்டுக் கொண்டு விட்டான். கடையிலே கொண்டு போய் விற்று, சுகமாக செலவழிக்கப் 'பிளான்' போட்டிருக்கிறான்...... நாம் தேடும் போது தானும் தேடுவது போல் பாசாங்கு பண்ணியிருக்கிறான், அயோக்கியன்! உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைப்பவன்'' என்று சொல்லிக் கொண்டே அவனை அடிக்கப் போனான். தன் கணவனுக்குக் கோபம் வந்து விட்டால் என்ன செய்வான் என்று அவளுக்குத் தெரியும். தன் மைத்துனன் நிலையைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாக இருந்தது. ஆகவே அவள், ''போனால் போகிறது. விட்டு விடுங்கோ. அவர் மனசு நோகும்படி எதுவும் செய்யாதேயுங்கோ......'' என்று கூறி நாராயணனைத் தடுத்தாள்.

ஆனால் நாராயணனின் கோபம் தணியவில்லை. ''இவனை வீட்டிலே வைத்துக் கொண்டு கொட்டுகிறதே தண்டச் சோறு! போடா, இனிமேல் என் முகத்தில் விழிக்காதே! துரோகி! எங்கேயாவது தொலை! எக்கேடாவது கெட்டுப்போ!'' என்று சொல்லி அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளினான். ஆனால் ராமமூர்த்தி கண்களில் நீர் பெருகத் தயங்கித் தயங்கி நின்றான். அவன் கழுத்தைப் பிடித்துக் கரகர வென்று தள்ளிக் கொண்டு போய் வெளியே விட்டுவிட்டுத் தெருக் கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்த பிறகுதான் நாராயணனின் கோபம் அடங்கியது.

அன்று சென்றவன்தான் ராமமூர்த்தி. அதற்குப் பின் 'அவன் எங்கிருக்கிறான், என்ன ஆனான்!' என்றே யாருக்கும் தெரியாது.


கோபம் அடங்கி நாராயணனின் மனத்தில் சாந்தம் உண்டாகிய பொழுது தான், அவசரப் பட்டுக் கொண்டு ஒரு ஊனத்துடன் கூடிய தன் தம்பியை வீட்டை விட்டு வெளியே துரத்தியது நியாயம் இல்லை என்று தோன்றியது. அவனைத் திரும்ப வீட்டிற்கு அழைத்து வர, அவனைத் தேடினான். ஆனால் அவன் அகப்படவில்லை.

இதற்கிடையே நாட்கள் ஓடிக் கொண்டேயிருந்தன. நாராயணன் பல ஊர்களுக்கு மாற்றப் பட்டுக் கடைசியாக இரண்டு வாரங்களுக்கு முன் மதுரைக்கு வந்து சேர்ந்தான்.

ராமமூர்த்தி இருந்ததும், வாழ்ந்ததும் நாராயணன் குடும்பத்தைப் பொறுத்தவரை இப்போது ஒரு தேய்ந்த கனவாகி விட்டது. இப்போது குழந்தை அந்தப் போட்டோவை எடுத்து வரவே, நாராயணனுக்குப் பழைய நினைவுகள் வந்தன.

'ஹூம்! அவன் இப்போது எங்கிருக்கிறானோ! என்ன செய்கிறானோ! நாம் நல்ல உத்தியோகத்தில்



இருந்து கொண்டு, சுகபோகமான வாழ்க்கை நடத்துகிறோம். அவன் எங்கே திண்டாடுகிறானோ! உலகத்தில் எத்தனையோ பேர் அவன் செய்ததைக் காட்டிலும் பெரிய குற்றங்களைச் செய்ததில்லையா! அவர்களை எல்லாம் மன்னித்து விடவில்லையா !... ராமமூர்த்தி உயிருடன் இருக்கிறானோ அல்லது இறந்தேதான் விட்டானோ !'' இந்த எண்ணம் வந்ததும் அவன் கண்கள் அவனையறியாமலே இரண்டு சொட்டுக் கண்ணீரைச் சிந்தின.

மணி பத்து அடித்துவிட்டது. அவன் குளித்துச் சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்குக் கிளம்பினான்.

* * *

மணி பன்னிரண்டு. நாராயணன் ஆபீஸில் ஏதோ ஒரு பெரிய கணக்குப் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு, சரி பார்த்துக் கொண்டிருந்தான். ஆபீஸ் பியூன் அவசரமாக ஓடிவந்து, ''உங்களுக்கு டெலிபோன் வந்திருக்கிறது, சார்!'' என்றான்.

நாராயணன் எழுந்து சென்று 'ரிஸீவரை'க் காதில் வைத்துக் கொண்டான்.

'' ஹலோ !......''

'' ஹலோ !......மிஸ்டர் நாராயணன் தானே பேசுகிறது? நான் மிஷன் ஆஸ்பத்திரியிலிருந்து பேசுகிறேன். இந்த ஊர் 'ஹாப்பி வாட்ச்' சொந்தக்காரர், ரொம்ப ஸீரியஸ்ஸாக இங்கே 'ஜெனரல் வார்ட்' நாலாம் நம்பர் 'பெட்'டிலே படுத்துக் கொண்டிருக்கிறார். அவர் உங்களைப் பார்க்கணுமாம். கூப்பிடச் சொன்னார்...... ''

நாராயணனுக்கு ஒன்றும் புரியவில்லை.

'' எனக்கு அவரைத் தெரியாது, சார்! நீங்கள் தவறான நம்பருக்கு ......''

'' இல்லை, சார்! உங்களைத்தான் அவர் கூப்பிடச் சொல்கிறார். தயவு செய்து சீக்கிரம் புறப்பட்டு வாருங்கள் !''

அடுத்த கணம் 'கனெக்ஷன்' அறுந்து விட்டது.

தன்னைக் கூப்பிடும் ஆசாமி யார், ஏன் அவர் தன்னைக் கூப்பிடுகிறார் என்று நாராயணனுக்குப் புரியவில்லை. இருந்தாலும் ஆபீஸ் மானேஜரிடம் அனுமதி கேட்டுக் கொண்டு உடனே பஸ் ஏறி மிஷன் ஆஸ்பத்திரிக்குச் சென்றான். குறிப்பிட்ட வார்டில் நாலாம் நம்பர் படுக்கையை அடைந்ததும் அவன் தலை அப்படியே சுழன்றது. துக்கம் தொண்டையை அடைத்தது. உடம்பெல்லாம் பலத்த கட்டுகளுடன் ராமமூர்த்தி கட்டிலில் படுத்திருந்தான்.

'' ராமு! நீயாடா! நான் டெலிபோன் வந்ததும் நீ என்று துளிக்கூட நினைக்கவில்லையடா. உனக்கு என்னடா உடம்பு!'' என்று கதறினான் நாராயணன். அவன் கண்கள் நீர் முத்துக்களை உதிர்த்தன.

ராமமூர்த்தி மெதுவாகத் தன் தலைமாட்டில் இருந்த ஒரு கவரை எடுத்து நாராயணன் கையில் கொடுத்தான்.

அதை வாங்கிய நாராயணன் அவசரம் அவசரமாகப் பிரித்துப் படிக்கலானான்:

'' அண்ணாவுக்கு நமஸ்காரம். என்றைக்காவது ஒரு நாள் உண்மையைச் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று இந்தக் கடிதத்தை எழுதுகிறேன் இது எப்பொழுது உன் கையில் கிடைத்தாலும் சரி, என்னை மன்னித்துவிடு

நான் ஆறு வருடங்களுக்கு முன் வீட்டை விட்டு வெளியேற நேர்ந்த சந்தர்ப்பத்தை இங்கே விளக்கிக் கூறி விடுகிறேன்.

மன்னி வந்த புதிதில் என்னை ரொம்ப நன்றாகத்தான் கவனித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் பிரசவிக்கப் பிறந்தகம் போய்த் திரும்பிய பிறகுதான் அவள் நடத்தையில் மாறுதல் ஏற்பட்டது. அவளைக் கொண்டு விட வந்த அவள் தாயாருக்கு நான் ஒரு வேலையும் இல்லாமல் உன் சம்பாத்தியத்தில் சாப்பிட்டுக் கொண்டிருப்பது பிடிக்கவில்லை. ஆகவே அவள் மன்னியிடம் ஏதோ

வது ஒரு பழியை என் மீது சுமத்தி என்னை வீட்டை விட்டு விரட்டி விடும்படி உபதேசம் செய்தாள். அவர்கள் சம்பாஷணையை நான் அகஸ்மாத்தாகக் கேட்க நேர்ந்தது. அதன் பலனாக விஷவித்து மன்னியின் மனத்தில் விழுந்து முளைக்கத் தொடங்கியது. அன்று நான் எங்கேயோ வெளியே போயிருந்த போது மன்னி குழந்தையின் அரைஞாணைக் கழற்றி என் சட்டைப்பையில் போட்டு என்னைத் திருடனாக்கி விட்டாள். என் மேல் ரொம்பப் பரிதாபப்படுபவள் போல் நடித்தாள். விஷயம் எனக்குத் தெரியும். நீ என்னைத் திட்டிய போது நான் உண்மையை வெளியிடத் துடித்தேன். ஆனால் விவேகம் என்னைத் தடுத்தது. 'அந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறுவது உண்மை என்று உனக்குப்படாது. அப்படிப் பட்டாலும் தன் முயற்சியில் ஒரு முறை தோல்வியடைந்த அவள் என்னை வெளியேற்ற இன்னும் வெவ்வேறு வகையில் முயற்சி செய்தாலும் செய்யலாம். அதைக் காட்டிலும் உங்கள் குடும்பத்துக்குப் பாரமாக இல்லாமல், உங்கள் தாம்பத்ய வாழ்க்கைக்கு இடையூறாக இல்லாமல் நான் குற்றத்தை ஏற்றுக் கொண்டு வெளியே போய் விடுவதே மேல் என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டேன். ஒரு விதத்தில் அது நல்லதாகவே முடிந்தது. ஒன்றிரண்டு வருஷங்கள் ஒரு ஓட்டலில் வேலை செய்தேன். பிறகு நானே ஒரு ஓட்டல் வைத்தேன். ஐம்பதாயிரம் வரை பணம் சேர்ந்தது. இங்கே ஒரு வீடும் வாங்கி விட்டேன்.

இதற்கிடையில் ஒரு ஏழைப் பெண் என்னை மணக்க முன் வந்தாள். அவளை மணந்து கொண்டு நான் இரண்டு வருஷமாக இன்பவாழ்க்கை நடத்தி வருகிறேன். மன்னி என்னை வீட்டை விட்டுத் துரத்தியதும் ஒருவிதத்தில் நன்மையாகத்தான் முடிந்தது. நான் இப்போது உள்ள நிலை மன்னியால்தான் எனக்கு ஏற்பட்டது.''

இதைப் படித்த நாராயணன், ''ராமமூர்த்தி! தெரியாமல் நான் செய்த தவறுக்கு என்னை மன்னித்து விடு'' என்று விம்மினான்.

அதே சமயத்தில் சுமார் இருபது வயதுப் பெண் ஒருத்தி கதறி அழுது கொண்டே அந்தக் கட்டில் அருகே வந்து நின்றாள்.

ராமமூர்த்தி மெதுவாகப் புரண்டு படுத்தான். பிறகு மெல்லிய குரலில், "அண்ணா! நான் இனி பிழைக்க மாட்டேன். நீ இந்த ஊருக்கு மாற்றலாகி வந்திருப்பது நேற்றுத்தான் எனக்குத் தெரிய வந்தது. விஷயம் அறிந்ததும் நான் உன்னைக் காணப் புறப்பட்டேன். வீதியில் விபத்துக்குள்ளானேன். நான் வீட்டை விட்டு வெளியேறி வந்ததற்காக என்னை மன்னித்து விடு. மன்னியிடம் என் நமஸ்காரத்தைத் தெரிவி. இன்று காலை என் வக்கீல் வந்திருந்தார். என் ஆஸ்தி அத்தனையையும் உன் பெயருக்கு எழுதி வைத்திருக்கிறேன். இதோ நிற்கும் என் மனைவியை அவள் உயிருள்ள வரை காப்பாற்று. தன் தங்கைபோல் பாவித்து நடத்தும்படி மன்னியிடமும் சொல். மன்னிக்கு என் நமஸ்காரம்...'' என்றான்.

அவன் குரல் கம்பியது. மெல்ல அவன் கண்கள் உள்ளுக்குச் செருகின. 'ஓ' வெனக் கதறினாள் ராமமூர்த்தியின் மனைவி.

''ஐயோ! ராமமூர்த்தி! உன்னைப் போல ஒரு தம்பியைப் பார்க்க முடியுமா!'' என்று நாராயணன் போட்ட சப்தம் அந்த ஆஸ்பத்திரியின் மூலை முடுக்குகளிலெல்லாம் எதிரொலித்தது.






புதுமை பெறுங்கள்! முதலில் ஸ்நானம் செய்ததும் சார்மிஸ் டால்கம் பவுடரை உடல் முழுவதும் தூவுங்கள். எத்தகைய புதுமை உணர்ச்சி அது அளிக்கும் தெரியுமா?

மிருதுத்தன்மை பெறுங்கள்! உடலில் சுரணையுள்ள இடங்களிலும் பவுடரை நன்றாக தடவிவிடுங்கள். அது பட்டைப்போல படர்ந்து எரிச்சல் வராமல் பாதுகாக்கிறது.



நீடித்த இனிமையுடன் இருங்கள்! சார்மிஸ் டால்கம் பவுடரை தாராளமாக அடிக்கடி உபயோகியுங்கள். அது செலவில்லாமல் பெருவாழ்வு அளிக்கும் சாதனம். அழகிற்கும் காதல் கவர்ச்சிக்கும் இதுவே சிறந்த ரகசியம்.

# சார்மிஸ்

## டால்கம் பவுடர்

பரவசப்படுத்தும் மனோஹரமான நறுமண முள்ளது.

## மீண்டும் பாதி விலைக்குக் குறைவான சலுகை!

### 15 நாட்களுக்கு மட்டும்

புகழ் வாய்ந்த ஸ்விஸ் பாக்டரியில் தயாரித்த கைக் கெடிகாரங்கள்.

ஒவ்வொன்றும் ஐந்து வருட உத்திரவாதம் கொண்டவை.



| | ஒரிஜினல் விலை | தற்போது விலை |
|---|---|---|
| ஜெர்மன் பாக்கெட் வாட்ச் | 24/- | 11/- |
| ,, உயர் ரகம் | 28/- | 13/- |
| இங்கிலீஷ் அலாரம் டைம்பீஸ் | 40/- | 19/- |

No. 525



Size 9¾'''

| | | |
|---|---|---|
| 15 ஜுவல் ரோல்டு கோல்டு | 96.- | 45/- |
| 15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ் | 100/- | 48/- |

No. 526



Size 10½'''

| | | |
|---|---|---|
| 15 ஜுவல் ரோல்டு கோல்டு | 98/- | 48/- |
| 15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ் | 110/- | 52/- |

No. 527



Size 5¼'''


பிராக் ஷேப்

| | | |
|---|---|---|
| 5 ஜுவல் க்ரோம் கேஸ் | 45/- | 22/- |
| 5 ஜுவல் ரோல்டு கோல்டு | 52/- | 25/- |

இரண்டு கடிகாரங்கள் ஆர்டர் செய்பவர்களுக்கு தபால் செலவு இலவசம்.

**PIONEER WATCH Co**
POST BOX NO 11428 CALCUTTA

# கோமதி



ஒரியாக் கதை: சகுந்தலா தேவி :: மொழி பெயர்ப்பு: வாஞ்சி

“கோமதி! என் தங்கம் அல்லவா நீ! வயிறு நிறைய மேய்ந்துவிட்டு, சூரியன் அஸ்தமிப்பதற்கு முன் வீட்டுக்குத் திரும்பி வந்து விடு. ஆனால் யாருடைய கொல்லையிலும் வயலிலும் நீ போய் மேயக் கூடாது, தெரிந்ததா!”

இவ்விதம் சேனுவின் தாயார், கோமதி என்ற பெயருள்ள தன் பசு மாட்டுக்குக் கட்டளை யிட்டாள். கோமதி அவள் வீட்டிலேயே பிறந்து அங்கேயே வளர்ந்த பசு.

“கோமதி என்னையே அதன் தாயாக நினைத்துக் கொண்டிருக்கிறது” என்பாள் சேனுவின் தாயார். தான் கூறுவதை அது நன்கு அறிந்து கொள்வதாக அவள் எல்லோரிடமும் பெருமையாகச் சொல்லிக் கொள்வது உண்டு. கோமதியின் பாஷையைத் தான் நன்கு அறிந்து கொள்வதாகவும் அவள் கூறினாள்.

கோமதி ‘அம்மா’ என்று கத்தினால் அது தன்னைக் கூப்பிடுவதாகச் சொல்லி அவசரம் அவசரமாகக் கொட்டிலுக்கு ஓடி வந்து அதைக் கவனிப்பாள். அது எதற்காக உறுமுகிறது! ஏன் காதை அடித்துக் கொள்கிறது! அது முன் காலைத் தரையில் தேய்த்துக் கொள்வதன் காரணம் என்ன!—இவ்வாறாக, கோமதியின் சந்தோஷம், வருத்தம், சோர்வு, உற்சாகம் எல்லாம் தனக்குத் தெரிவதாக அவள் அடிக்கடி எல்லோரிடமும் கூறி வந்தாள்.

அது மேய்ந்துவிட்டுத் திரும்பி வரும்போது, சேனுவின் தாயார் அதன் வயிற்றைத் தடவிப் பார்ப்பாள். “தங்கம்! இன்று உன் வயிறு நிரம்பவில்லை போலிருக்கிறதே!” என்று அன்புடன் கூறி அதன் முதுகின்மீது இலேசாகத் தட்டிக் கொடுப்பாள்.

“ஓஹோ, தாகமாக இருக்கிறதா! தொட்டி நிறைய நல்ல கழுநீர் இருக்கிறது, போய்க் குடி, அம்மா!” என்று பரிவுடன் சொல்லுவாள்.

அதன்மீது ஏதாவது அழுக்கிருந்தால் அதைத் துடைப்பாள். “இன்று உன் கண்ணில் ஏன் ஜலம் வருகிறது!.......முன்பு இறந்த இரண்டு கன்றுக் குட்டிகளை நினைத்துக் கொண்டு வருத்தப்படுகிறாயோ! நான்கூடத்தான் இரண்டு குழந்தைகளைப் பறிகொடுத்தேன். அதை யெல்லாம் நினைக்கவே கூடாது. மறந்துவிட வேண்டும்” என்று ஆறுதல் சொல்லுவாள்.

கோமதியின் வாழ்க்கைக்கும் தன் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பும் ஒற்றுமையும் இருப்பதைத் தகுந்த காரணங்களுடன் சேனுவின் தாயார் அண்டை வீட்டுக்காரர்களுக்கு எடுத்துச் சொல்லுவாள். மேற்படி காரணங்களை அவர்களால் மறுக்க முடியாது.

“இந்தக் கிழவிக்கு அந்தப் பசுமாட்டினிடம் எவ்வளவு பாசம்!” என்று அந்த ஊரில் உள்ள பலர் ஆச்சரியப்பட்டனர்.

“அவளுக்குப் பாசம் எதுவும் இல்லை, பைத்தியம்தான்” என்று மற்றும் சிலர் அவளை ஏளனம் செய்தார்கள்.

கோமதியைப் பற்றிச் சேனுவின் தாயார் பெருமையாகக் கூறுவதைக் கேட்கும் விஷயம் தெரியாத சிலர், அவள் தன் சொந்தப் பெண்ணைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்கிறாள் என்று தவறாக நினைத்துக் கொள்வது உண்டு!

தன் தாயார், பசு மாட்டினிடம் பாசம் வைப்பதால் தனக்கு நஷ்டம் எதுவும் இல்லை அல்லவா! எனவே சேனு அவ்விஷயமாகத் தன் தாயாரை எதுவும் கேட்பதில்லை.

ஒரு நாள் இரவு பதினொரு மணி இருக்கும். “சேனு, எழுந்திரு! எழுந்திரு!” என்று அவன் தாயார் கத்தினாள். சேனு அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருந்தான்.

“கொல்லையில் கோமதி ஒரு தினுசாக உறுமுகிறது. என்ன விபரீதமோ, தெரியவில்லை. சீக்

திரம் எழுந்து வா!'' என்று சேனுவை அவன் தாயார் பரபரப்புடன் கூப்பிட்டாள்.

அதைக் கேட்டதும் சேனுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

'' அம்மா! உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா! பேசாமல் தூங்கு. ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக மாடு இவளைக் கூப்பிடுகிறதாம்!'' என்று சீறினான் சேனு.

''நீ வராவிட்டால் நான் போய்ப் பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டு, சேனுவின் தாயார் விளக்கை ஏற்றிக் கொண்டு மாட்டுக் கொட்டிலுக்கு ஓடினாள். வேண்டா வெறுப்பாகச் சேனுவும் கூடச் சென்றான்.

கொட்டிலில் அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. அங்கு ஒரு பெரிய ஸர்ப்பம் படம் எடுத்தவண்ணம் கொட்டிலை வட்டமிட்டுக் கொண்டிருந்தது. வெளிச்சத்தைக் கண்டதும் அது அதிவேகமாகக் கொல்லைப்புறம் ஓடி மறைந்து விட்டது.

சில வருஷங்களுக்கு முன் அதே கொட்டிலில் நிறையப் பால் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு மாடு திடீரென்று இறந்து கிடந்தது. மேற்படி மாட்டைப் பரிசோதனை செய்த வைத்தியர்கள் அது விஷக்கடியால் இறந்திருக்க வேண்டும் என்று கூறினர். இன்று சேனு கண்ட ஸர்ப்பமே அந்த மாட்டுக்கு யமனாகி யிருக்கலாம் என்று தோன்றியது அவனுக்கு.

இதற்குமுன் கோமதியைப் பற்றித் தன் தாயார் கூறியதற்கு அவன் செவி கொடுத்ததே இல்லை. ஆனால், ஸர்ப்பத்தைக் கண்டதிலிருந்து அவனுக்குக் கோமதியின் மீது ஒரு தனி மதிப்பு ஏற்பட்டது. அது வாயில்லா ஜீவனாக இருந்தும் தன் அறிவினால் தன் உணர்ச்சிகளைத் தெரிவிக்க முடிகிறது என்பதையும், அதன் அபூர்வமான பாஷையை அறிந்து கொள்ளும் சக்தி தன் தாயாருக்கு இருக்கிறது என்பதையும் அவன் சந்தேகமின்றித் தெரிந்து கொண்டான்.

கோமதியைப் பற்றி இதற்கு முன் தன் தாயார் கூறிய பல விஷயங்களை, அதன்மீது அவளுக்கு உள்ள குருட்டுப் பாசத்தினால் கூறப்பட்டவை என்று அவன் நினைத்தான். ஆனால் இப்போதோ அவன் தன்னுடைய அபிப்பிராயத்தை முற்றிலும் மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று!

*　　　*　　　*

கோமதி மைதானங்களிலும் வயல் வாய்க்கால் கரைகளிலும் உள்ள புல்லைத் தவிர பிறருக்குச் சொந்தமான பயிர்களை மேயாது என்பது சேனுவின் தாயாருக்குத் தெரியும்.

எனினும் சில வருஷங்களாக மழை பெய்யாததால் களங்களும் திடல்களும் வயல் வாய்க்கால் கரைகளும் புல் வாடையே இல்லாத கட்டாந் தரையைப் போல் காட்சி யளித்தன. எனவே, கோமதியின் பாடு திண்டாட்டமாகியது.

தினந்தோறும் மாலையில் 'அம்மா' என்று கத்தியவண்ணம் ஆர்வத்துடன் வீட்டுக்கு வரும் கோமதி, ஒரு நாள் மௌனமாக வந்து கொட்டிலில் படுத்துக் கொண்டது.

இதைக் கண்ட சேனுவின் தாயார் அதைக் கடிந்து கொண்டாள்.

''கோமதி! உன் திருட்டுத்தனம் எனக்குத் தெரிந்து விட்டது. இன்று யார் வயலில், யாருடைய கொல்லையில் திருட்டுத்தனமாக மேய்ந்தாய்!'' என்று கோபித்துக் கொண்டாள்.

சேனு வீட்டுக்கு வந்ததும், ''அப்பா! 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்று சொல்லுவார்கள் அல்லவா! அது கோமதி விஷயத்தில் உண்மையாகி விட்டது. அது இன்று யாருடைய கொல்லையிலோ திருட்டுத்தனமாக மேய்ந்து விட்டு வந்திருக்கிறது'' என்றாள் அவன் தாயார்.



''உனக்கு எப்படித் தெரிந்தது, அம்மா! யார் சொன்னார்கள்!'' என்றான் சேனு.

''எனக்கு வேறு யார் சொல்ல வேண்டும்! கோமதி என்னைக் கூப்பிடாமல் ஊமைக் கோட்டானைப்போல் மௌனமாகக் கொட்டிலில் வந்து படுத்துக் கொண்டு விட்டது. அதோ பார், அது முகத்தை அப்பால் திருப்பிக் கொள்வதை! அதற்கு என்னைப் பார்க்கக்கூட வெட்கமாக இருக்கிறது!'' என்றாள்.

சேனுவின் தாயார் இவ்விதம் கூறிய சிறிது நேரத்துக் கெல்லாம் ஒருவர் அவர்களுடைய வீட்டுக்கு வந்தார். ''உங்கள் மாடு இன்று எங்கள் கொல்லைக்குள் புகுந்து பயிர்ச் செடிகளையெல்லாம் தின்று விட்டது. இனி இந்த மாட்டை இப்படி விடாதீர்கள்'' என்று கோபத்துடன் கூறிச் சென்றார்.

தன் தாயார் சொன்னது உண்மையாகி விட்டதைக் கண்டு சேனு ஆச்சரியம் அடைந்தான்.

மறுநாள் சேனுவின் தாயார் கோமதியை மேய்வதற்காக அவிழ்த்து விட்ட போது, வழக்கத்துக்கு விரோதமாக அது போகாமல் தயங்கி நின்றது.

நீ இப்படித் தயங்கினால் என்ன செய்வது! உனக்கு வேண்டிய தீனி போடுவதற்கு நாம் பெரிய பணக்காரர்களா! மேய்வதற்குப் போ. ஆனால் யாருடைய கொல்லையிலும் போய் மேயக் கூடாது'' என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டாள் சேனுவின் தாயார்!

எப்போதும் மேய்வதற்கு உற்சாகமாகச் செல்லும் கோமதி அன்று வேண்டா வெறுப்புடன் செல்வது அவளுக்கு நன்கு தெரிந்தது.

அன்று மாலையும் அது ஒருவருக்கும் தெரியாமல் கொட்டிலுக்குள் வந்து புகுந்து கொண்டது.

''கோமதி! நீ ஏன் இப்படி கெட்டுப் போய் விட்டாய்! தினந்தோறும் பிறருடைய கொல்லையில் போய் மேய்ந்தால், நீ வீட்டிலேயே பட்டினியாக இருக்க வேண்டியதுதான். உன்னை வீட்டிலேயே வைத்துக் கொண்டு தீனி போட முடியுமா!'' என்று மறுபடியும் கடிந்து கொண்டாள் சேனுவின் தாயார்.

மிகவும் சாதுவாகவும் யோக்கியமாகவும் இருந்த கோமதியின் போக்கில் விபரீதமான மாறுதல் ஏற்பட்டுவிட்டதைக் குறித்துச் சேனுவின் தாயார் துடிதுடித்தாள். ஏதோ தன் சொந்தப்பிள்ளை அல்லது பெண் கெட்ட வழியில் திரும்பிவிட்டது போல் அவளுக்குத் தோன்றியது!

கோமதியின் அட்டகாசங்களைக் குறித்து ஊரார் சேனுவிடம் அடிக்கடி புகார் கூறத் தொடங்கினர்.

சேனுவின் தாயாருடைய பராமரிப்பினால் யானை போல் கொழுத்திருந்த கோமதி மீது பலர் ஏற்கெனவே பொறாமை கொண்டிருந்தனர். கோமதி திருட்டுத் தனமாக மேய ஆரம்பித்ததைக் காரணமாக வைத்துக் கொண்டு அவர்கள் தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள முற்பட்டார்கள். அதாவது கோமதியை அந்த ஊரிலிருந்தே விரட்டிவிட வேண்டும். என்பது அவர்களுடைய உத்தேசம்.

இடைவிடாமல் அவர்கள் கூறிய புகார்கள் சேனுவின் மனத்தைக் கரைத்துவிட்டன. எனவே, அவன் கோமதியை விற்றுவிடுவது என்று தீர்மானித்தான். அதை விற்க வேண்டாம் என்று சேனுவின் தாயார் எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள்.

''இந்த யானையைக் கட்டித் தீனி போட நம்மால் முடியுமா, அம்மா! இதை வீட்டிலேயே கட்டிப்போடும் பட்சத்தில் இது சில மாதங்களில் துரும்பாக இளைத்து விடும். ஊராரில் சிலர் இதன்மீது மிகுந்த ஆத்திரம் கொண்டிருக்கிறார்கள். யாராவது ஒருவன் இதை ஒருநாள் அடித்துக் கொன்றாலும் கொன்று விடுவான். பிறகு முதலுக்கே மோசம் வந்துவிடும். ஆகையால் இதை நல்ல லாபத்துக்கு இப்போதே விற்று விடுவதுதான் சிறந்தது'' என்று கூறிச் சேனு தன் தாயாரைச் சமாதானப் படுத்த முயன்றான்.

அவளுக்குத் தன் பிள்ளை கூறுவதைத் தட்டிப் பேசும் தைரியம் ஏற்படவில்லை.

கடைசியில் சேனு கோமதியை நல்ல விலைக்கு விற்று விட்டான். எனினும் கோமதி வீட்டை விட்டுப் போனதிலிருந்து சேனுவின் தாயார் சரியாகச் சாப்பிடவில்லை, உறங்கவுமில்லை. எப்போதும் அந்தப் பசுவையே நினைத்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

தன் தாயாரின் நிலையைக் கண்ட சேனுவும் தன் வீட்டில் பிறந்து வளர்ந்த அருமைப் பசுவை ஏன் விற்றோம் என்று பச்சாத்தாபப் பட்டான்.

சேனுவின் தாயார் அடிக்கடி 'கோமதி' 'கோமதி' என்று புலம்பிக்கொண்டே இருந்தாள். 'கோமதி அவர்கள் வீட்டில் எப்படி இருக்கிறதோ! அதற்கு அவர்கள் சரிவரத் தீனி போடுவார்களோ, மாட்டார்களோ! அதை அருமையாக வளர்ப்பார்களோ அல்லது அடித்துக் கஷ்டப்படுத்துவார்களோ' என்றெல்லாம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள்.

மிகவும் அருமையாகவும் செல்வமாகவும் வளர்த்த தன் பெண்ணை முதல் தடவையாகப் புக்ககத்துக்கு அனுப்பிய தாயின் மனம் என்ன பாடு படும்! அதைப் போலவே சேனுவின் தாயாருடைய மனமும் அலை பாய்ந்தது.

கொல்லைப்புறத்திலோ, கொட்டிலிலோ அற்ப சத்தம் ஏற்பட்டாலும் 'கோமதி' 'கோமதி' என்று கூப்பிட்டுக் கொண்டே அவள் மிகுந்த ஆர்வத்துடன் ஓடிப் போய்ப் பார்ப்பாள். அங்கு கோமதியைக் காணாமல் மிகுந்த ஏமாற்றம் அடைவாள். உடனே அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகி வழியும்.

தன் தாயின் பாசத்தையும் பரிதாப நிலையையும் கண்டு சேனுவின் மனம் உருகியது. என்ன செய்வது என்றே அவனுக்குத் தோன்றவில்லை.

கோமதி வீட்டை விட்டுப் போய் ஒரு வாரம் ஆகிவிட்டது. சேனுவின் தாயாருடைய பரிதவிப்பும் புலம்பலும் சிறிதும் ஓயவில்லை.

ஒரு நாள் இரவு பத்து மணி இருக்கும். அவள் 'கோமதி!' 'கோமதி!' என்று அலறிக்கொண்டே வாசற் பக்கம் சென்று, தெரு வழியாக ஓடினாள்.



அவனுடைய மகன் சேனுவும் தன் தாயாருக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டு விட்டதென்று கலக்கம் அடைந்து அவளைப் பின் தொடர்ந்து ஓடினான். சேனுவின் தாயாருடைய கூக்குரலைக் கேட்டுப் பலர் பதறிப் போய்த் தங்கள் வீட்டுக்கு வெளியே ஓடி வந்து பார்த்தனர். சேனுவைத் தொடர்ந்து அவர்களும் சென்றனர்.

என்ன ஆச்சரியம்! சிறிது தூரத்தில் கோமதி 'அம்மா' 'அம்மா' என்று கத்திய வண்ணம் நாலுகால் பாய்ச்சலில் வந்து கொண்டிருந்தது.

அருகில் வந்ததும் சேனுவின் தாயார் அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். குழந்தையைப் போல் விம்மி விம்மி அழுதாள்.

கோமதியின் கண்களிலிருந்தும் நீர் வழிவதைக் கண்ட சிலர் ஆச்சரியப்பட்டனர்.

ஆனால் மற்றவர்கள் சேனுவைப் பார்த்து, "நீ முன்பே இந்த மாட்டை விற்றிருக்க வேண்டும். உன் அம்மா ஏன் இந்த மாட்டைக் கட்டிக் கொண்டு இப்படி அழுகிறாள்! இவளுக்கு நிச்சயமாகப் பைத்தியம்தான் பிடித்து விட்டது. இந்தப் பைத்தியத்துக்கு 'இனி மருந்தே இல்லை" என்று பலவாறாகக் கடிந்து பேசினர்.

"என் அம்மாவுக்குப் பைத்தியம் இல்லை. உங்களுக்கும் எனக்கும்தான் பைத்தியம்" என்றான் சேனு. அவன் கண்களில் நீர் ததும்பியது.

"அம்மா! நான் கோமதியை விற்றது பெரிய தவறு, மகா பாவம். இனிமேல் என்ன நேர்ந்தாலும் கோமதி நம் வீட்டிலேயே இருக்கட்டும். அதை விற்ற பணத்தை நான் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று சொல்லிக் கோமதியை அன்புடன் முதுகில் தட்டிக் கொடுத்தான்.

கல் நெஞ்சம் படைத்த சிலரைத் தவிர அங்கு கூடியிருந்த மற்றவர்கள் யாவரும் இந்தக் காட்சியைக் கண்டு உணர்ச்சி வசப்பட்டனர்.

# பெரியவரின் பதில்!

அன்று ரயிலில் அதிகக் கூட்டமில்லை. மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பெஞ்சுக்கு ஒன்றிரண்டு பேராகத்தான் உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

அதிக தூரம் பிரயாணம் செய்யும் மூன்றாம் வகுப்புப் பெட்டி ஒன்றில் ஒரு பெரியவர் ஜன்னலில் சாய்ந்து கொண்டு பெஞ்சியில் காலை நீட்டிப் படுத்திருந்தார். அசதியினால் அவர் கண்கள் இலேசாக மூடியிருந்தன.

திடீரென்று யாரோ "ஸார்!" என்று அழைத்தது கேட்டுத் திடுக்கிட்டு விழித்தெழுந்தார் பெரியவர். "என்ன வேண்டும்?" என்று கடுகடுப்புடன் கேட்டுக் கொண்டே எழுந்தார் அவர்.

"அடடா! மன்னிக்க வேண்டும். உங்களை நல்ல தூக்கத்தில் எழுப்பி விட்டேன் போலிருக்கிறதே!" என்றான் அவரை எழுப்பிய அந்த வாலிபன்.

"ஆமாம்! நல்ல தூக்கத்தில்தான் எழுப்பி விட்டீர்கள்! இப்பொழுது உங்களுக்கு என்ன வேண்டும்? சீக்கிரம் சொல்லுங்கள்" என்றார் பெரியவர் எரிச்சலோடு.

"ஒன்றுமில்லை, ஸார்! இப்பொழுது மணி என்ன என்று கேட்கத்தான் உங்களை எழுப்பினேன்..." என்று அந்த வாலிபன் இழுத்தான்.

"வேறு யாரையாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று கூறி விட்டு மறுபடியும் சாய்ந்தார்.

"ஸார்! இந்தப் பெட்டியில் வேறு யாரிடமும் கடிகாரம் இல்லை. தயவு செய்து..."

"அதெல்லாம் முடியாது. நீங்கள் வேண்டுமானால் அடுத்த ஸ்டேஷனில் இறங்கிப் போய்ப் பார்த்து மணியைத் தெரிந்து கொள்ளுங்கள். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்" என்றார்.

"என்ன ஸார் இவ்வளவு பெரிய மனிதர், மணி கேட்டால் சொல்ல மாட்டேன் என்கிறீர்களே? இது நியாயமா?" என்றான் அந்த வாலிபன்.

பெரியவர் கோபத்துடன் எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

"சரி, ஸார்! இதைக் கேளுங்கள். உங்களிடம் நான் மரியாதையாக மணியைச் சொன்னால் பேச்சு வளரும்..."

"அதனால் உங்களுக்கு என்ன தீங்கு நேர்ந்துவிடப் போகிறது?" என்று சந்தேகத்துடன் கேட்டான் அந்த வாலிபன்.

"என்ன தீங்கா? பேச்சு வளர்ந்தால் கடைசியில் உங்களை வீட்டுக்கு விருந்துக்கு அழைக்க வேண்டி வரும். நீங்கள் என்னுடைய வீட்டுக்கு விருந்துக்கு வந்தால் உங்களுக்கு என் பெண்ணின் மீது காதல் பிறக்கும். பிறகு, 'உங்கள் பெண்ணை எனக்குக் கல்யாணம் செய்து கொடுங்கள்' என்று நீங்கள் கேட்பீர்கள். ஒரு ரிஸ்ட் வாட்சுக்குக் கூடத் துப்பில்லாதவனுக்குப் பெண்ணைக் கொடுக்க நான் சிறிதும் விரும்பவில்லை" என்று ஒரு பெரிய பிரசங்கமாரி பொழிந்தார் அப் பெரியவர்.



வாலிபன் அவருடைய தாக்குதலைக் கண்டு மிகவும் வெட்கித் தலை குனிந்தான். அப்பெரியவரிடம் மணி கேட்கப் போய், 'வேண்டாத சனியனை விலைக்கு வாங்கின கதை'யாகி விட்டதையறிந்து அவ்வாலிபன் அதற்கு மேலும் அந்தப் பெட்டியில் உட்கார்ந்திருக்க மனமின்றி வேறு இடத்துக்குச் சென்று விட்டான். பெரியவர் மறுபடியும் பெஞ்சியில் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டார்.

ரயில் அதையெல்லாம் சிறிதும் இலட்சியம் செய்யாது கடகடவென்று தண்டவாளத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

—பி. என்.

# என்றுமே மதிப்பில் குறையாத முதலீடுகள்.

## நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகள்.

## பத்து வருஷ ட்ரெஷரி ஸேவிங்ஸ் டிபாஸிட்டுகள்.

கிடைக்கும் வட்டிக்கு

# வரி கிடையாது

இந்த முதலீடுகள் சம்பந்தமான இதர விபரங்கள், அல்லது விதிகளுக்கு, நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர், கார்ட்டன் காஸில், ஸிம்லா-3 என்கிற விலாசத்துக்கு எழுதவும்.

AC 380

எல்லோருக்கும் ஒரு விருந்து...

# ஸேகோ பட்டீஸ்





## சுலபமாக எளிதில் தயாரிக்கும் முறை:

1 கப் வெந்து மசித்த உருளைக் கிழங்கு, 1 கப் ஊறவைத்து நன்கு வடித்த ஜவ்வரிசி, ½ கப் வறுத்துப் பொடித்த நிலக்கடலைப் பருப்பு இவைகளை ஒன்று சேர்த்து மிருதுவான மாவு செய்துகொள்ளவும். கொத்துமல்லி இலை, ருசிக்குத்தகுந்த உப்பு, எலுமிச்சைச் சாறு, விரும்பினால் பச்சை மிளகாய் இவைகளை சேர்த்துக்கொள்ளவும். சிறிய, இலேசான, வட்டமான தட்டைகளாகச்செய்து குழிவுள்ள வாணலியில் சூடான டால்டாவில் நன்றாக வெந்து, முறுகலாகும்வரை பொரிக்கவும். சூடாக பரிமாறவும்.

**இதை தவறவிடாதீர்கள்!**



புதிய டால்டா சமையல் புத்தகம் — ஆங்கிலத்தில் — படங்கள் கொண்டது — ஆர்ட் காகிதம் — 80 பக்கங்கள் — 300 தின்பண்டங்கள் செய்யும் முறைகள் — ஆரோக்கியம், சுகாதாரம், சமையலறை இவைகளைப் பற்றிய குறிப்புகள் — விலை ரூபாய் 1/– தான் — தபால் செலவு 8 அணா தனி.

**தி டால்டா அட்வைசரி ஸர்விஸ்**
தபால்பெட்டி நெ. 353, பம்பாய் 1

# டால்டாவில் தயாரித்தது

நீங்கள் சாப்பிடும் பண்டம், தித்திப்பானாலும், பொரித்ததானாலும், வறுத்ததானாலும் அதை டால்டாவில் தயாரித்தால் மிகவும் சிறந்ததாயிருக்கும். சுத்தமானதும், ஊட்டத்தை அளிப்பதுமான டால்டா உங்களுக்கு புதிதாகவும் துப்புரவாகவும் சீல்செய்த டின்களில் கிடைக்கிறது.



**சமநிலை உணவில் உங்களுக்குத் தேவையான கொழுப்பை அளிக்கிறது**

HVM. 173-50 TM

# அலமுவின் அதிர்ஷ்டம்

ஸ்ரீ சுதன்

கிழவர் கிருஷ்ணமூர்த்தி சர்மா தன் கையிலிருந்த கடிதத்தை வாசித்துப் பார்த்துவிட்டு 'அலமுவுக்கு அதிர்ஷ்டமில்லை' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

இதற்குள் உள்ளேயிருந்து அவருடைய பெண் ஜானகியும் கலியாணத்துக்கு நிற்கும் ஜானகியின் ஏக புதல்வி அலமுவும் அவர் இருக்கும் இடத்துக்கு வந்தார்கள். கிருஷ்ணமூர்த்தி சர்மா அவர் கையிலிருந்த கடிதத்தை ஜானகியிடம் கொடுத்து விட்டு, "திருச்சியில் என் கூடப் படித்த வெசங்கரனின் பேரனைப் போன வாரம் பார்த்துவிட்டு வந்தேன் என்று சொன்னேனே, அவன்தான் இந்தக் கடிதத்தை அனுப்பியிருக்கிறான். இந்த வருஷம் அவன் கலியாணம் செய்து கொள்ள வேண்டாமென்று முடிவு செய்து விட்டானாம். அடுத்த வருஷம் வரை அலமுவுக்குக் கலியாணமாகாமலிருந்தால் நிச்சயமாக நான் விரும்பிய படியே செய்யத் தயாராயிருக்கிறானாம். கடைசிக் கந்தாயமாக வைத்திருந்த வரனும் கை நழுவி விட்டது. கலியாண மாசமான ஆனி முடிவடைய அதிக நாளில்லை. இனிமேல் என்ன செய்வது என்று எனக்கே புரியவில்லை" என்று சொல்லும்போதே அவர் குரலில் அவருடைய மனத்தை அலட்டிக் கொண்டிருந்த வேதனை பிரதிபலித்தது. அலமுவுக்குத் தகுந்த வரனை வேறு எங்கே போய்த் தேடுவது என்று தீவிர சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்தார்.

* * *

பதினைந்து வருஷங்களுக்கு முன் மலேயாவில் உத்தியோகமாக இருந்த பரமேஸ்வரனுக்கு அவருடைய ஒரே பெண்ணான ஜானகியை மணம் செய்து வைத்தார் கிருஷ்ணமூர்த்தி சர்மா. ஜானகியைக் கலியாணம் செய்து கொள்ளுவதற்குப் பரமேஸ்வரன் முதலில் இசையவில்லை. அவன் முதல் மனைவி வாசந்தியை இழந்து இரண்டு மூன்று வருஷங்கள்தான் ஆகியிருந்தன. வாசந்தியை அவன் மனைவியாக அடைந்தபோது டில்லியில் நல்ல உத்தியோகத்திலிருந்தான். அவளை இழந்த துக்கத்தில் உத்தியோகத்தை ராஜிநாமா செய்துவிட்டுப் பிறந்த ஊருக்கே வந்துவிட்டான். அங்கேயும் அவனுக்கு மன நிம்மதி ஏற்படாமல் மலேயாவுக்குப் பிரயாணமானான். அங்கே அவன் வேலையில் அமர்ந்தபோது கிருஷ்ணமூர்த்தி சர்மாவின் பந்துவான சிதம்பரத்தினிடம் பரிச்சயம் ஏற்பட்டது. ஒரு சமயம் சிதம்பரத்தையும் அவன் குடும்பத்தையும் பார்த்து விட்டுப் போவதற்காகக் கிருஷ்ணமூர்த்தி சர்மா, சிறுவயதிலேயே தாயை இழந்த அவருடைய பெண் ஜானகியுடன் மலேயாவுக்கு வந்திருந்தார். சிதம்பரத்தின் வீட்டிலேயே தங்கியிருந்த பரமேஸ்வரனுக்குக் கிருஷ்ணமூர்த்தி சர்மாவுடன் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவருடைய குணமும், அவர் வாழ்க்கையில் அடைந்த கஷ்டங்களைக் கேள்விப்பட்டிருந்த காரணத்தால் அவரிடம் பரமேஸ்வரனுக்கு ஏற்பட்ட அனுதாபமும் ஒன்று சேரவே, சிதம்பரம் பரமேஸ்வரனிடம் ஜானகியை இரண்டாந்தாரமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியபோது பரமேஸ்வரன் வெகு நாள் யோசனை செய்து பிறகு அதற்குச் சம்மதம் தெரிவித்தான். அவளை இல்லாளாகத் திருமணம் செய்து கொண்டான். கிருஷ்ணமூர்த்தி சர்மா இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். இரண்டு வருஷங்கள் கழித்துப் பரமேஸ்வரனுக்கும் ஜானகிக்கும் அலமு பிறந்தாள். அலமுவுக்கு கிட்டதட்ட ஒன்பது வயதாகி இருந்தபோதுதான் இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பித்தது. சிதம்பரமும் பரமேஸ்வரனும் அவர்கள் குடும்பங்களைத் தக்க துணையுடன் இந்தியாவுக்கு அனுப்பி விட்டு, அடுத்த கப்பலில் அவர்கள் புறப்படுவதாகத் தீர்மானித்திருந்தார்கள். சிதம்பரத்தின் மனைவி குழந்தைகளும் ஜானகியும் அவள் பெண் அலமுவும் தாய்நாடு வந்து சேர்ந்து அவர்கள் பிறந்த ஊரை அடைந்ததுமே மலேயாவில் யுத்தம் தீவிரமாகி விட்டதென்றும் அங்கிருந்து ஒருவரும் வெளியேற முடியாதென்றும் அறிந்து கிருஷ்ணமூர்த்தி சர்மா கவலைக்குள்ளானார். ஆனால் அவருடைய துரதிர்ஷ்டம் அத்துடன் நிற்கவில்லை. இரண்டு வருஷங்கள் கழித்துச் சிங்கப்பூரிலிருந்து தப்பிவந்த ஒருவர், சிங்கப்பூரில் நடந்த ஜப்பானிய விமானத் தாக்குதலுக்குச் சிதம்பரமும் பரமேஸ்வரனும் பலியானார்கள் என்று தெரிவிக்கவே கிருஷ்ணமூர்த்தி சர்மா, தள்ளாத வயதில் ஏற்பட்ட இந்த அதிர்ச்சியால் உள்ளமும் உடலும் தளர்ந்து போய் வாழ்க்கையில் பற்றின்றி வாழ்ந்து வந்தார். ஆனால் அதே சமயத்தில் பொறுப்பு மட்டும் அவரை விட்டு நீங்கவில்லை.


ஜானகிக்கு அவனுடைய புக்ககத்தில் தகுந்த ஆதரவு இல்லாததால் வேறு வழியின்றி அவளையும் அவள் பெண் அலமுவையும் தன்னிடமே வைத்துப் பராமரிக்கும் கடமையை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது அவருக்கு. அலமுவுக்குக் கலியாண வயது வந்ததும் அவளுக்கு வரன் தேடுவதில் முனைந்தார். அழகு, படிப்பு, குணம், வீட்டு வேலையிலும் அவளுக்கு இருந்த பயிற்சி, இவை காரணமாக அலமுவுக்கு அதிக சிரமமில்லாமல் ஒரு வரன் குதிர்ந்து விடும் என்று எண்ணியிருந்தார் கிருஷ்ணமூர்த்தி சர்மா. நாளடைவில்தான் அவருடைய நம்பிக்கை எவ்வளவு ஆதாரமற்றது என்ற உண்மையை மெள்ள மெள்ள உணர ஆரம்பித்தார். இதன் விளைவாக நாளுக்கு நாள் அவர் மனக்கிலேசம் அதிகரிக்கத் தொடங்கியது.

## 2

சிந்தனை வசப்பட்டிருந்த கிருஷ்ணமூர்த்தி சர்மா "அப்பா!" என்ற குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்தார். ஜானகிதான் நின்று கொண்டிருந்தாள். "எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. என்னுடைய புக்ககத்து மாமாவின் பெண் பார்வதிக்கு வயது வந்த ஒரு பையன் இருக்கிறதாக எனக்கு ஞாபகம். அந்த நாளில் மலேயாவிலிருந்து இங்கே என் அகத்துக்காரர் கூட வரும்போது ஒரு தடவை வழியில் மதுரையில் தங்கினோம். அப்போது அலமுவுக்கு இரண்டு வயதிருக்கலாம். பார்வதிக்கு ஏழெட்டு வயதில் பலராமன் என்று ஒரு பையன் இருந்ததாக நினைவுக்கு வருகிறது. அவனுக்குக் கல்யாணமாகி விட்

டதா இல்லையா என்று தெரியவில்லை. நீங்கள் சௌகர்யப்பட்டால் போய்ப் பார்த்து விட்டு வாருங்கள். பார்வதியின் புருஷன் பெயர் பத்மனாபன். இந்த ஊர் சிவன்கோவில் தெருவில் இருக்கும் சிவசாமியின் தம்பி வேலை செய்யும் ஆபீசில்தான் உத்தியோகம் பார்க்கிறார். சிவசாமியிடம் கேட்டால் பத்மனாபனின் விலாசம் தெரியலாம்'' என்று சொல்லி முடித்தாள்.

கவலை இருள் கவிந்திருந்த கிருஷ்ணமூர்த்தி சர்மாவின் உள்ளத்தில் ஜானகி கொடுத்த இந்தத் தகவல் நம்பிக்கை ஒளியை வீசச் செய்தது. அப்பொழுதே சிவசாமியைப் பார்த்து வரப் புறப்பட்டார். அன்றிரவே கிளம்பி அடுத்த நாள் மாலை மதுரையிலிருந்த பத்மனாபன் வீட்டை அடைந்தார். நல்ல வேளையாகப் பம்பாயில் வேலையிலிருந்த பலராமன் ஒரு மாத லீவில் அவனுடைய பெற்றோர்கள் வீட்டுக்கு வந்திருந்தான். பத்மனாபனிடமும் பார்வதியிடமும் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு, பேச்சுக்கு நடுவே பலராமன் எம். ஏ. பட்டம் பெற்று இருநூறு ரூபாய் சம்பளத்தில் பம்பாயில் உத்தியோகத்திலிருக்கிறான் என்ற தகவலைத் தெரிந்து கொண்டபின் தான் வந்த காரியத்தை வெளியிட்டார் சர்மா. அலமுவின் யோக்யதாம்சங்களை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்ட பின் அலமுவின் ஜாதகத்தை வாங்கிக் கொண்டு பதிலுக்குப் பலராமனின் ஜாதகத்தைக் கொடுத்தார் பத்மனாபன். "உங்கள் பேத்தி அலமு என் அகத்துக்காரியின் அத்தான் பெண் என்ற காரணத்தால் அவளைப் பலராமனுக்குக் கலியாணம் செய்து வைப்பதில் எனக்கு இஷ்டம் தான். ஆனாலும் உலக சம்பிரதாயத்தை ஒட்டி நீங்கள் எங்கள் அந்தஸ்துக்குத் தகுந்த வரதட்சணையும் சீர் செனத்திகளும் செய்ய முடியுமா என்று தெரிவித்தால் அதற்குமேல் ஜாதகப் பொருத்தத்தைப் பார்த்து, அலமுவையும் நேரில் போய்ப் பார்த்து விட்டு மேலே கவனிக்க வேண்டிய காரியங்களைக் கவனிக்க முடியும்'' என்று கூறினார் பத்மனாபன். அவர் குறிப்பிட்ட தொகையையும் சீர்வகைகளின் எண்ணிக்கையையும் கேட்டதும் அப்படியே அசந்து போய் விட்டார் சர்மா. "ஊருக்குப் போய்க் கடிதம் போடுகிறேன்'' என்று விடைபெற்றுக் கொண்டு வெளியேறினார். அவர் சென்றபின் அன்றிரவு ரயிலில் தன் ஆபீஸ் வேலை நிமித்தமாக பத்மனாபனும் மதுரையை விட்டு வெளியூருக்குக் கிளம்பினார்.



கிருஷ்ணமூர்த்தி சர்மா, அன்றையத் தபாலிலேயே, மதுரையில் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைப் பற்றி ஜானகிக்கு எழுதிவிட்டு, அதே கடிதத்தில் அங்கிருந்து அவர் தஞ்சாவூருக்கும், போய்த் தகுந்த வரன்கள் அகப்படுமா என்று பார்த்துவிட்டுக் கூடிய சீக்கிரம் ஊருக்குத் திரும்புவதாக அறிவித்திருந்தார். இரவு ரயிலிலேயே தஞ்சாவூருக்குப் பிரயாணமானார் சர்மா.

## 3

கிருஷ்ணமூர்த்தி சர்மா, அவருடைய பேத்தி அலமுவைப் பலராமனுக்கு வதுவாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பத்மனாபனிடம் கேட்டுக் கொண்ட போது, அவள் கணவர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று ஆவலோடு கவனித்தாள் பார்வதி. உறவு என்ற காரணத்துக்காகவாவது சர்மாவிடம் சுமுகமாகவும், சற்று பரிவுடனும் பத்மனாபன் பதிலளிப்பார் என்று எதிர்பார்த்திருந்தாள். அலமுவை நாட்டுப் பெண்ணாக அடைவதற்குப் பார்வதி ஆசைப்பட்டதற்கு அவள் சம்பந்தப்பட்ட வரையில் காரணம் இருக்கத்தான் செய்தது. ஆனாலும் பத்மனாபன், நிர்தாட்சண்யமாக, அதற்கு முன் பலராமனுக்குப் பெண் கொடுக்க வந்திருந்த பெண்களின் தகப்பனார்களிடம் பேசிய முறையிலேயே சர்மாவிடம் கண்டிப்பாகப் பேசியது, அவளுடைய மனதைச் சஞ்சலமடைய வைத்தது. இருந்தாலும் பத்மனாபனின் முரட்டுச் சுபாவம் தெரிந்து, அப்போதைக்கு இடைமறித்துப் பேச முடியாமல் தவித்தது அவள் உள்ளம். பாவம் அவள் வேறு என்ன செய்வாள்.

அன்றிரவு சாப்பாடு முடிந்ததும் வழக்கம் போல் கூடத்தில் படுக்கச் சென்றாள் பார்வதி. நடுநிசியிருக்கும். பார்வதி அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள். திடீரென்று அவள் கழுத்தில் அணிந்து கொண்டிருந்த மூன்று வடத் தங்கச் சங்கிலியை யாரோ சேர்த்துப் பிடித்து முறுக்குவது போலிருந்தது. வரவர மூச்சு விடுவது கூடக் கஷ்டமாகிக் கொண்டு வந்தது போல உணர்ந்தாள். தன்னையும் மீறிக் 'கிரீச்' சென்று அலறி விட்டாள் பார்வதி. கண்களைத் திறந்து பார்த்தாள். எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. இதற்குள் வராந்தாவில் படுத்துக் கொண்டிருந்த பலராமன் ஓடி வந்து

பார்வதி போட்ட சத்தத்தைக் கேட்டு தூக்கம் கலைந்து கூடத்துக்கு விரைந்து விளக்கைப் போட்டான். பார்வதியின் உடம்பு பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. பலராமன் பார்வதியின் அருகில் போய் அமர்ந்து "அம்மா! உங்களுக்கு என்ன வந்தது! ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்!" என்று பரிவுடன் கேட்டான்.

அப்பொழுதுதான் தான் கண்ட காட்சி கனவு என்று அறிந்து கொண்டாள். கலங்கி யிருந்த அவள் சித்தம் தெளிந்ததும் "பலராமா! ஏதோ சொப்பனம்" என்றாள். மறுபடியும் "பலராமா! சாயங்காலம் ஒரு கிழவர் வந்திருந்தாரே, அவருடைய பேத்தி அலமுவை நீ கட்டாயமாகக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும்" என்றாள் ஆவேசம் வந்தவள் போல.

"அதற்கென்ன, செய்து கொண்டால் போகிறது. அதைப் பற்றி நீங்கள் எதற்காக இப்போது கவலைப்பட வேண்டும். அப்பா சொன்ன மாதிரி அவர்கள் இசைந்து வந்தால் பார்த்துக் கொள்ளலாம்" என்றான் பலராமன்.

"உன் அப்பா விரும்புகிறமாதிரி அவர்கள் வரதட்சணையும் சீர் செனத்திகளும் கொடுத்தாலும் இல்லாவிட்டாலும் அலமுவை நாட்டுப் பெண்ணாக ஏற்றுக் கொள்வதற்கு எனக்குக் கடமை இருக்கிறது. அதை நிறைவேற்றி வைக்க உன்னைத் தான் நம்பி யிருக்கிறேன். இன்று நாம் இருக்கும் நல்ல ஸ்திதிக்கு அலமுவின் அப்பாவும், என் அத்தானுமான பரமேஸ்வரன்தான் காரணம்" என்று உணர்ச்சி பொங்கக் கூறினாள்.

"உண்மையாகவா!" என்றான் பலராமன்.



பார்வதி மேலும் தொடர்ந்தாள், "ஆமாம் இருபத்து ஐந்து வருஷங்களுக்கு முன்பு நான் உன்னை வயிற்றில் சுமந்து கொண்டிருந்தபோது தான் உன்னுடைய அப்பா உன் தாத்தாவுக்குத் தெரியாமல் யாருடனோ கூட்டு வியாபாரத்தில் இறங்கி ஆயிரம் ரூபாய் வரை கடன் வாங்கி அதை வியாபாரத்தில் போட்டு கஷ்டமடைந்து விட்டார். விஷயம் தெரிந்ததும் உன் தாத்தா உன் அப்பாவைக் கண்டித்துக் கடன்காரர்களுக்குச் சேர வேண்டிய பணத்தை என் பிறந்தகத்திலிருந்து வாங்கிக் கடனை அடைக்கும்படி சொல்லிவிட்டார். இதற்கிடையில் கடன்காரர்கள் உன் அப்பாவின் மேல் வழக்குத் தொடருவதாகப் பயமுறுத்த ஆரம்பித்து விட்டார்கள். உன் அப்பா என்னை என் பிறந்தகத்துக்கு அனுப்பிப் பணத்துடன் திரும்பி வந்தால் தான் திரும்பலாம் என்று கூறி விட்டார். நான் வந்திருந்த காரணத்தைத் தெரிவித்ததும் ஏற்கெனவே கஷ்ட நிலைமையிலிருந்த என் அப்பா, கதிகலங்கிப் போய்விட்டார். அவ்வளவு பணத்தை உடனே எப்படிச் சேகரிப்பது என்று தெரியாமல் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

"இந்தச் சமயத்தில் தான் ஒருநாள் டில்லியிலிருந்த என்னுடைய அத்தான் பரமேஸ்வரன் ஊருக்கு வந்திருந்தான். அப்போது அவனுடைய மூத்தாள் வாசந்தி இறந்து போய் நாலைந்து மாசம் ஆகி யிருந்தது. அத்தானிடம் துக்கம் விசாரிக்கப் போயிருந்தபோது அப்பா என்னுடைய கஷ்டத்தையும் எடுத்துச் சொல்லி யிருக்கிறார் போலிருக்கிறது. ஒரு மாதம் கழித்து அத்தான் ஏதோ வெளியூருக்குப் போகும்போது என் அப்பாவிடம் வந்து ஒரு சிறிய பெட்டியைக் கொடுத்து 'இதிலிருக்கும் சாமான்களை வாசந்திக்காக வாங்கினேன். இவைகளை வாசந்தி உபயோகிக்கக் கொடுத்து வைக்கவில்லை. இவைகள் பார்வதிக்கு இப்போதுள்ள கஷ்டத்தை நிவர்த்திக்க உபயோகிக்க முடியுமானால் அதுவே எனக்குத் திருப்தி. இவைகளை நான் கொடுத்ததாக வேறு யாரிடமும் சொல்ல வேண்டாம். மறுபடியும் இவைகளை எனக்குத் திருப்பிக் கொடுக்கும்படி நான் உங்களிடம் வரமாட்டேன்' என்று கூறிவிட்டுப் போனார். பெட்டியைத் திறந்து பார்த்ததும் எங்கள் கண்களையே நம்ப முடியவில்லை. அதில் சுமார் மூவாயிரம் ரூபாய் பெறுமான நகைகள் இருந்தன. அவைகளில் ஒரு பகுதியைக் கடையில் வைத்து ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி மறுபடியும் என் அப்பா என்னைப் புக்ககத்துக்குக் கொண்டு வந்து விட்டார். சில நாட்கள் கழித்து உங்கப்பா ஒரு ஸ்திரமான வேலையில் அமர்ந்தார். படிப்படியாக வேலையும் உயர்ந்து கொண்டு வந்தது. இதற்குள் என் அப்பாவின் நிலைமையும் சீர்திருந்தியது. அடகு வைத்திருந்த நகைகளை மீட்டு, எல்லா நகைகளையுமே எனக்கு அனுப்பி விட்டார். நான் இப்பொழுது கழுத்தில் போட்டுக் கொண்டிருக்கும் மூன்று வடச் சங்கிலி கூட அத்தான் கொடுத்த நகைகளில் ஒன்று.

"அத்தானுடைய மாமனார் கிருஷ்ணமூர்த்தி சர்மா இன்று சாயங்காலம் வந்து தன்னை யாரென்று தெரிவித்துக் கொண்டதுமே, அலமுவை நாட்டுப் பெண்ணாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று என் மனத்துக்குள் நினைத்துக்

கொண்டேன். ஆனாலும் அதைப் பற்றி உன் அப்பாவிடம் சொல்ல எனக்குத் தைரியம் வரவில்லை. அதனால் என் மனச்சாட்சி என்னைக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தது. இதே நினைவாகப் படுத்துத் தூங்கிவிட்டேன். தூக்கத்தில் யாரோ வந்து என்னைப் பார்த்து நான் நன்றி கெட்டவள் என்று கூறியது போல் தோன்றியது. அந்தானுக்குச் சொந்தமான நகைகளை நான் இனிமேலும் அணிந்து கொள்ள அருகதையற்றவள் என்ற காரணத்தால் கழுத்திலிருந்த சங்கிலியைப் பலவந்தமாக மூறுக்கி இழுப்பது போல் சொப்பனம் கண்டேன். இதற்கெல்லாம் மனப் பிரமைதான் காரணம். இது எப்படி யிருந்தாலும் அலமுவை நீ கலியாணம் செய்து கொள்வதில் தான் எனக்குத் திருப்தி'' என்றாள் பார்வதி.

''அம்மா, நம்மை வாழ வைத்தவரின் குடும்பம் தாழ்ந்து போய்விட்டது என்ற காரணத்தினால் நாம் அவர்களைப் புறக்கணிக்கக் கூடாது. அலமுவை ஏற்றுக் கொள்வது தான் நாம் அவர்களுக்குச் செய்யும் நன்றி. இதையெல்லாம் அப்பாவிடம் தெரிவிப்பதற்கென்ன'' என்றான் பலராமன். அவன் உள்ளம் ஒருதரம் விம்பியது.

''பலராமா, உன் அப்பாவின் பிடிவாத குணம் உனக்குத் தெரியாதா என்ன! இதையெல்லாம் நான் சொன்னால்கூட அவர் நம்பமாட்டார். இந்த மாதிரி கனவு காணவிட்டால் இதைப் பற்றி உன்னிடம்கூட நான் சொல்லியிருக்க மாட்டேன்'' என்று பதிலுரைத்தாள் பார்வதி.

ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்தான் பலராமன். ''ஆமாம் நீங்கள் கூறுவதும் நியாயம்தான். ஆனால் நானும் நீங்கள் சொல்லுவதுபோல் பிடிவாத குணத்துக்கு அப்பாவைக் கொண்டிருக்கிறேன். அது ஒரு விதத்தில் இப்போது நல்லதாகப் போய் விட்டது. அப்பா வந்தவுடன் இந்த சம்பந்தத்துக்கு அவரைச் சம்மதிக்கச் செய்து விடுகிறேன்'' என்று சமாதானம் கூறினான். அவனுடைய வாக்குறுதி பார்வதிக்கு மன நிம்மதியை அளித்தது.



வந்தவர்:—அப்பப்பா! உங்கள் ஊரில் என்ன வெய்யில்! கொஞ்சம் இளைப் பாறலாம் என்றால் எங்கேயுமே கொஞ்சம்கூட நிழல் இல்லையே! என்னுடைய நிழலைத் தவிர வேறு நிழல் கிடையாது.

பாட்டி:—அதுவே போதுமே. சற்று இளைப்பாறிவிட்டு வரப்படாதா!

## 4

இரண்டு நாள் கழித்து பத்மனாபன் வெளியூரிலிருந்து மதுரைக்குத் திரும்பி வந்தார். அவர் வந்ததும் வராததுமாக பலராமன் அவரிடம் சென்று ''நாளைக்கே நான் பம்பாய்க்குத் திரும்பி விடலாமென்று நினைக்கிறேன்'' என்றான்.

''இன்னும் இருபது நாள் லீவு இருக்கிறது என்றாயே. அதற்குள் என்ன அவசரம்!'' என்றார்.

''இந்த ஊருக்கு வந்தது முதல் எனக்குப் பொழுது போகிறதில்லை. ஆனால் என்னால் உங்களுக்குப் பொழுது நன்றாகப் போகிறது. இது வரைக்கும் கிட்டத்தட்ட இருபது பேர்களிடம் என்னைக் காட்டிக் காட்டி, என்னை அவர்கள் வீட்டிலுள்ள பெண்ணுக்கு வரனாக ஏற்றுக் கொள்வதற்கு எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும். எத்தனை வகை சீர் செனத்திகள் செய்ய வேண்டுமென்றெல்லாம் தெரிவிப்பதற்கே உங்களுக்குப் பொழுது சரியாயிருக்கிறது. இதில் என்னுடைய அபிப்பிராயத்தைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. நான் இன்னும் கொஞ்சநாள் இங்கேயே இருந்தால் எனக்கு இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் பார்த்து நிச்சயிக்கும் பெண்ணையே நான் ஒப்புக் கொள்ளும் நிலைமை வந்துவிடும். அதற்கு முன்பே நான் பம்பாய்க்குக் கிளம்புவதுதான் நல்லது'' என்று படபடவென்று பேசினான்.

''உனக்கு இஷ்டமில்லாத இடத்தில் நான் ஒருபோதும் கலியாணம் செய்து வைக்க மாட்டேன். நீ அதற்காகப் பயந்து கொண்டு பம்பாய்க்குப் போக வேண்டாம்'' என்று கூறினார்.

''நீங்கள் சொல்லுவது வாஸ்தவமானால் இரண்டு நாளைக்கு முன் ஒரு பெரியவர் வந்திருந்தாரே அவருடைய பேத்தியைப் போய்ப் பார்த்து விட்டு வரலாமா!'' என்று கேட்டான் பலராமன்.

''வந்தவரைப் பார்த்தால் நம்முடைய அந்தஸ்துக்குத் தகுந்தபடி வரதட்சிணை கொடுத்துக் கலியாணம் செய்து கொடுக்கும் நிலைமை உள்ளவர் போல் எனக்குப் படவில்லை. அந்தக் கிழவர் போகும்போது ஏதாவது சொக்குப்பொடி போட்டு விட்டுப் போனாரா, என்ன!'' என்று பரிகாசமாகக் கேட்டார் அவன் தகப்பனார்.

''அப்படியானால், கொஞ்சம் முன்னால் எனக்கு இஷ்டமில்லாத இடத்தில் கலியாணம் செய்து வைக்க மாட்டேன் என்று நீங்கள் கூறியதின் அர்த்தம் என்ன!'' என்றான் பலராமன்.

''உன் இஷ்டம்போல் நீ பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. நாலு விஷயங்களையும் யோசித்துத்தான் இந்த மாதிரிக் காரியங்களில் முடிவுக்கு வரவேண்டும்'' என்றார் பத்மனாபன்.

''நான் முதலில் கூறியது சரியாகப் போய் விட்டது. உங்கள் விருப்பப்படிதான் நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று வெளிப்படையாகக் கூறிவிடுங்கள். மனத்தில் ஒன்றை நினைத்துக் கொண்டு வெளியில் வேறொன்றை நீங்கள் கூறுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்றான் பலராமன்.

பத்மனாபனின் பேச்சிலிருந்த முரண்பாட்டை அவருக்குப் புரியும்படிக் காட்டிக் காட்டினான்.

*for Luxuriant growth of Hair*




எப்பொழுதும்
உபயோகியுங்கள்

காஸ்ட்ரால்

பரிசுத்தமான
ஆமணக்கெண்ணெயில்
தயாரித்தது.

நறுமணத்துடன் கூடியது. கவர்ச்சிகரமான பாட்டில்களில் உள்ளது

CASTOROL

A Calchemico Product

மதராஸ் ஆபீஸ்:

5/149, பிராட்வே

ஜி. டி., மதராஸ்



தி
யுனைடெட்
கமர்ஷியல்
பாங்க் லிட்.,

செலுத்தப்பட்ட
மூலதனம் 2-கோடி

ரிஸர்வ் நிதி
67½ லக்ஷம்.

●

இந்தியா, பாகிஸ்தான், பர்மா, மலாயா முதலிய நாடுகளில் எல்லா முக்கிய நகரங்களிலும், ஹாங்காங்கிலும் கிளைகளும், உலகெங்கிலும் ஏஜன்டுகளும் உள்ள இந்த பாங்கு இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உங்களுக்கு எல்லாவித பாங்கு வசதிகளும் அளிக்கவல்லது.

●

தலைமை ஆபீஸ்: கல்கத்தா.

INVEST IN OUR
3-YEAR
Cash Certificates

## உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

# ஜில்லெட்

## உபயோகிக்கிறார்கள்...





ஒரு தனவந்தர் ப்ளூ ஜில்லெட்டை விட உயர்ந்தாக பிளேடை வாங்க முடியாது. ஆயினும் இதன் விலை மிகவும் சரசமாயிருக்கிறது. இந்த புகழ்பெற்ற பிளேடுகள் நீடித்தகாலம் உழைப்பதால் ஒவ்வொரு மனிதனும் சமமான சுகபோகத்தை அனுபவிக்க முடியும். ப்ளூ ஜில்லெட் பிளேடுகளையே வாங்குங்கள். (மின்சாரத்தால் கெட்டியாக்கப்பட்டதும் பிரத்தியேகமாக பதப்படுத்தப்பட்டதுமான எஃகில் தயாரித்தது). உங்கள் நாகரிகமான தோற்றத்திலும் வாழ்க்கையில் வெற்றிபெற்ற மனிதர்களிடையே நீங்களும் இடம் பெறுங்கள்.

# ப்ளூ ஜில்லெட் பிளேடுகள்

**5 பிளேடுகளுக்கு 14 அணா**

உள்ளே அலுவலாக இருந்த அவர் மனைவி பார்வதியைப் பெயர் சொல்லி அழைத்தார் பத்மனாபன். அவளைப் பார்த்து "உன் பிள்ளையின் முரண்டைப் பார்த்தாயா! இரண்டு நாட்களுக்கு முன்னால் உறவு முறை கொண்டாடிக் கொண்டு வந்திருந்தாரே ஒரு கிழவர். அந்தக் கிழவரின் பேத்தி அலமுவைப் போய்ப் பார்த்து விட்டு—ஏன், கல்யாணத்தைக்கூட நிச்சயித்துக் கொண்டு வரவேண்டுமாம் இவனுக்கு. அவன் யோசனை சரியானதுதானா என்று நீயே சொல்லு" என்றார் சற்று படபடப்பாக.

"அம்மாவுக்கு அவளுடைய சொந்த அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் அளவுக்கு நீங்கள் சுதந்திரம் கொடுத்திருக்கிறீர்களா என்ன! உங்கள் கோபத்துக்குப் பயந்து கொண்டு உங்கள் பக்கம் தான் பேசுவார்கள்" என்றான் பலராமன்.

"நிலைமையை விளக்கிச் சொல்லி விட்டேன். இதில் கோபமோ, தாபமோ எனக்குக் கிடையாது. அவள் அபிப்பிராயம் என்ன என்று அவள் தாராளமாகச் சொல்லட்டும்" என்றார் பத்மனாபன்.

பார்வதி சற்றுத் தயங்கினாள். பிறகு அவள் பத்மனாபனைப் பார்த்து "உங்கள் பேச்சைக் கேட்காத பலராமன் என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கப் போகிறானா என்ன! நம்முடைய புத்திமதியை மதிக்காமல் போனால் அதனால் வரும் லாப நஷ்டத்தை அவன் காலடைவில் அனுபவித்து விட்டுப் போகிறான். அவன் சின்னக் குழந்தையில்லை. அவன் இஷ்டத்துக்குக் குறுக்காக நாம் ஏன் நிற்க வேண்டும்" என்று சமயோசிதமாகப் பதிலுரைத்தாள் பார்வதி.

இதற்குமேல் பத்மனாபனால் ஒன்றும் பேச முடியவில்லை. பலராமனைப் பார்த்து "சரி, உன் இஷ்டம்போல் உனக்கு அந்தப் பெண் பிடித்திருந்தால் அவளையே கலியாணம் செய்துகொள். பிறகு குற்றம் குறை ஒன்றும் சொல்லாதே. நாளைக்கே வேண்டுமானாலும் பெண்ணைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம்" என்று கூறி அன்றைய பேச்சுக்கு முடிவு கட்டினார்.

அடுத்த நாள் பத்மனாபன், பார்வதி, பலராமன், இம்மூவரும் கிருஷ்ணமூர்த்தி சர்மா இருந்த கிராமத்தை அடைந்தனர். வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றதும் தாத்தாதான் வந்து விட்டார் என்று எண்ணி அலமு வாசலுக்கு வந்தாள். ஆனால் வண்டியிலிருந்து அவளுக்குப் பரிச்சயமில்லாத மூவர் இறங்கவே, உள்ளே சென்று ஜானகியிடம் தகவலைத் தெரிவித்தாள்.

இதற்குள் பார்வதி உள்ளே நுழையவே அவளை அடையாளம் கண்டுகொண்ட ஜானகி வரவேற்றாள். வந்திருந்தவர்களுக்குச் சிற்றுண்டியும் காப்பியும் தயாரிக்கச் சொல்லி அலமுவைச் சமையலறைக்கு அனுப்பி விட்டுப் பார்வதி இருக்குமிடத்துக்குத் திரும்பி வந்தாள் ஜானகி. அலமேலுவைப் பார்த்து விட்டு நிச்சயம் செய்வதற்காக வந்திருப்பதாகவும், இரண்டு நாளைக்கு முன் சர்மா மதுரைக்கு வந்திருந்தபோது அவரிடம் ஏதோ லௌகிக விஷயங்களில் கொடுக்க வேண்டிய சீர், வரதட்சிணை இவைகளைப் பற்றி ஒரு தகவல் தெரிவித்ததாகவும், பிறகு யோசித்துப் பார்த்ததில், அலமுவின் ஜாதகம் அதிர்ஷ்ட ஜாதகமாயிருந்த காரணத்தால், பண விஷயங்களில் முன்பின் இருந்தாலும் பாதகமில்லை என்று எண்ணி அலமுவை நிச்சயம் செய்து விட்டுப் போவதற்காகக் குடும்பத்துடன் வந்ததாகவும் தெரிவித்தாள் பார்வதி வெகு சாதுர்யமாக.



"இனிமேல் உன் தம்பி வீட்டு வாசற்படி ஏறமாட்டேன்; ஆமாம்..."

"என் தம்பியின்மேல் உங்களுக்கு ஏன் அவ்வளவு கோபம்?"

"கோபமில்லை; அவன் வீட்டு வாசற்படி ஒரே பாசி பிடித்து, வழுக்குகிறது. அதிலே சறுக்கிப் 'பொதக்'கென்று விழுந்து விட்டேன்!"

---

இதற்குள் அலமு இலை போட்டு, வந்திருந்தவர்களுக்குச் சிற்றுண்டியும், காப்பியும் தயாராக எடுத்து வைத்துவிட்டு வந்து கூடத்திலிருந்த பலராமன், பத்மனாபன் பார்வதி இவர்களை நமஸ்கரித்தாள். அலமுவின் அழகும் சுறுசுறுப்பும் பலராமனின் மனத்தைக் கவர்ந்து விட்டன. அவள் முகத்தில் துலங்கிய களையும், அவளுடைய அடக்கமான குணமும் பத்மனாபனின் மனத்துக்குப் பிடித்திருந்தன. பார்வதிக்கோ பரிபூர்ண திருப்தி ஏற்பட்டு விட்டது.

அன்று இரவு எட்டு மணி ரயிலில் ஊருக்குத் திரும்பி வந்த கிழவர் கிருஷ்ணமூர்த்தி சர்மா பத்மனாபனின் குடும்பத்தைப் பார்த்தும் ஆச்சரியமடைந்தார். அவருடைய பெண் விவரங்களைத் தெரிவித்ததும் அடுத்த நாள் நடக்க வேண்டிய நிச்சய தாம்பூல வைபவத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளில் கவனம் செலுத்தினார். அதையடுத்த சுப முகூர்த்தத்தில் பலராமனும் அலமுவும் தம்பதிகளானார்கள்.

கலியாண முகூர்த்தத்திற்குச் சற்று முன்பாக பார்வதி தனக்கு நாட்டுப் பெண்ணாக வரவிருக்கும் அலமுவின் காதுகளில் வைரக் கம்மல்களையும் கழுத்திலும் கைகளிலும் விலையுயர்ந்த நகைகளையும் அணிவித்து அழகு பார்த்தாள். விவாகத்துக்கு வந்திருந்த பெண்கள் பார்வதியின் உதார குணத்தைப் பற்றிப் புகழ்ந்த வண்ணமாயிருந்தனர். ஆனால் பார்வதியையும் பலராமனையும் தவிர மற்றவர்களுக்குப் பார்வதி ஒரு காலத்தில் அவள் அத்தான் பரமேஸ்வரனுக்குப் பட்டிருந்த கடனைத் தான் இப்பொழுது திருப்பிக் கொடுக்கிறாள் என்ற ரகசியம் தெரிவதற்கு நியாயமேது!

# ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

## 21. தலைவலி பலவிதம்

உஷ்ணத் தலைவலி, பித்தத் தலைவலி, அஜீர்ணத் தலைவலி, மலச் சிக்கலால் தலைவலி, விஷத் தலைவலி, தூக்கக் குறைவால் தலைவலி, அதிக உழைப்பால் தலைவலி, காது நோய், பல் நோய்களினால் தலைவலி, ஜலதோஷத் தலைவலி, உடல் உறுப்பு மாறுபாட்டினால் தலைவலி, காப்பித் தலைவலி, வீர்ய விரயத்தால் தலைவலி, கண் கோளாறால் தலைவலி இப்படி அநேகவிதத் தலைவலிகள் உண்டு. இவைகளன்றி உடலில் ஏதாவது கோளாறு இருக்கிறது என்பதற்கும் முதலில் அறிகுறியாகத் தலையைத்தான் வலிக்கச் செய்யும். எந்த ஜுரத்தின் ஆரம்பத்திலும் முதலில் தலையைத்தான் வலிக்கும்.

தலை வலிப்பதிலும் பலவிதம் உண்டு. ஒற்றைத் தலைவலி என்பது ஒன்று உண்டு. அது ஒரே பக்கமாக வலிக்கும். இடது பக்கமாகவே வலிப்பதும் உண்டு. வலது பக்கமாகவும் வலிப்பதுண்டு. மூக்கின் மேல் தண்டு, கண் புருவத்தின் மேல் அதிகம் வலிப்பதுண்டு. நெற்றி பூராவும் வலிக்கும். சிலரது நெற்றியில் கடைசியில் இரண்டு கோடியிலுமிருக்கும் பள்ளங்களிலும் வலிக்கும். சிலவித வலி முன் தலைப் பக்கம் வலிக்கும். சில தலை பூராவுக்கும் குடைவது போல் வலிக்கும். சில தலைவலி குனிந்தால் வலிக்கும். சில, பாறாங்கல் கட்டிவிட்டதுபோல் தலை கனத்து வலிக்கும். கழுத்து நரம்புகள் இழுத்து வலிக்கும். சில தலையின் பின்புறம் கனத்துப் பாறாங்கல் வைத்து அழுத்துவதுபோல் வலிக்கும். இவை எல்லாவற்றிற்கும் தனித் தனிக் காரணங்கள் உண்டு.

இக் காரணங்களை அறிந்து அவைகளைப் போக்க வழி செய்வதே சரியான சிகிச்சையாகும். ஆனால் எல்லோரும் அப்படிச் செய்கிறார்களில்லை. தலை வலிக்காக பலவித மருந்துகள் இருக்கின்றன. அவைகளை எடுத்ததற்கெல்லாம் கணக்கின்றி விழுங்குகின்றனர். அநேகமாய் அம்மாதிரி மாத்திரைகள், மருந்துகள் எல்லாமே "காபின்" என்ற உத்தீபன வஸ்துக்களாலும் மற்றும் அதைப் போன்ற வேறு உத்தீபன வஸ்துக்களாலுமே செய்யப்படுகின்றன. அவைகளைச் சாப்பிட்டதும் நரம்புகள் தூண்டப்பட்டுச் சிறிது தலைவலி குறைந்தது போல் ஆகும். அதன் வேகம் குறைந்ததும் மறுபடி ஆரம்பிக்கும். சிலர் இந்த மருந்திலிருக்கும் தூண்டும் சக்தி போதாதென்று உடனே தலைவலி நீங்க காப்பியுடன் மாத்திரைகளையும் விழுங்குவார்கள். காப்பியே உத்தீபன வஸ்துவாகும். அதில் ஏற்கனவே "காபின்" என்ற விஷம் கலக்கப்பட்டிருக்கிறது. மாத்திரையுடன் இக் காப்பியையும் சாப்பிட்டால் நரம்புகளைத் தூண்டச் சொல்ல வேண்டுமா! இரண்டும் சேர்ந்து நல்ல கிளர்ச்சி செய்யும். நரம்புகள் விழிப்படைந்து இரத்தோட்டம் முதலியன சுறு சுறுப் பெய்தும். உடனே வலி விலகி விடும். இதைப் பார்த்துச் சிலர் இம் மாத்திரைகளை வானளாவப் புகழ்கின்றனர். கடவுளின் வரப்பிரசாதமென்று கொண்டாடுகின்றனர். ஆனால் தலைவலி வரும்போதெல்லாம் இம் மாத்திரைகளை விழுங்கி விழுங்கி அதனால் காது மந்தம், இருதயக் கோளாறு, நிரந்தர நரம்புத் தளர்ச்சி, பசியின்மை முதலியன அடைந்தவர்கள் அநேகர் இருக்கின்றனர். முதன் முதலில் சிறுக ஆரம்பித்த இப் பழக்கம் பிறகு முற்றி இரண்டு மூன்று மாத்திரைகளை ஒரே வேளையில் விழுங்கினாலும் தலைவலி அசைந்து கொடுக்காமல் அவதிப்படுகின்றவர்களும் உண்டு. அப்பேர்ப்பட்டவர்களுக்கு அதைவிட வேகமான மருந்தை ஊசி மூலம் ஏற்றுவார்கள். சில நாட்கள்தான் அதன் வேலையும் நடைபெறும். பிறகு அதையும் உடல் மறுத்து, அம் மருந்தினால் மற்றும் பலவித கோளாறுகளுக்கு இரையாவார்கள். பின்பு அதற்காக வைத்தியம் நடக்கும். சிறு மூளை எடுக்கப் போய்க் கடப்பாறையைக் குத்திக் கொண்ட கதையாய்க் கடைசியில் விழிப்பார்கள்.

சிலருக்குக் காப்பி குடித்தால் தலைவலி போய் விடும். ஆகவே தலைவலிக்கும் போதெல்லாம் காப்பியை அடிக்கடி குடித்துக்கொண்டே யிருப்பார்கள். ஒரு நாளைக்கு எட்டுத் தடவை, பத்துத் தடவை கூடக் காப்பியைக் குடிப்பவர்களுண்டு. டீயும் அம்மாதிரியே, தலைவலிக்குப் பல தடவை குடிப்பார்கள். இவைகளாலும் முடியாமல் போகும்போதுதான் மருந்தையும் கூடச் சேர்த்துச் சாப்பிடுவார்கள்.

காப்பி ஆகட்டும், டீ ஆகட்டும், மருந்து வகைகளாகட்டும் எல்லாமுமே உத்தீபனத்தைக் கொடுக்கும். தூண்டுவிக்கும் குணம் படைத்தது என்பதில் சந்தேகமில்லை. இவைகளை உபயோகிப்பது எப்படி இருக்கிறதென்றால், சண்டி மாட்டைச் சாட்டை கொண்டு விளாசி வேலை வாங்குவதைப் போல் இருக்கிறது. எவ்வளவு சண்டித்தனம் செய்கின்றதோ எவ்வளவு அதிக தலை வலிக்கின்றதோ அவ்வளவிற்கும் சாட்டை என்னும் மருந்து அதிகம் உபயோகமாகின்றது. ஆனால் சண்டி மாடும், அடிபட்டுப் பட்டு உடல் காயமேறி அடியைச் சட்டை பண்ணாமல் இன்னும் சண்டித்தனம் பண்ணி நகரவே நகராது. அப்பொழுது அதனால் நமக்கு என்ன உபயோகம்! சரி, வேறு மாட்டை வாங்க வேண்டியதுதான் என்று முடிவுசெய்து வேறு மாட்டையும் வாங்கி விடுவோம். ஆனால் நரம்புகள் பலவீனப்பட்டு அதற்கு உத்தீபன வஸ்துக்களைக் கொடுத்து எத்தனை நாள் தான் சுறு சுறுப்புண்டாக்க முடியும்! அதுவும் ஒருநாள் வேலைசெய்ய மாட்டேன் என்று எந்த மருந்துக்கும் அசைந்து கொடுக்கச் சக்தியில்லாமல் சண்டித்தனம் செய்யும். அப்பொழுது நம்மால் என்ன செய்ய முடியும்! மாட்டை மாற்றியதுபோல நரம்புகளை மாற்ற முடியுமா! அதுதான் உடலுடன் ஒட்டியதாயிற்றே!

ஆகவே, இம்மாதிரி எல்லாவிதக் கோளாறுகளுக்கும் ஆசனவழியே சிறந்த வழியாகும்; இயற்கை வழியுமாகும். எந்தெந்த விதத்தில் தலைவலி வந்தாலும், எப்படி வந்தாலும், எம்மாதிரி வலித்தாலும் அத்தனைக்கும் ஆசனங்களே நிரந்தரமாய்ப் பரிகாரம் அளிக்கவல்லது. அதில் முக்கியமாய்ச் சிரசாசனத்துக்கே அம் மகிமை பூராவும் உண்டு. மற்றும் புஜங்க, சலப, பஸ்சிமோத்தானா, சர்வாங்காசனம் முதலியன அதற்குத் துணைசெய்யும். சிரசாசனம் செய்யும்போது நரம்புகளின் ஏக சக்ராதிபதியாகிய பிட்யூடரிக்கு

நிறைய ரத்தம் கிடைக்கிறது. அதனால் பிட்யூடரி எப்பொழுதும் ஆரோக்கியமாய் இருக்கிறது. பிட்யூடரி ஆரோக்கியமாய் இருந்தால் அதன் ஆளுகைக்கு உட்பட்ட நரம்புகள் எப்பொழுதும் என்றும் சுறு சுறுப்பாய் இருக்கும். பலவித மருந்துகளினால் ஏற்படும் சுறுசுறுப்பைவிட சிரசாசனத்தினால் ஏற்படும் சுறுசுறுப்பு ஸ்திரமானது. மருந்துகள் உடனே தூண்டிப் பிறகு பலவீனத்தைக் கொடுக்கும். ஆனால் சிரசாசனம் தூண்டுவதுடன் பலவீனம் இருந்தாலும் போக்கடிக்கும். அது கானல் நீர்; இதுவே ஊற்று.

ஆனால் வாழ்க்கையில் பல மாறுதல்களில் அவ்வப்போது சிறிது தாக்கப்படலாம். அது இயற்கை. ஆனால் ஆசனம் பழகாத மற்றவர்கள் அதிகம் வருந்துவதைப்போல வருந்த நேரிடாது. லேசாய் சிறிய உபசாரங்களைச் செய்து அவைகளை மாற்றி விடலாம்.

சிலருக்கு உஷ்ணத்தினால் தலை வலிக்கும். அதற்கென்று குளிர்ந்த பிரதேசமான உதகமண்டலத்துக்கு ஓடமுடியுமா! வெய்யிலில் அலைந்தால் சிலருக்குத் தலை வலிக்கும். அவர்கள் அப்படிப் போகாவிட்டால் வேலை நடப்பதெப்படி! அப்படிப் பட்டவர்கள் எலுமிச்சை பானம், காரம், தாளிப்பு, உப்பு முதலியவைகளைச் சேர்க்காமல் நீர்மோர், இளநீர் போன்ற உபசாரங்களை அருந்திக்கொண்டு தினமும் சிரசாசனம் செய்து வருவார்களானால் உஷ்ணத் தலைவலியே வராது.

பித்தத் தலைவலி வந்தால், உணவு சரிவர ஜீரணமாகாமல் வாந்தி வருவது போலிருக்கும். தலைவலி இருக்க இருக்க அதிகமாகிக் கொண்டே போகும். அப்பொழுது கைகொடுத்து வாந்தி செய்துவிட்டு எலுமிச்சை பானம் சிறிது அருந்தி ஒருவேளை பட்டினி போட்டுவிட்டால் தலைவலி மறைந்து விடும். அவர்களும் சிரசாசனம் செய்து ஒழுங்கான ஆகாரம் சாப்பிட்டு வந்தால் இம்மாதிரி வலிகளே வராது.

அஜீரணத்தால் தலைவலித்தால் அதற்கு ஒரு வேளை பட்டினி போட்டால் சரியாய் விடும். மலச்சிக்கலினால் தலைவலித்தால் அதற்குச் சிரசாசனந்தான் ஏற்றது. சிரசாசனம், மயூராசனம் போன்றவைகளைப் பழகப் பழக மலச் சிக்கல் மறைந்து விடும். சிலர் படுப்பதற்கு முன்பும், படுக்கையை விட்டு எழுந்ததும் மலப்பிரவிர்த்திக்காக ஏதாவது மலமிளக்கி மருந்துகளை உட்கொள்ளுவார்கள். அவர்கள் அவைகளை உபயோகித்தால்தான் மலச்சிக்கல் போகும். எப்பொழுதாவது மறந்தோ அல்லது மருந்து இல்லாமலோ போய்விட்டால் இவர்கள் பாடு திண்டாட்டந்தான். தலைவலி பொறுக்காமல் அவதிப்படுவார்கள். இப்படியெல்லாம் எப்பொழுதும் அவதிக்கு ஆளாகாமல், காசைச் செலவு செய்யாமல் சுகமாய் இருக்க வேண்டுமானால் சிரசாசனம் செய்ய வேண்டும்.

விஷத் தலைவலி மலச் சிக்கலினால் மலத்திலுள்ள விஷம் ரத்தத்தில் உறிஞ்சப்பட்டு ரத்தம் விஷமடைந்தும் உண்டாகும். சாப்பிட்ட உணவு இரைப்பை, குடல்களில் தங்கி அவ்விடம் அழுகி அதன் விஷம் ரத்தத்தில் கலப்பதினாலும் தலை வலிக்கும். பொதுவாய் ரத்தத்தில் விஷக் கலப்பினால் உண்டாகும். தவறுதலான ஆகாரத்தாலும் உண்டாகும். இதற்கு இரத்தம் சுத்தமானாலன்றித் தலைவலி போகாது. இதற்குச் சர்வாங்காசனம் செய்து, பிறகு சிரசாசனம் செய்யவேண்டும். சர்வாங்காசனத்தில் பாராதைராய்ட் விஷத்தை மாற்றும். சிரசாசனத்தில் மூத்திரக்காய்களைப் பலப்படுத்தி ரத்தத்திலுள்ள விஷங்களை வெளியேற்றும். இவ்விரண்டும் நடைபெற


## உங்களுக்குகந்த சைகிள்கள்

மொத்த விலையிலும் தவணைகளில் செலுத்தும் சலுகையுடனும் புதிய சைகிள்களை வாங்குங்கள். யாவும் புத்தம்புதியது.


இந்தச் சலுகையை நழுவவிடாது நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். விலையின் 25 சத விதம் முன்னதாகவும் பாக்கியை ஐந்து மாதாந்திரத் தவணைகளாகவும் செலுத்தலாம்.

ஹிந்த் சைகிள் ரூ. 155/- இங்கிலீஷ் சைகிள் ரூ. 185/-
பிலிப்ஸ் ரூ. 230/- ஹெர்குலஸ் ரூ. 240/-
பி. எஸ். ஏ. ரூ. 255/- ராலே (பச்சை) ரூ. 365/-



உங்களுக்கு அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரும் முழு விலாஸமும் எழுதி நிபந்தனைகளுக் குட்பட்டு உடனேயே டெலிவரி எடுத்துக் கொள்ளுங்கள். புதிய டன்லப் டயர்கள், டியூப்கள், புதிய ஒரிஜினல் பார்ட்டுகள் எல்லாம் புத்தம் புதியவை என்பதற்கு உத்தரவாதம். உடனேயே ஆர்டர் செய்யுங்கள்.

**JUPITER TRADING CO.**
**P.BAG.16602.CALCUTTA-4**



கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பிறந்த ஊராகிய தேரூரில், பிறர் உதவி எதிர்பாராமல் அவ்வூர் வாசிகளே நாற்பதாயிரம் ரூபாய் செலவில் எழுப்பிய மேற்கண்ட கவிமணி நினைவு நிலையத்தை இந்த ஜூன் மாதம் 6-ந் தேதி சென்னை ராஜதானிக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் கே. கனகசபாபதிப் பிள்ளையவர்கள் திறந்து வைத்தார்கள். அவ் விழாவில் திரு உமைதாணுப் பிள்ளையவர்கள் பாடிய வாழ்த்துப்பாவைக் கீழே தருகிறோம்:

ஏரின் முழக்கமே எங்கும் முழங்கியோழும்
பேரும் புகழும் மலிந்த பேரூராம் — தேரூரில்
சித்தங் கவருமிந்த தே. வி. திருநிலையம்
நித்தமும் வாழ்க நிலைத்து!

---

வேண்டியிருப்பதால் சர்வாங்காசனம், சிரசாசனம் இரண்டையும் கட்டாயம் செய்ய வேண்டும்.

களைப்பினால் ஏற்படும் தலைவலி சாதாரணமாய் நரம்பு பலவீனத்தினால் உண்டாவது. அதற்குச் சிரசாசனம் விமோசன மளிக்கும். நரம்பைப் பலப்படுத்தும் தொழில் சிரசாசனத்தில் நடைபெறுகின்றது. அதிக உழைப்பினால் ஏற்பட்ட தலைவலியைத் தடுக்க உழைப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று சுலபமாய்ச் சொல்லி விடலாம். நேரம் போகவில்லையே என்று ஏதாவது பொழுது போக்கில் நாட்களைக் கடத்துபவர்கள் சிலர் ஒரு பக்கம் இருந்தாலும் எவ்வளவு உழைத்தும் குடும்பத்தை நடத்த முடியவில்லையே என்பாரும் ஒரு பக்கம் இருக்கிறார்கள். இவர்கள் உலகில் பெரும்பாலும் இருக்கிறார்கள். உழைப்பாளிகளால்தான் உலகம் வாழ்கின்றது. அவர்களைப் போய் உழைப்பைக் குறைத்துக் கொள் என்று வைத்தியர்கள் சொல்லும் பாணியில் சொல்லலாம். ஆனால் நடைமுறையில் அசாத்தியம். அதற்குப் பதில் அதிக உழைப்பிற்குச் சக்தியை அளிப்பதே சிறந்த முறையாகும். சிலர் புகை குடிப்பதும், பொடி போடுவதும், புகையிலையை மெல்லுவதும் இந்த அதிக உழைப்பைச் சமாளிக்கவே; உழைப்பிற்கு ஊக்கமளிக்கவே. ஆனால் இப் பழக்கமானது அவர்களை அதிகம் உழைக்கச் செய்தாலும் சில வருஷங்களில் அதற்கே அடிமையாகித் தங்கள் உடற் கூறுகளையே கெடுத்துக் கொள்ளுகின்றார்கள். ஆனால் சிரசாசனம் செய்து வந்தால் எவ்வளவு அதிக உழைப்பானாலும் அவ்வளவுக்கும் ஈடுகொடுக்கும். களைப்பென்பதே ஏற்படாது. பாட்டரியில் மின்சாரம் நிரப்பினதைப் போல நிரப்பிவிடும். எந்த வேலையும் ஓய்வில்லாமல் சுறுசுறுப்பாய்ச் செய்ய முடியும். அதிக உழைப்பென்ற பிரச்னையோ தலைவலி என்பதோ தலைகாட்டாது.

தூக்கக் குறைவினால் தலை வலி ஏற்பட்டால் சிறிது தூங்கினதும் விலகிவிடும். ஒரு மருந்தும் தேவை இல்லை. காது நோய், பல்வலி முதலியவற்றினால் தலை வலித்தால் அதற்கு அந்நோய்க்கு வேண்டிய மருந்தை உபயோகித்துப் போக்க வேண்டும். தவிர அதற்குச் சிரசாசனம் செய்யக் கூடாது. சிரசில் எந்த பாகத்தில் வலித்தாலும் சிரசாசனம் செய்யக் கூடாது. காது, கண், பல், தலை முதலியன வலிக்கும்போது சிரசாசனம் கட்டாயம் செய்யக் கூடாது. முதலிலேயே சிரசாசனம் செய்து வந்திருந்தால் இவைகள் வராமல் தடுத்திருக்கலாம். வந்த பின் மருந்துகளை உபயோகித்துப் போக்கடித்து அதன் பின் தான் சிரசாசனம் செய்யலாம். நுரைதோஷத்துக்குச் சாம்பிராணி தூபம், சித்தரத்தை கஷாயம் போன்றவைகளை உபசாரமாகச் செய்து சிரசாசனம் செய்யலாம். கண் கோளாறினால் தலை வலித்தால் உடனே கண்ணாடி போட்டுக் கொண்டு சிரசாசனம் செய்து வந்தால் சில நாட்களில் தலைவலியும் போய்விடும். கண்ணாடியும் எடுத்து விடலாம். காப்பிக் குடியினால் தலை வலித்தால், காப்பிக் குடிப்பதைச் சிறுகச் சிறுகக் குறைத்துக் கொண்டு சிரசாசனம் செய்து வந்தால் காப்பியை முற்றும் நீக்கி விடுவதுடன் தலைவலியும் வராது. வீரியம் அதிகம் செலவழிப்பதனால் தலைவலி உண்டானால், அவர்கள் 20, 40 நாட்கள் என்று பிரம்மச்சரியம் அடிக்கடி அனுஷ்டித்துக் கொண்டு சிரசாசனம் செய்து வந்தால் வீரியம் சக்தி பெறும்; தலைவலி மறையும்; ஆரோக்கியமும் பெருகும். (தொடரும்)



பியர்ஸ் டால்கம் பௌடர் உபயோகியுங்கள்
முகத்திற்கு — இளம் சிவப்பு நிறம். மிருதுவானது. மிக நேர்த்தியான தூள்
உடலுக்கு — வியர்வையை உறிஞ்சுகிறது. ஆறுதலளிக்கிறது. புத்துணர்ச்சியைத்தருகிறது
குழந்தைக்கு — போரிக் பௌடர் சேர்ந்தது. சருமத்தில் புண், எரிச்சல் ஏற்படாமல் தடுக்கிறது
பியர்ஸ்
டால்கம்
பௌடர்
ஒன்றில் 3 பௌடர்கள் சேர்ந்தது
மகிழ்ச்சிதரும் நறுமணம் கொண்டது
PEARS
TALCUM
POWDER
பியர்ஸ்
அழகுதரும்
அசல் கிளிசரின் சேர்ந்த சோப்
PTP. 6-50 TM

# விற்பனை ரகசியம்

**ஜகந்நாதன்**

திடீரென்று மாரியம்மன் சில்க் எம்போரியத்துக்கு பெயரும் புகழும் ஏற்பட்டுவிட்டது. ஊரில் உள்ள பெண்கள் எல்லாம் மாரியம்மன் சில்க் எம்போரியத்தைப் பற்றியே பேச ஆரம்பித்து விட்டார்கள். புதிதாக முத்து என்று ஒரு வாலிபன் வந்திருக்கிறானே அவன் கை ராசிக்காரன். அவன் கையால் துணி வாங்கினால் போதும். நமக்கு மேலும் துணிகள் சேரும். நல்ல துணிகளாகவும் தருகிறான் என்று பேசிக் கொண்டார்கள்.

மற்ற ஜவுளிக் கடைக்காரர்கள் காதுகளில் இந்தச் செய்தி விழுந்தது. அவர்கள் எப்படியாவது முத்துவை தங்கள் கடைக்கு அழைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்ய ஆரம்பித்து முத்துவிடம் நெருங்கினார்கள்.

இந்த முயற்சி மாரியம்மன் சில்க் எம்போரியத்தின் முதலாளிக்குத் தெரிந்துவிட்டது. அவர் ஒரு தரம் யோசனை செய்து பார்த்தார். முத்து போய் விட்டால் பிறகு நமக்கு எப்படி வியாபாரம் நடக்கும். அடாடா! எவ்வளவு கெட்டிக்காரப் பையன். எத்தனை வருஷமாக விற்காமல் கிடந்த பழைய துணிகளை எல்லாம் விற்று விட்டானே. அவனிடம் ஜனங்கள் எவ்வளவு அன்போடு இருக்கிறார்கள். வரும்போதே முத்து இருக்கிறானா! என்று கேட்டுக் கொண்டே அல்லவா வருகிறார்கள். அவனை நாம் இழந்து விடுவதா! கூடாது. கூடவே கூடாது. அது முட்டாள்தனம்!

மறுநாள் மாரியம்மன் ஸில்க் எம்போரியத்தின் முதலாளி செல்வரங்கம் ஆனந்தம் பொங்க கடைக்கு வந்தார். வந்தவுடன் "முத்து!" என்று மலர்ந்த முகத்துடன் கூப்பிட்டார்.

கடைச் சிப்பந்தி முத்து ஓடி வந்து நின்றான்.

"உன் சாமர்த்தியம் அபாரம் போ!" நீ வேலைக்கு வந்து இரண்டு மாதங்கள் தானே ஆகின்றன. அதற்குள் நீ மட்டும் ரூபாய் பத்தாயிரத்துக்குத் துணி விற்பனை செய்திருக்கிறாய்! அதற்காக உன் சம்பளத்தை இரண்டு மடங்காக உயர்த்தி யிருக்கிறேன்!" என்றார்.

முத்து மகிழ்ச்சி பொங்க கையைப் பிசைந்து கொண்டு "தங்கள் தயவு" என்றான்.

முத்துவுக்கு வயது இருபதுதான் இருக்கும். ஆள் வாட்ட சாட்டமாக இருப்பான். செக்கச் செவேலென்று ராஜகுமாரன் மாதிரி இருப்பான். சிரித்த முகம். சுருள் சுருளான கேசத்தை அழகாக வாரி விட்டுக் கொண்டிருப்பான். முத்து போன்ற தன் முப்பத்திரண்டு பற்களையும் காட்டி அவன் சிரிக்கும்போது எல்லாரும் அவனிடமே சென்று தனக்கு வேண்டிய துணிகளைக் கேட்பார்கள்.

இந்த ஒரு காரணம் மட்டும் போதுமா! இரண்டு மாதத்துக்குள் பத்தாயிரம் ரூபாய் வியாபாரம் செய்வதற்கு. அவனிடம் வேறு ஏதோ ரகசியம் இருக்க வேண்டும் என்று மற்ற எல்லா கடைச் சிப்பந்திகளும் நினைத்தார்கள். கடைசியில் முத்துவையே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியது என்று அவனிடம் சென்றார்கள்.

"என்ன பொடியை போட்டு முதலாளியை மயக்கினாய்! அதுவும் கடைக்கு வருபவர்களெல்லாம் உன்னிடமே வருகிறார்கள்! நாங்கள் கெஞ்சினாலும் கொஞ்சினாலும் கூட எங்களிடம் வர மாட்டேன் என்கிறார்களே! சொல்லேன்! நாங்களும் நீ பெறுவது போல் இரட்டிப்புச் சம்பளம் பெறக் கூடாதா! எங்களுக்கு இந்த உதவியையாவது நீ செய்யக் கூடாதா!" என்று அழாக் குறையாகக் கேட்டார்கள்.

முத்து ஒரு முறை அவர்களைப் பார்த்தான். கல கல வென்று வாய் விட்டுச் சிரித்தான்.

"நான் என்னுடைய ரகசியத்தைச் சொன்னால் அதனால் என்னுடைய பிழைப்புக்கே ஆபத்து வந்துவிடும். நான் சொல்ல மாட்டேன்" என்றான்.

சிப்பந்திகள் எல்லாரும் முத்துவின் மோவாய்க் கட்டையைப் பிடித்துக் கெஞ்சினார்கள். அவன் ரகசியத்தை வெளியில் விடுவதில்லை என்று சாட்சாத் மாரியம்மன்மீது ஆணை வைத்துச் சத்தியம் செய்தார்கள். பிறகு முத்து சொன்னான்:

"என்னிடம் முதலாளியை மயக்குவதற்குப் பொடியும் இல்லை, ஒன்றும் இல்லை! நீங்கள் முதலாளிக்கு லாபம் சம்பாதித்துக் கொடுப்பதாக எண்ணிக்கொண்டு முக்கால் கெஜம் துணியை ஒரு கெஜம் என்று கொடுக்கிறீர்கள். நான் அப்படிச் செய்வ தில்லை. ஒன்றரை கெஜம் துணியை முக்கால் கெஜமாகவே அளந்து கொடுக்கிறேன். அதனால்தான் எல்லாரும் என்னிடம் திரும்பத் திரும்ப வருகிறார்கள்! இதுதான் என் விற்பனையின் இரகசியம்" என்று சொன்னான்.


## ஹோமியோபதி

ஹோமியோபதி வைத்திய சாஸ்திரத்தைத் தமிழிலோ ஆங்கிலத்திலோ தபால் மூலம் குறைந்த செலவில் படித்து சன்னத்து பெற்று டாக்டர் ஆக இப்பொழுது நல்ல சந்தர்ப்பம். முழு விபரங்களுக்கு உடனே எழுதவும்.

தென் இந்தியாவின் முதலாவதும் மிகப் பெரியதுமான ஹோமியோபதி ஸ்தாபனம்.

**இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்**

கும்பகோணம் (K)



# பூகம்பம்

எஸ். ஆர்.

வழக்கம் போலவே அன்று கடற்கரைக்குப் போகும்போது அத்தை "நேரங் கழித்து வராதே! சீக்கிரம் வந்துவிடு!" என்று சொல்லி அனுப்பினாள். "ஆகட்டும்" என்று சொல்லிவிட்டுக் கடற் கரைக்கு வந்தேன். எனக்குக் கடற்கரையைப் போல மன அமைதி கொடுக்கும் இடம் வேறு ஒன்று இல்லை. அங்கு வந்து சற்று நேரம் உட்கார்ந்திருந்தால்தான் என் மனத்தில் ஒரு சாந்தி ஏற்படும்.

கடல் அலைகளையும் நீல வானத்தையும் மனிதர்களின் கூட்டத்தையும் பார்த்துக் கொண்டு நேரம் போவதில் நினைவின்றி உட்கார்ந்திருந்தேன்.

அப்போது என்னை நோக்கிப் பத்து வயது மதிக்கத் தக்க சிறுமி ஒருத்தியும் நாற்பது வயதுக்கு மேற்பட்ட பெரியவர் ஒருவரும் வந்து கொண்டிருந்தனர். அந்தச் சிறு பெண்ணின் முகத்திலேதான் என்ன களை? கருப்பாகத்தான் இருந்தாள். ஆனால் அந்தக் கருமையிலும் ஒரு கவர்ச்சி இருந்தது.

அவள் கழுத்திலே அழுக்கடைந்த ஒரு கறுப்புக் கயிறு. அதிலே நசுங்கி உயிரிழந்த ஒரு தாயத்து. கை விரலிலே ஒரு பீங்கான் மோதிரம். இதுதான் அவளை அலங்கரித்த நகைகள். இருந்தும் அவள் முகத்திலே ஒரு சாந்தி நிலவியது. உடலிலே ஒரு தெய்வீக சக்தி உருவெடுத்து ஓடியது. ஆனால் அவள் கண்களிலே ஒரு ஏக்கம். முகத்திலே ஒரு விவரந் தெரியாத கவலை.

அச் சிறுமியுடன் வந்தவர், அவள் தகப்பனுயிருக்கலாம் என்ற குறி அச் சிறுமியின் முகச் சாயலிலிருந்து கண்டுபிடிக்க முடிந்தது. அந்தப் பெரியவரின் வலது கால் கொஞ்சம் ஊன முற்றிருந்தது. அவர்கள் என்னை நெருங்க நெருங்கத்தான் அவர்கள் இருவரையும் பிணைத்திருக்கும் கோலை கவனித்தேன். அச் சிறுமி முன்னே அந்தக் கோலை ஒரு பக்கம் பிடித்துச் செல்ல, பின்னே மற்றொரு பக்கத்தைப் பிடித்துக்கொண்டு அப் பெரியவர் நடந்து வந்தார். பாவம்! கண்கள் இரண்டையும் இழந்து விட்ட அப்பாவி அவர்.

அவரைக் கண்டதும் அவர் மீது என்னையும் அறியாமல் ஏதோ ஒரு இரக்கம் உண்டாகியது; வாஞ்சை பிறந்தது.

கண்ணை இழந்தால் மனிதன் மனிதனாக வாழவே முடியாதா? ஆம் முடியாதுதான். அதிலும் ஒரு ஏழை வாழ முடியுமா? முடியவே முடியாது!

அச் சிறுமி பாட ஆரம்பித்தாள். அந்தப் பெரியவர் இடையிடையே பிச்சை கேட்க ஆரம்பித்தார். அச் சிறுமியின் குரலிலேதான் என்ன இனிமை? அவள் குயிலின் நிறத்தை அடைந்ததுபோல், அதன் குரலையும் பெற்றிருந்தாள். அவள் குரலை நான் பூராவும் கேட்டுக்கொண்டிருக்கலாம். அதிலே அவ்வளவு வசீகரம். அவ்வளவு குழைவு. அவ்வளவு இனிமை இருந்தது! இருவர் வாயிலிருந்தும் சேர்ந்தாற்போல் "உங்களால் ஏதாவது முடிந்த தர்மம் செய்யுங்கள்" என்ற தீனவார்த்தைகள் எழுந்தன. அந்தச் சொற்களிலே ஏழ்மையின் எல்லையைக் கண்டது என் மனம். ஒரு அணா காசை எடுத்து அச்சிறுமியின் கையில் கொடுத்தேன். அச் சிறுமி உடனே அதை அந்தப் பெரியவரிடம் கொடுத்து விட்டாள். அவர் அந்த நாணயத்தை ஒரு தரம் தடவிப் பார்த்தார். மதிப்பைத் தெரிந்துகொண்டு எனக்கு நன்றி தெரிவித்தார்.

அவர் சொன்ன வார்த்தைகள் என் இதயத்தைத் தொட்டுவிட்டன. ஏதோ வாழ்ந்து கெட்டவர் போல எனக்குத் தோன்றியது. நான் அவரை அணுகி அவருடைய வரலாற்றை விசாரிக்க ஆரம்பித்தேன். முதலில் அவர் சொல்ல விரும்பவில்லை. என்னுடைய வற்புறுத்தலுக்கு இணங்கி அவர் தம் வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தார். அவர் கூறிய கதை இதுதான்:

அவர் ஒரு தொழிற் சாலையின் தலைவர்; அஸ்ஸாம் மாகாணத்தில் வேலையிலிருந்து வந்தார். தம் மனைவியுடன் இரண்டு குழந்தைகளுடன் சகல சௌகரியங்களுடன் வாழ்ந்து வந்தார். குடும்பத்திலே கஷ்டம் என்ன என்பதை அவர்கள் அறியார்கள். குடும்ப வாழ்க்கையிலே தன் இன்ப லக்ஷியங்களை நிறைவேற்றிக் கொண்டார். அவருடைய இன்ப வாழ்வு கடவுளுக்குக்கூட பொறுக்கவில்லை. சுக வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைப்பது போல், அவர் வசித்த அஸ்ஸாமில் மாபெரும் பூகம்பம் உண்டாயிற்று. பூகம்பம் என்றால் சாமானியமானதா? பூமித்தாய் தன்மீது சுமத்தப்பட்டு வரும் பாவத்தின் பளுவைத் தாங்க முடியாமல் குமுறிக் கதறி விட்டாள். பூமாதேவி பாரம் தாங்காமல் பதறினால் பிறகு கேட்பானேன்.

அன்று விடுமுறை தினம். அவர் தம் நண்பர் ஒருவரைப் பார்க்க வெளியில் போயிருந்தார். அவர் மனைவியும் குழந்தைகளும் வீட்டில் இருந்தார்கள். கோடி வீடு திரும்பும்போது திடீரென்று கடகடகட என்று ஒரு பேரோசை! வீதி சுழன்றது. மனிதர்கள் சுழன்றார்கள். மரங்கள் சுற்றிச் சுற்றி வேரோடு வீழ்ந்தன. வீடுகள் அடியோடு பெயர்ந்தன. எங்கும் அலறல் சத்தமும் அபயக் குரலும்தான். அவருக்குத் தலை சுழன்றது. கால்கள் தடுமாறின. கீழே விழுந்து விட்டார். விழுந்தவருக்குத் தன் மனைவி குழந்தைகள் ஞாபகம் வந்துவிட்டது. எப்படியோ சமாளித்துக்கொண்டு எழுந்தார். எல்லோரும் தலைகால் தெரியாமல் பயத்துடனும் நடுக்கத்துடனும் வீட்டை விட்டு அடித்துப் புரண்டுகொண்டு வெளியே ஓடிக்கொண்டிருக்கும்போது, அவர் மட்டும் தன் வீட்டை நோக்கி வெறிபிடித்தவர் போல், துப்பாக்கியிலிருந்து கிளம்பிய குண்டைப் போல ஓடினார்.

திக்குத் தெரியாத அந்தச் சமயத்தில் அவர் தன் வீட்டைத் தேடித் தேடி அலைந்தார் கடைசியில் கண்டு பிடித்தார். எதை? குப்பை மேடாக இடிந்து போயிருந்த தன் வீட்டை. அவர் ஒரு கணம் பித்துப் பிடித்தவர்போல் சிலையாக நின்று விட்டார். திடீரென்று தவிடு பொடியாகியிருந்த தன் வீட்டைப் பார்த்துத் திகைத்து நின்றார். தன் மனைவியையும் குழந்தைகளையும் எப்படித் தேட முடியும்? எங்கோ ஓரிடத்தில் ஈனமான குரலில் முனகல் சத்தம் கேட்டது. அங்கு பாய்ந்து சென்று பார்த்தார். அவருடைய மகன் கற்களுக்கிடையே உயிருடன் மன்றாடிக் கொண்டிருந்தான். அவனை மெதுவாக வெளியில் எடுத்துப் பத்திரமான ஓரிடத்தில் கிடத்தினார். மனைவியையும் மகளையும் தேடத் தொடங்கினார். கடைசியில் கண்டு பிடித்து விட்டார். பாவம்! இரண்டு உயிரற்ற சடலங்களைத்தான் கண்டார். அருமை மனைவி, ஆருயிர் மகள் இருவரையும் ஒரே காலத்தில் இழந்து விட்டார். வீழ்ந்து புரண்டார். அடித்துக் கொண்டார். வாய்விட்டுக் கோவென்று கதறினார். ஆனால் அவருடைய கதறல் அவர்கள் காதில் விழுந்தால்தானே?

விதி அத்துடன் அவரை விடவில்லை. திடீரென்று வானத்தில் ஒரு மின்னல் மின்னியது; இடி இடித்தது. பூமி ஆடியது. பக்கத்திலே பாதி இடிந்து நின்று கொண்டிருந்த வீடு அடியோடு பெயர்ந்து அவர் வீட்டின் பக்கம் சாய்ந்தது. அவர்மீது கல்லும் மண்ணும் வீழ்ந்தன. மிகுந்த சிரமத்துடன் அந்த இடிந்த வீட்டின் மண்ணும் கல்லும் கலந்த குப்பையிலிருந்து வெளியில் வந்தார். தடுமாறி விழுந்தார். காரணம் ஒரு கால் ஊனமாகி விட்டது. கண்கள் ஒளி யிழந்து விட்டன. உயிரற்ற மனைவியின் சடலத்தையும், தன் அருமை மகன் உயிரோடு போராடிக் கொண்டிருந்ததையும் பார்க்க முடியாத பாவியாகி விட்டார். மனைவி மகளோடு தன் கண்களையும் பறிகொடுத்து விட்டார். அவரால் இனி உலகில் எதையுமே பார்க்க முடியாது! பகலும் இரவும் அவருக்கு ஒன்றுதான். வெண்மையும், கருமையும் ஒன்றுதான். அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய அருமை மகனைக்கூட ஒருமுறை ஆசை தீர அவரால் பார்க்க முடியாது!

பிறகு அவர் தன் நண்பர் ஒருவரின் உதவியால் சென்னையை அடைந்து தன்னுடைய தங்கை வீட்டைத் தேடி அலைந்தார். அவள் பழைய இடத்தில் இல்லை. அவளைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் முடியவில்லை. இவ்வுலகிலே துணையின்றித் தவித்தார். அவர் கண்களும் இழந்து, காலும் முடமாகி, தன் மகனைத் தவிர வேறு துணையின்றித் தவித்தார். அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மகனைக் காப்பாற்ற வேண்டும். அவனுக்காக எப்படியாவது பாடுபட்டு, உழைத்து அவனைக் காப்பாற்றியாக வேண்டும். அதற்காக அவர் உயிருடன் வாழத்தான் வேண்டும். கண்ணிருந்தால் கூலி வேலையாவது செய்து காப்பாற்றலாம். அதையும்தான் கடவுள் அபகரித்துக் கொண்டு போய் விட்டாரே?

வேறு வழியின்றிக் கடற்கரையிலே பிச்சை எடுக்க ஆரம்பித்தாராம். தன் மகனுக்காக உயிர் வாழ்கிறாராம். "வேறு வழியில் என்னால் தொழில் செய்து காப்பாற்ற முடியாததால் பிச்சை எடுத்து என் கண்மணியைக் காப்பாற்றுகிறேன்" என்று பொங்கி வரும் கண்ணீருடன் தன் சோகக் கதையைச் சொல்ல முடியாமல் சொல்லி முடித்தார்.

இந்தக் கதையைக் கேட்டு முடிந்ததும் "தங்கள் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"கோபிநாத்!" என்றார். "இது லீலாவா?" என்று கேட்டேன். "ஆமாம்!" என்றார்.

"அப்பா! நான்தான் உங்கள் புதல்வன்" என்று கூறி அவரை அணைத்துக் கொண்டேன். லீலா "அண்ணா!" என்று என் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

"அப்பா! நான் ஆஸ்பத்திரியில் ஒரு படுக்கையில் இருக்கும்போதுதான் எனக்கு நினைவு வந்தது. என்னை விசாரித்தார்கள். தங்கள் விலாசத்தையும், சென்னையில் இருக்கும் அத்தையின் விலாசத்தையும் கொடுத்தேன். தாங்கள் எல்லாம் பூகம்பத்தில் மடிந்துவிட்டதாகக் கூறி என்னைச் சென்னையிலிருக்கும் அத்தையின் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். அத்தை இப்பொழுது பழைய இடத்தில் இல்லை. திருவல்லிக்கேணியில் இருக்கிறார்கள்" என்று சொன்னேன்.

என் தகப்பனார் கண்களில் கண்ணீர் வழிய என்னைத் தடவித் தடவிப் பார்த்துக் கட்டிப் பிடித்துக் கொண்டார். அந்தச் சமயத்தில் நான் அடைந்த இன்பத்தை இன்றுவரை என் வாழ்க்கையில் அடைந்ததில்லை.

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

# நாளுக்கு நாள் அதிக தெளிவானதும் அழகானதுமான சருமம்



ரெக்ஸோனாவிலி
ருக்கும் 'கேடில்'
உங்கள் சருமத்திற்கு
புது ஆரோக்கியமும்
எழிலும் தரும்.




# ரெக்ஸோனா

'கேடில்'* கலந்த சோப்
இது ஒன்றே

* சருமத்தை மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர் இது.

ரெக்ஸோனா ப்ரொப்ரைடரி லிட்.க்காக இந்தியாவில் தயாரித்தது RP. 85-50 TM

REGD. No. M 4392

*Registered as a newspaper in Ceylon*

